T. 2910

கழக வெளியீடு : ௮௯௯

வேளாளர் நாகரிகம்

பல்லாவரம்
பொதுநிலைக் கழக ஆசிரியர்
மறைத்திரு. சுவாமி வேதாசலம்
என்னும்
மறைமலையடிகள்
இயற்றியது

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: (Author) 1923.
Reprints: 1927; (Kazhagam) July, 1957.

VELALAR NAGARIGAM

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras 1. C. 1100.

பதிப்புரை

வேளாளர் நாகரிகம் என்பது பண்டைத் தமிழ்நாட்டுச் சிறந்த பண்பாகும். இப் பண்பு ஏறத்தாழ வரலாற்றுக் காலங்களுக்கு மிகமிக முந்திய காலந்தொட்டு வளர்ந்து வந்த சிறந்த தனித்தமிழ்ப் பண்பாகும். வேளாண்மைக் குரியார் வேளாளராவர். இவர்களுடைய சிறப்பு ஐயாயிரத் தைந்நூறு ஆண்டுகளுக்குமுன் தோன்றிய ஒல்காப்பெரும் புகழ்த் தொல்காப்பியத்தின்கண் கிளந்தெடுத்து ஓதப் பட்டுள்ளது. வேளாண்மை பிறர் நலத்துக்குப் பெருந் துணைபுரியும் பெருந்தகைமை. வேள்—சிறந்த விருப்பம். ஆண்மை—நிறைவேறத் துணைபுரிதல். தொல்காப்பியத் திற்குப் பின்னுள்ள சிறந்த தமிழ்நூல்கள் அனைத்தும் அங்ஙனமே ஓதுகின்றன.

வேளாளர்கள் தொன்றுதொட்டே தாழ்வில் உழைப் பினராய், நுண் உணர்வினராய், அறவோராய், ஈவு இரக்கத் திறவோராய், 'காடுகெடுத்து நாடாக்கிக் குளந்தொட்டு வளம்படுத்து' வாழ்வுமிகு செல்வராய் நாடுநகர் அமைத்துக் கடவுள்வழிபாட்டுக்கு அந்தணரையும், காவற்கு வேந்த ரையும், கொண்டுவிற்பதற்கு வணிகரையும் தம்மின் நின்றே பிரித்தெடுத்தமைத்துள்ளனர். தங்கள் தொழிற்கு உதவியாக ஏனைக் குடிமக்களையும் தொழில் பற்றிப் பதி னெண் வகையினராகப் பாகுபடுத்தி அவர்தம் வாழ்க் கைக்கு வேண்டும் துணைகளை உற்றுழி உதவிப் போற்றி வந்தனர்.

வேட்டையாடும் வேடரையும், ஆடுமாடு மேய்க்கும் இடையரையும் போன்று நிலையிலா வாழ்க்கை வாழ்ந்துவந்த ஆரியமக்களை ஈவிரக்கங்களால் காப்பாற்றி முதற்கண் நிலை பெறப் பேணினவர் வேளாளரே யாவர். அவர்கள் செய்து வந்த கொலைபுலை வேள்விகளை அருவருத்துக் கொலை புலை யில்லாத தங்கள் இரக்க மனப்பான்மையால் அவர்களும் நல்வழிப்படுதற் பொருட்டு அவர்கள் மொழியில் உயர்ந்த பல நூற்களை ஆக்கிக் கொடுத்தோரும் வேளாளரே யாவர்.

இவ்வுண்மைகள் அனைத்தும் தெள்ளத் தெளியப் புலனாகும்படி மறைத்திரு **மறைமலையடிகளார் 'வேளாளர் நாகரிகம்'** எனப் பெயரிய சிறந்த இந்நூலை உண்மை கண்டுணர்ந்து ஒழுகும்படி யாத்து வெளிப்படுத்தி யுள்ளார்கள். இந் நூலின்கண் பல வேறு சிறந்த தலைப்புக்கள் அமைத்துள்ளார்கள். இந்நூல், பழந் தமிழர் பண்பாடுகளும், அவர்கள் உலக நாகரிக வளர்ச்சிக்கு எத்துணை அடிப்படை யுதவியாளராக இருந்தனர்களென்பதும், வந்தேறுங்குடிகளாகிய ஆரியர்க்கு எவ்வெவ் வகையிலெல்லாம் உதவிபுரிந்து அவர்களை உயர்த்தினர்கள் என்பதும், சிறந்த முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் ஒருவனையே வழிபட்டு வந்துள்ளார் என்பதும், தொழில்பற்றி யன்றிப் பிறப்புப்பற்றிச் சாதி வேறுபாடுகள் கொண்டிலர் என்பதும், ஐவகை வேள்விகளை ஆற்றிய அந்தணர் என்பதும் பிறவும் வலிய சான்றுகளுடன் நிலைநாட்டியமைமையை நுவல்கின்றது. அதனால், இந்நூல் தொன்மைத் தமிழர் நாகரிகம், தமிழ் நாட்டுவளம், தமிழ்நூற் சிறப்பு, தமிழ்நூற்களின் ஆராய்ச்சி, காலவரையறை, ஆரியர் வருகை, அவர்கள் நிலைமை, அவர்களுக்குத் தமிழ் நன்மக்கள் ஆற்றிய கைம்மாறுகருதா உதவி, உலகமுற்றுக்கும் உதவிய ஒப்பில்லாப் பல்வகை உதவிகள் எல்லாவற்றையும் செவ்வனே விளக்கித் திகழும் ஒரு சிறந்த வரலாற்றுநூல் ஆகும். இதனைக் கற்று உண்மைவழியொழுகி இன்புறுதல் சிறப்பாகும்.

அடிகளார் இதற்கு முன் இந்நூலை இரண்டு பதிப்பு வெளியிட்டுள்ளார்கள் அவர்கள் எழுதிவைத்துள்ள கசுரு௦ செப்டெம்பர் கூ-ஆம் நாள் விருப்ப ஆவணத்தின்படி வாரமுறையில் பல நூல்கள் நம் கழகவழியாக வெளிவந்துள்ளன. அவைகளைத் தொடர்ந்து இந்நூல் மூன்றும் பதிப்பாக வெளிவருகின்றது. இன்னும் பல நூல் தொடர்ந்து வெளிவரும். இதனை வாங்கிப் போற்றுமாறு விழைகின்றனம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

முதற்பதிப்பு முகவுரை

கி. பி. ௧௯௨௧-ஆம் ஆண்டு மார்கழித் திங்களில் யாம் யாழ்ப்பாணத்தில் உள்ள அன்பர்களால் அழைக்கப் பட்டு, அங்கே விரிவுரை நிகழ்த்தச் சென்று, யாழ்ப்பாண நகரத்தும் அதனையடுத்துள்ள பல ஊர்களிலுஞ் சைவசித் தாந்தப் பொருள்களையுந், தமிழ்ச் சிறப்புகளையுந் எடுத்துப் பல விரிவுரைகள் நிகழ்த்தினேம். அவ்விரிவுரைகளை யெல் லாம் பெருந்திரளான அன்பர்கள் ஆங்காங்கு வந்துகேட்டு இன்புற்றனர். கடைமுறையாக யாம் யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்படுதற்குச் சில நாட்களின்முன், அஃதாவது கி. பி. ௧௯௨௨-ஆம் ஆண்டு தைத்திங்கள் முதல்நாள் அன்று யாழ்ப்பாண நகரமண்டபத்தில் மாலை ௯-மணிக்குத் துவங்கித் 'தமிழர்நாகரிகம்' என்னும் பொருளை விரித்துப் பேசினேம். தமிழர்நாகரிகத்தின் வரலாறுகளை அவ்விரி வுரை புதுமுறை ஆராய்ச்சியால் நன்கெடுத்து விளக்கின மையால், அவற்றை ஆண்டுக் குழுமியிருந்து கேட்ட அறி வுடை அவையத்தார் எல்லாரும் அவ் விரிவுரையை மிக வியந்து பாராட்டினர். அவ் விரிவுரையின் அருமை இலங் கையிலும், யாழ்ப்பாணத்து நன்மக்கள் மிகுதியாய்ச் சென்று குடியேறி வாழும் மலாய்நாடுகளிலும் விரைந்து பரவலாயிற்று. யாழ்ப்பாணம், கந்தரோடையிலிருந்து சென்று மலாய்நாட்டில் இரெங்கான் என்னும் ஊரிற் புகைவண்டிநிலை உதவித் தலைவராய் (Assistant station master) அலுவலில் அமர்ந்திருந்த திருவாளர் ந. சி. கந்தையா அவர்கள் சைவசித்தாந்த உண்மைகளையுந் தமி ழின் அரும்பெருஞ் சிறப்புக்களையும் நாடெங்கும் பரவச் செய்வதில் நிரம்பக் கருத்தூன்றினவர்களாதலின் 'தமிழர் நாகரிகம்' என்னும் அவ் விரிவுரையை ஒரு நூலாக அச்

சிட்டு வெளியிடும்படி எம்மைக் கேட்டுக் கொண்டதோடு, செகமத் என்னும் ஊரில் அரசினர் மருத்துவ விடுதியில் (Government hospital) அலுவல் பார்க்குந் திருவாளர் குமாரசாமி அவர்களை ஊக்கி, அவர்களும் அவர்களின் நண்பர் சிலருமாக ஒருங்குசேர்ந்து அந் நூற் பதிப்புச் செலவுக்கு இருநூறு ரூபா பொருளுதவி செய்யுமாறும் புரிந்திட்டார்கள். தமிழில் இத்தகைய புதுமுறை ஆராய்ச்சி நூல்கள் வெளிவருதற்கு உதவி செய்தலினுஞ் சிறந்த அறம் வேறு இல்லை. இவ் வுயர்ந்த அறத்தைச் செய்து வருந் திருக் கந்தையா அவர்கட்கும், அவர்களின் நண்பர் திருக் குமாரசாமி அவர்கட்கும் அவர்களோடு ஒத்து உதவிசெய்த மற்ற நண்பர்கட்கும் யாம் பெரிதும் நன்றி செலுத்துகின்றேம்.

கல்விவளர்ச்சியின் பொருட்டுப் பல நன்முயற்சிகளை யாம் இடைவிடாது செய்துவருதலால், 'தமிழர்நாகரிகம்' என்னும் இதனை எழுதி வெளியிடுதற்கு அமயம் வாயாது ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகள் கழிந்தன. பிறகு, நாட்டுக்கோட்டைச் செட்டிமார் முன்னேற்றத்தின் பொருட்டு வெளியிடப்படுந் 'தனவைசிய ஊழியன்' என்னும் இதழில் (கி. பி. கசுஉரு-ஆம் ஆண்டு ஆடித்திங்கள் கஉ-ஆம் நாள்) அதன் தலைவர் வேளாளர் உண்மை வரலாறுகளை அறியாமல் அவரைச் 'சூத்திரர்' என்று இகழ்ந்து, தம் மரபினரில் உள்ள ஆடவர்கட்கு வேளாள மரபினரிலிருந்து பெண்கள் எடுத்து மணஞ்செய்வித்துக் கொள்ளுதலைப் பற்றிப் பேசியவிடத்துத், தாம் வைசிய வகுப்பினராகலான் தம்மவர் தம்மிற் றாழ்ந்த சூத்திர வகுப்பினரான வேளாளரிடமிருந்து பெண்கள் எடுத்து மணஞ் செய்துகொள்ளல் முறையேயாம் என்று எழுதிய கட்டுரை ஒன்றைக் கண்டேம்.

அப்போது நமக்கு நண்பராயுள்ள சைவவேளாளர் சிலர் வேளாளரின் பண்டை உண்மை வரலாறுகளை ஆராய்ந்து ஒரு கட்டுரை விரைந்தெழுதும்படி எம்மைப் பெரிதுவேண்டினர். பண்டைக்காலந் தொட்டு நம் செந் தமிழ் மக்களில் நாகரிகத்தாற் சிறந்து வாழ்ந்து, தமிழ் மொழியையுஞ் சிவ வழிபாட்டையும் நிலைநிறுத்தி ஆரிய ரையுந் திருத்தி நல்வழிப் படுத்தினோர் வேளாளரே என் பது எமது ஆராய்ச்சியில் நன்கு புலப்பட்டமையால், 'வேளாளர் யாவர்?' என்பதனை விளக்குகையில் 'தமிழ ரது நாகரிகத்'தையும் உடன் விளக்க வேண்டுவது இன்றி யமையாததாய்த் தானே வந்து கூடிற்று. ஆகவே, யாம் முன்னர் எழுதக் குறித்திருந்த 'தமிழர் நாகரிகம்' என்ப தனையும் இதன்கண் விரித்து விளக்க இடம் பெற்றேம். ஆரியர் இவ் விந்திய நாட்டிற் புகும் முன்னரே தமிழர் நாகரிக வாழ்க்கையில் முதிர்ச்சிபெற்று நின்று, பின்னர்த் தம்மொடு வந்து கலந்த அவ் வாரியரைத் திருத்தினமை இதன்கண் நன்கெடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. பழந் தமிழ் நூலாராய்ச்சியின்றி, வடநூற் பயிற்சி ஒன்றேயுடை யார் ஆரியரை உயர்த்துத் தமிழரை இழித்துக்கூறுவன வெல்லாம் பொருந்தாமையுந், தமிழரே எவ்வாற்றானும் உயர்ந்தோராதலும் இவைதம்மை ஆராயாதார்க்குப் புதுமை யாய்த் தோன்றினும், யாம் ஆராய்ந்து சான்றுகளோடு உரைப்பனவற்றை நடுநிலை வழாது நின்று காண்பார்க்கு எம் உரையின் மெய்ம்மைதானே விளங்குதல் திண்ணம்.

இரண்டாம்பதிப்பு முகவுரை

இவ் விரண்டாம் பதிப்பிற் பல புதியகுறிப்புகள் விரித் தெழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முற்பதிப்பில்இருந்த வைகளிற் சிற்சில திருத்தங்களுஞ் செய்யப்பட்டிருக் கின்றன. இவ் வாற்ருல் இந்நூல் முன்னையிலும் ஒருபங்கு கூடப்பெருகிவிட்டது.

இனித் தமிழருட் சிறந்த வேளாளர் நாகரிகத்தை விளக்கவே தமிழரது நாகரிகமுந் தானே பெறப்படுமாக லானும், முதற் பதிப்புக்கு வைத்த 'தமிழர் நாகரிகம்' அல்லது 'வேளாளர் யாவர்?' என்னும் இருபெயர்கள் வழங்குதற்கு இடர் பயத்தலானும் இப் பதிப்புக்கு அவ் விரண்டையும் உள்ளடக்கிய 'வேளாளர் நாகரிகம்' என்ப தனைப் பெயராக அமைத்தாம்.

பல்லாவரம்,
கி. பி. கசுஉஎ,
ஆடிமீ ரு.

மறைமலையடிகள்.



மறைமலையடிகள்

1875 — 1950

PREFACE TO THE SECOND EDITION

The first edition of this work was published in November, 1923 and 500 copies of it were sold within four years—a period too short for the sale of a Tamil book of this kind which, in contradistinction to the current fashion for a mixed kind of Tamil prose, is written in a scrupulously pure Tamil style, setting forth at the same time views of a revolutionary character in the sphere of social, religious and historical ideas of the Tamil people. In point of truth the views themselves are neither strange nor revolutionary, being the outcome of a comparative study carefully made of both Tamil and Sanscrit literature. If they appear strange surely they must appear so, to many, it is because their knowledge is partial: and where that knowledge claims to be derived from the literatures of the two languages, it does not go beyond the pale of modern Puranic literature of the two.

No doubt, beneath the legendary accounts of Puranas critics of trenchant intellect—such are rarely to be met with in this country, may detect facts of great value for studying the history of ancient people, but others, who are untrained in the critical and historica methods of looking at things and events, take every bit of them as so many literal truths. People in every country, before they get the benefits of an excellent education, are more credulous than children, since children cannot rest satisfied in a blind belief with respect to a

certain thing or an occurrence, unless they receive satisfying answers to all they want to know about the one or the other. This, the self-interested persons know full well and such of them as are versed in the knowledge of a language know also how to work upon the people's fancy by making that language as a medium for their artifices. This was how the huge body of Puranic literature came to be written first in Sanscrit and then translated into Tamil and other living languages in India. Sanscrit being the dead and not the spoken language understood by people, the authors of the Puranas adopted it as the means best suited to their purpose and said in them all that was to be said in their own interest and to the great disadvantage of the people. And as if to give a finishing and successful stroke to their artifices, not only did they uniformly conceal their human authorship of the Puranas, but they also attributed the composition of which invariably to Divine Beings such as Siva and Narayana. Being Divine utterances their contents were taught to be unquestionable under penalty of hell-fire to unbelievers. Having thus established the unquestionable authority of the Puranas, their authors, selecting for the basis a few cardinal facts, did their work excellently by exaggerating them so much out of all proportion, twisting them so much out of their shape, and combining them so much out of all harmony, that, to the degree they succeeded in the abnormal treatment of the subject, the legends appealed the more strongly to the minds of the credulous and led their belief to take

deep root in them. As a consequence of this artifice people have become slaves to blind faith and ineradicable superstition and they completely distrust that there can be anything as reason to question about their truth or untruth. Nay the very attitude of a person who dares to doubt the legend is repugnant to the people and they are sure to look upon him as their bitterest enemy and heretic. The hold which the Puranas thus have on the mind of the people and the intensity of the prejudice which they foster in their mind against a man who doubts them, one may best learn by noting the strength of the Puranic belief even in those who have imbibed western education.

Under this deplorable condition it is no wonder that Tamil books written on modern critical and historical lines should seem strange and revolutionary to men of such mental calibre. Still the sale of 500 copies within four years betokens a brightening prospect and authors of my type need not despair of a better condition in future. For man cannot always rest in ignorance. He is ever prompted by an innate desire to learn the nature and constitution of things and ascertain the causes that are at work within the heart of things. He is ever free to think on life and life-struggles and no power can restrain his thought nor can hold it eternally captive. To this freedom of thinking, the spread of western education is contributing its mighty and accelerating influence and we, on our part must do our utmost to bring the people to think for themselves and examine

their beliefs in the light of reason before communicating them to their youngsters.

The object of this book is to examine some of the important beliefs that have clustered around the mind of the people and to rid it of such beliefs as are likely to mislead them or to hamper their progress in the path of right knowledge.

In the first place attention is directed to Velalas the civilized agricultural class of the Tamils, and to their origin, and organization. From references made to them, their occupation and social rank, in Tholkappiam the most ancient and existing Tamil work in all its entirety, the age of which goes back to 3500 B. C., it is shown that at a time when all the people except those who lived all along the equatorial regions, were leading the life of hunters or nomads, these Velalas attained perfection in the art of agriculture, built towns and strong forts, had been priests, kings and traders and by means of navigation occupied the whole of India settling in rich and fertile countries along the coasts and river-sides.

When the Aryan hordes came from the north-west of Punjab and poured forth into the interior, it was the ten velala kings then ruling in the north that stopped their advance (See Ragozin's Vedic India). When, after a while, the intellectual section of the Aryan nomads found it impossible to get admission into the Tamilian territories by combating with their kings, they sought it by peaceful means and were thereafter accorded a cordial

reception and admitted to a high rank in the Tamilian society. To the few stray hymns brought by the Aryans, the Tamil kings added a greater number of their own: and, in imitation of their four Tamil vedas which treated of practical ethics, political economy love and heavenly bliss, they classified the hymns into four books and called them 'Vedas'. That the word 'Veda' is a pure Tamil one, is etymologically proved in the body of this work, by grouping a number of pure Tamil words all having a single root 'Ve' and cognate in meaning, After a century of laborious research in linguistic matters. oriental scholars in Europe and America are just now coming to recognise that not only was the Tamilian civilization prior to the Aryan but it was also much superior to it and was the great formative force that modelled it after its own (See Prof. Rapson's Ancient India).

In spite of the repeated efforts which the Tamil kings made, as is manifest from the Chandogya, Kaushitaki and other upanishads, to divert the attention of the Aryan priests from costly rituals supposed to bring only transient benefits, to a contemplation of eternal verities and problems of philosophy, the priests were persisting in the performance of bloody sacrifices so much so that as time went on their conduct became more and more revolting to the delicate feelings of the humanitarian Velalas.

So long as the Tamil kings and rich trading communities yielded to the wishes and devices of the Aryan

priests and lavished their wealth on rituals, the latter pretended to treat them with utmost respect by designating them the Kshatriyas and Vaisyas, while in fact they were positing themselves openly at the zenith in the scale of castes and casting down others secretly much below. But from the moment the kings and nobles and others began to suspect the motives of the Aryan priests, these supercilious parasites gave up their bloody sacrifices but devised other effective means to suck the wealth of the Tamilians. At first they brought all the Tamils under the three denominations of Kshatriya, Vaisya and Sudra, formulated rigid rules exclusively for each and ordained numerous ceremonies to each, doing all these, by means of a dead language Sanscrit, as if in the interest of the people's welfare both here and hereafter, but in fact to establish their supremacy among them and make their priestly help seem indispensable to the people for consulting them on such rules and conducting the ceremonies prescribed for each. In this design the Aryan priests succeeded so well, that the Tamils whether kings or nobles, rich or poor, learned or ignorant, all have become thorough slaves not only to the Aryan priests but also to all who have joined the Aryan fold and bear the name of brahmin. After this the further work of vilifying the Tamils was made much easier, and all those who, in course of time, styled themselves brahmins discovered it, to their great benefit and glory, to efface the three grades of distinctions into which their predecessors classed the Tamils and to put them all together under the generic term

'Sudra' which means but the contemptuous menials as a whole. But in the Tamil country nobody will call himself a Sudra, or a Vaisya or a Kshatriya. The Tamils are either agriculturists or traders, artisans or labourers; every class of people follows a hereditary profession and calls themselves by the name of that profession. But quite recently a great mania has taken possession of some classes of people whose professions though much useful are looked upon as low by brahmins and their imitators, to bring themselves under the Aryan appellations of brahmin, kshatriya and vaisya and escape being called the Sudra. This mania is setting one class against the other and breeds enmity and arrogance in each. All this mischief and injustice of classifying the Tamils who are above such caste iniquities, are exposed in the body of this treatise and remedial measures suggested.

Unfortunately owing to the influence of brahmins, European scholars devoted their attention exclusively to Sanscrit and have acquired the most amazing mastery in it. Had they spent half so much labour on ancient Tamil classics, the result would have been more fruitful, more accurate and more enlightening in the study of ancient Indian history, philosophy and religion. My truth dispel falsehood and love overcome hate and God who is both truth and love illumine our understanding!

The Sacred Order of Love,
Pallavaram, 20th July, 1927.

VEDACHALAM.

பொருளடக்கம்

		பக்கம்
க.	வேளாளர் வாழ்க்கை	க
உ.	ஆரிய நாற்சாதியில் வேளாளர் அடங்காமை	ச
௩.	ஆரியர் வேளாளரைத் தாழ்த்தச்செய்த சூழ்ச்சி	கூ
ச.	அருளும் அன்பும் உடையாரே உயர்ந்த சாதியார்	உஉ
ரு.	ஆரியப் பார்ப்பனர் தமிழையுஞ் சிவத்தையும் இகழ்தல்	உஅ
சு.	வேளாளர் ஆரியத்தையும் பார்ப்பனரையுங் கொண்டாடல்	௩க
எ.	தொல்காப்பியரும் வேளாளரும்	௩ச
அ.	வடநாட்டிற் குடியேறிய வேளாளர்	சக
கூ.	இந்தியாவின் வடமேற்கிற் குடிபுகுந்த ஆரியரின் புலையொழுக்கம்	சச
க0.	வேளாளர் ஆரியரை அருவருத்து ஆரியத்தில் அறிவுநூல்கள் இயற்றினமை	சகூ
கக.	மாயாவாதி ஒருவர் உருத்திரவழிபாடு தமிழரதன்று என்றமை பொருந்தாமை	ருரு
கஉ.	நடுநிலையுடைய ஐரோப்பிய ஆசிரியர் உருத்திர வழிபாடு தமிழரதென்றமை	சுஉ
க௩.	உருத்திரனிலுஞ் சிறந்த சிவத்தைத் தமிழர் மறைத்து வைத்தமை	சுஎ
கச.	தமிழர்கள் 'உபநிடதம்', 'சாங்கியம்' முதலிய அறிவுரை நூல்கள் வகுத்தமை	எ௩
கரு.	இந்திரன் முதலிய பெயர்கள் சிவத்தைக் குறியாமை	எச
கசு.	ஓம் என்னும் பிரணவந் தமிழுக்கே உரித்தாதல்	எஅ
கஎ.	வேளாளர் உபநிடதங்கள் இயற்றினமைக்குச் சான்று	அ0
கஅ.	புராண இதிகாசக் கருத்து	அஉ
ககூ.	ஆரியர் தம்மை உயர்த்தச் செய்த சூழ்ச்சி	அச
உ0.	சேக்கிழாரும் வேளாளரும்	அரு
உக.	பழையவேதங்க ளென்பன தமிழ்மறைகளேயாம்	கூஉ
உஉ.	மக்கட் பிறவியின் இழிபும் ஒப்பும்	ககச
உ௩.	தூயராவார் எல்லாம் வேளாளர் ஆதற்கு உரியர்	ககசு
உச.	ஆரியச்சேர்க்கை தமிழர்க்கும் தமிழ்க்கும் ஆகாது	ககஎ

வேளாளர் நாகரிகம்

க. வேளாளர் வாழ்க்கை

இப்போதிருக்குந் தமிழ்நூல்களில் மிகப் பழையதாகிய தொல்காப்பியத்தில் வேளாளர்களும் அவர்களுக்கே சிறப்பாக உரிய உழவுதொழிலும் ஒருங்கேவைத்துச் சொல்லப் படுதல் பெரிதும் நினைவிற் பதிக்கற்பாற்று. தொல் காப்பியம் ஐயாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட நூலாகையால், அதிற் குறிக்கப்பட்ட வேளாளர்கள், அந் நூலுக்கும் முற்பட்ட காலத்திலேயே அஃதாவது ஆறாயிர ஆண்டுகளுக்கு முன்னரேயே உழவுதொழிலைக் கண்டறிந்து பெருக்கி, அதனால் தாமும் நாகரிகத்திற் சிறந்து, பிறரை யுஞ் சிறப்புறச்செய்து வாழ்ந்தமை புலனாம். ஆடு மாடு மேய்க்குந் தொழிலை மேற்கொண்டு, ஒவ்வொரு காலத்தில் ஒவ்வோரிடத்திற் குடியேறிக், கடைசியாக இப் பரத நாட்டிற் புகுந்த 'ஆரியர்,' அஞ்ஞான்று வடக்கே வாழ்ந்த வேளாளரின் உழவுதொழிற் சிறப்பும், அதனால் அவர் பெற்ற நாகரிக வாழ்க்கையுங் கண்டு வியந்து, அவ் வேளா ளரை அண்டிப் பிழைக்கலாயினர். வேளாளருந் தமக்குள்ள செல்வப் பெருக்காலும், இரக்க நெஞ்சத்தாலுந் தம் பால் வந்து தமது உதவியை அவாவிய ஆரியர்க்கு உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமுந் தந்து பல வாற்றாலும் அவர்களைப் பாதுகாத்துவந்தனர். ஆகவே,

'வேளாளர்' என்னுஞ் சொல் 'ஈகையுடையார்' என்னும் பொருளில் அவர்க்கே வழங்கிவரலாயிற்று. 'வேளாண்மை' என்னுஞ்சொல் இங்ஙனம் பண்டுதொட்டு ஈகைப்பொருளில் வழங்குதல், "வேளாண்மை யுபகாரம் ஈகையும் விளம்பும்" என்னும் பழைய திவாகரச் சூத்திரத்தால் விளங்கும்.

உழவுதொழிலோ மிகவும் வருத்தமான தொன்று. உழவுதொழிலைச் செய்பவர்கட்கே வருத்தம் இன்ன தென்பது தெரியும்; அதனைச் செவ்வையாய்ச் செய்து முடிப்பதற்கோ முன்பின் ஆராயும் நுண்ணறிவு வேண்டும். ஆதலால், அதனைச் செய்வார்க்கே உயர்ந்த அறிவும் அவ் வறிவினைப் பயன்படுத்தும் முறைகளும் விளங்கும். ஆதலினாற்றான், வேளாளர்க்கு இரக்கமும் அறிவும் ஈகையுந் தொன்றுதொட்டுவரும் இயல்புகளாகக் கூறப்படுகின்றன. தம்மையொத்த மக்கள் வறுமையாலும் நோயாலுந் துன்புறக் கண்டால், அவர்க்குள்ள அத் துன்பத்தின் கொடுமையினை நினைந்துருகி, அவைதம்மைப் பொருளாலும் மருந்தாலும் நீக்கவல்லவர்கள் வேளாளர்களே யாவர். பிறர் தரும் பொருளைப்பெற்றுத் தம் மெய்வருந்தாமல் இல்லத்திருந்து இனிது காலங்கழிப்பவர்க்குப், பிறர் படுந்துயர் தெரியாதாகையால் அன்னவர் வறியோர்க்கும் நோயாளர்க்கும் பிறர்க்குஞ் சிறிதும் இரங்கார். ஆதலினாற்றான், வேளாளரல்லாத பிறர் பிறர்க்கு உதவிசெய்தல் அரிதாயிருக்கின்றது. ஈகையும் விருந்தோம்பலும் வேளாளர்க்கே சிறந்தனவாக வைத்து நூல்கள் ஓதுதலும் பின்னே காட்டப்படும்.

இனித், தம்மோடொத்த மக்களின் துயர் களைதலே யன்றி, மக்களினுந் தாழ்ந்த ஆடு மாடு குதிரை கோழி கொக்கு முதலான சிற்றுயிர்கள் படுந் துன்பத்தையும்

நன்குணர்ந்து, அவைகட்குத் தம்மாலும் பிறர் தம்மாலுந் தீங்குநேராதபடி கொல்லா அறத்தை வளர்க்கவல்ல ஆற்றலும் வேளாளர்க்கே உரித்தாயிற்று.

உயிரோடிருக்கும் மக்களுக்கும் மக்களினுந் தாழ்ந்த சிற்றுயிர்களுக்கும் உதவியாற்றுதலோடு அமையாது, தம்மைப் பெற்று வளர்த்துப் பெரியராக்கிய தம் மூதாதைகளின் பேருதவியையும் நினைந்து, அவர்கள் இவ்வுலக வாழ்வைத் துறந்து மறுமையுலகங்கட்குச் சென்றபின்னும், அவர்களது உயிர் தூய பிறவியையோ பிறவியொழிந்து இறைவன் திருவடியையோ அடையுமாறு இறைவனை வேண்டி வழுத்துதலும் வேளாளர்க்கே உரித்தாயிற்று.

இனித், தமதறிவு வளர்ச்சிக்கும் முயற்சியின் ஈடேற்றத்திற்கும் இன்றியமையாத வழிவகைகளைக் காட்டி, அவ்விரண்டினுஞ் சிறந்த தம்முன்னோர்கள் எழுதிவைத்த நூல்களை ஓதி, அவ்வாற்றாற் கல்வியைப் பரவச்செய்தலும் வேளாளர்க்கே சிறந்ததோர் அறமாயிற்று.

ஆகவே, ஈகைக்குப் பெயரான 'வேளாண்மை' என்னுஞ்சொல், அவ் வீகைக்குக் கருவியான 'பயிர்த்தொழிலுக்கும்' பெயராயிற்று. பின்னர் அவ்விரண்டு தொழில்களையும் ஆள்வாரான 'வேளாளர்'க்கும் அது பெயராயிற்று. இவ் வேளாளர் ஏனை மக்களை நோக்கிச் செய்யும் ஈகையும் விருந்தோம்பலும் 'மக்கள்வேள்வி' (மாநுடயாகம்) எனவும், ஏனைச் சிற்றுயிர்களைப் பாதுகாத்தற் பொருட்டு அவர் மேற்கொண்டு ஒழுகுங் கொல்லா அறம் 'உயிர்வேள்வி' (பூதயாகம்) எனவும், இறந்து பட்ட தம் முன்னோரை நோக்கிச் செய்யும் நன்றிக்கடன் 'தென்புலத்தார் வேள்வி' (பிதிர்யாகம்) எனவும், இவ்வாறு பிறர்க்காற்றும் உதவி பயன் தரற்பொருட்டு இறைவனை நோக்கிச்

செய்யும் வழிபாடு 'கடவுள்வேள்வி' (தேவயாகம்) எனவுந், தமக்கும் பிறர்க்கும் அறிவை விளக்கி முயற்சியைப் பயன் பெறுவிக்கும் நூலோதுமுறை 'கலைவேள்வி' (பிரமயாகம்) எனவும் ஆன்றோரால் வகுத்துரைக்கப் பட்டன. எனவே, ஈகையும் ஈகைக்குக் கருவியாவனவும், ஈகையைப் பாராட்டும் நன்றிக்கடனும், ஈகையைப் பயன்படுத்துமாறு வேண்டும் வழிபாடும் 'வேள்வி' என்னும் பெயர்க்கு இயைபுடையவாய் நிற்றல் கண்டுகொள்க. கொல்லாஅறம், சிற்றுயிர்கள் தத்தம் உடம்புகளில் நின்று அறிவு விளங்குதற்கு உதவி செய்வதாகலின், அதுவும் 'வேள்வி' என்னும் பெயர்க்குப் பெரிதும் உரிமை பூண்டு நிற்றல் கண்டுகொள்க. இங்ஙன மாக ஐவகை வேள்விகளையும் ஆள்பவராகலின், பண்டைத் தமிழரில் உழவுதொழிலாற் சிறந்து நாகரிக வாழ்க்கையை வகுத்த நன்மக்கள் 'வேளாளர்' எனப்படுவாராயின ரென்பது.

உழவுதொழிலை யறிந்து அதனைத் திறமையாகச் செய்யத் தெரியாத காலங்களில், மக்கள் உண்ணப் போது மான உணவும் உடுக்கச் செவ்வையான உடையும் இன்றி மிகவும் மிடிப்பட்டு உயிர்வாழ்ந்தனர்; காடுகளிலும் மலை களிலும் உள்ள மான், மரை, கடம்பை, முள்ளம்பன்றி, ஆடு, மாடு முதலான விலங்கினங்களை அளவிறந்த வருத் தத்தோடு வேட்டமாடிக் கொன்று, அவற்றின் இறைச்சி யையும் அரிதிற் கிடைத்த காய் கனி கிழங்குகளையும் அயின்று, தழைகளையுந் தோலையும் உடுத்து, நாகரிகம் இன்னதென்றே தெரியாமல் மலைக்குகைகளிலும் மரப் பொந்துகளிலும் இருந்து காலங்கழித்தனர். எவ்வளவோ தேடித்திரிந்தும் அவ் விலங்குகளும் காய் கனி முதலியன வும் அகப்படாத காலங்களிற் பட்டினியும் பசியுமாயிருந்து அவர்கள் பொறுத்தற்கரிய துன்பத்திற் கழித்த நாட்களும்

பல! வேட்டுவ வாழ்க்கையில் இப்போதும் நாகரிகமின்றி உயிர்வாழும் மலைவாணருங் கானவரும் நிரம்பவும் மிடிப்பட்ட நிலையி லிருத்தலை நாம் இஞ்ஞான்றும் நேரே சென்று காணலாம். இங்ஙனமாகப் பண்டைக்காலத்தில் வறுமையிற் கிடந்துழன்ற மக்களின் கொடுந் துன்பமெல்லாம், உழவு தொழிலை முதன்முதற் கண்டறிந்த அறிவுடை நன்மக்களாலேதாம் நீங்கின. தமிழ்மக்களுள் வேளாளர் உழவு தொழிலைக் கண்டறிந்த பண்டை நாட்களில், எகுபதி, சாலடி முதலான சிற்சில நாடுகளில் உறைந்த மக்கட் பகுதியினர் சிற்சிலரைத் தவிர, ஏனைப் பெரும்பாலார் எல்லாரும் உழவுதொழிலை அறியாராய் வேட்டுவவாழ்க்கையிற் பெரிதும் வறுமைப்பட்டு வாழ்நாட் கழித்தனர். வேளாளர் உழவுதொழிலை நடாத்தி நாகரிகத்தைப் பெருகச் செய்த பண்டைநாளில், ஆரியர் வேட்டுவவாழ்க்கையிலும் ஆடு மாடு மேய்க்கும் இடையர் வாழ்க்கையிலுமே இருந்தனர். அதனாலேதான், ஆரியரும் அவர் வழிப்பட்டாருஞ் செய்த நூல்களில் உழவுதொழில் இழித்துரைக்கப்பட்டிருப்பதோடு, அதனைத் தம் மினத்தவர் எவருஞ் செய்தலாகாதென்னுங் கட்டுப்பாடுங் காணப்படுகின்றது.[1] ஆனால், றமிழ வேளாளரோ அவ் வுழவுதொழிலைத் தமது நுண்ணறிவாற் கண்டுணர்ந்து அதனைச் செவ்வையாகச் செய்து வந்தமையால், அத் தொழில் வேளாளர்க்கே சிறந்ததாக வைத்து வடமொழி தென்மொழியிலுள்ள நூல்களெல்லாம் ஒருமுகமாய் நின்று ஒத்துரைப்பவாயின. இவ்வாறு உழவு தொழிலை வேளாளர்கள் தோற்றுவித்த பிறகுதான் உணவுக்கும் உடைக்கும் உறைவிடத்திற்கும் மிடிப்பட்ட துன்ப வாழ்க்கை நீங்கிற்று; உணவுக்காக விலங்கினங்களைக் கொல்லுங் கொலைத்தொழில் நீங்கிற்று; அளவுக்குமேல்

1. மனு, ௩, ௬௪; ௧0, ௮௩, ௮௪.

விளைந்த நெல் துவரை முதலான பண்டங்களைத் தம்போற் பசியால் வருந்தும் ஏனைமக்கட்கும் பகுத்துக்கொடுக்கும் ஈர நெஞ்சமும் ஈகையுங் கிளைப்பவாயின; விளைந்த பண்டங் களைப் பாதுகாத்து வழங்குதற்கு அரசனும் நாடுநகரங் களுஞ் செல்வமுங் கல்வியும் இன்பவாழ்க்கையும் இறைவன் வழிபாடும் ஒன்றன்மேலொன்றாய்ப் பெருகலாயின. இன்னும் மிகுத்துக்கூற வேண்டுவதென்! இஞ்ஞான்றை மக்கட்கு வந்துள்ள நாகரிக வாழ்வெல்லாம் பண்டும் இன்றும் வேளாளர் கண்டறிந்து நடாத்தும் உழவினால் வந்தனவேயாமென் றுணர்ந்துகொள்ளல் வேண்டும்.

இங்ஙனம் எல்லாத் தொழிலினுஞ் சிறந்ததாய், எல்லார் உயிர்வாழ்க்கைக்கும் இன்றியமையாததாய் உள்ள உழவு தொழிலைப் பண்டுதொட்டு நடாத்திவரும் வேளாளர் கொலையும் புலையும் நீக்கி நாகரிகத்திற் சிறந்தாராய் விளங்கு தலின் அவரது பெருமை பழைய நல்லாசிரியர் இயற்றிய தமிழ்நூல்களிற் பாராட்டப்பட்டிருப்பதோடு, அஃது இன்றுகாறும் மங்காது ஏனையெல்லா வகுப்பினர்க்குரிய பெருமையினும் மிக்கு விளங்காநிற்கின்றது. இவர்கள் தமக்குள்ள அறிவின் றிறத்தாற், காலமறிந்து நிலத்தைத் திருத்தி வளம்படுத்தி நெல் முதலான நன்செய்ப்பயிரும் துவரை முதலான புன்செய்ப்பயிரும் விளைவித்து, அவற் றால் வரும் பயன்களைத் தாமும் உண்டு பிறரும் உண்ணக் கொடுத்து, யாடு மாடு மீன் முதலான மற்றை உயிர்களைக் கொல்லாமலுங், கொன்று அவற்றின் ஊனைத் தின்னாமலும் அருளொழுக்கத்தில் இன்றுகாறுந் தலைநின்று வருகின்றார் கள். இவர்களது உண்மைப் பெருமையினை யுள்ளவா றுணர்ந்தே தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார்,

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி."

எனவும்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்."

எனவும்,

"இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய் தூண் மாலையவர்."

எனவும்,

"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கு நிலை"

எனவும் அருளிச் செய்தனர். ஏனைத் தொழில் செய்வா ரெல்லாந் தம துயிர்வாழ்க்கைக்கு வேளாளரையே நாடி நிற்றலின் அவரை "உலகத்தார்க்கு ஆணி" யென்றார்; பிற தொழில்களைச் செய்வாரெல்லாம் பிறரிட்ட ஊழியஞ் செய்து அவரைத் தொழுதுகொண்டு செல்பவராயிருக்க, வேளாளரோ பிறரெவர்க்கும் ஏவல் புரியாராய்ப் பிறரைத் தம் ஏவல்வழி நிறுத்தித் தமதுரிமையில் மேம்பட்டு வாழு மியல்பின ரென்பது தெரிப்பார் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்றார்; உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத எல்லாப் பொருள்களையும் வேளாளரே விளைப்பவராயிருத் தலின் அவர் பிறரிடத்துச் சென்று இரந்து பெற்றுக் கொள்ள வேண்டுவது எதுவும் இன்றென்பதுந், தம்மை வந்து இரப்பார்க்கு அவர் வேண்டியதொன்றை ஈயவல்ல ரென்பதும் உணர்த்துவார் "இரவார் இரப்பார்க்கொன் றீவர்" என்றார்; இதனால், இரத்தற் றொழிலையே தமக்கு இயல்பாகவுடைய பார்ப்பன மாந்தரும் பிறரும் வேளா ளரைச் சார்ந்தே பிழைப்ப ரென்பது பெற்றாம்; இனி ஐம்புல அவாக்களைத் துவரத்துறந்த துறவோரது தவ வொழுக்கமும் வேளாளரது உதவி இல்லையாயின் நிலைபெறா தென்பார், "உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம், விட்டே மென்பார்க்கு நிலை" என்றார். இனித் தமது

வெண் கொற்றக்குடை நீழலில் உலகத்தைப் பாதுகாக்கும் அரசரது அரசவாழ்க்கையும் வேளாளர்தம் வேளாண் வாழ்க்கையின் கீழ் அடங்கும் என்பதனையும் விளக்கிப்,

"பலகுடை நீழலுந் தங்குடைக் கீழ்க்காண்பர்
அலகுடை நீழ லவர்."

என்று ஓதிய தெய்வத் திருவள்ளுவர் கருத்தை உற்று நோக்கின் வேளாளரினுஞ் சிறந்த இனத்தினர் வேறில்லை யென்பது வெள்ளிடை மலைபோல் விளங்கிக் கிடக்கும். இங்ஙனங் கூறிய திருவள்ளுவனாயனார் கருத்துக்கு இணங்கவே பண்டைத் தமிழ்ப் பாட்டாகிய பட்டினப்பாலை யுள்ளும் அதன் ஆசிரியர் உருத்திரங் கண்ணனார் காவிரிப் பூம்பட்டினத்தி லிருந்த பழைய வேளாளரைப் பற்றிக் கூறுகின்ற விடத்துக்,

"கொலை கடிந்துங் களவு நீக்கியும்
அமரர்ப் பேணியும் ஆவுதி யருத்தியும்
நல்லானொடு பகடுஓம்பியும்
நான்மறையோர் புகழ்பரப்பியும்
பண்ணியம் அட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசைஉழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுஅஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்பநாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉங்
குறைபடாது
பல்பண்டம் பகர்ந்துவீசுந்
தொல்கொண்டித் துவன்று இருக்கை."

என்று கூறினர். கொலைகளவு நீக்கிக் கடவுளரை வணங்கி யும், வேள்விகள் வேட்டும், எருது முதலியவைகளைப்

பாதுகாத்தும், நான்மறை வல்ல அந்தணர்களின் புகழைப் பரப்பியும், விருந்தினர்க்குப் பல பண்டங்களைக் கொடுத்துஞ் சோறு தந்தும், நல்வினையினின்றும் பிறழாத அன்பு சுரக்கும் வாழ்க்கையினையுடைய கலப்பைத் தொழிலை விரும்பும் உழவராகிய வேளாளர் நடுவுநிலையில் நிலைநின்ற சிறந்த உள்ளத்தினராய்ப் பழியை அஞ்சி உண்மையே பேசித் தம்முடைய பண்டங்களையும் பிறருடைய பண்டங்களையும் ஒப்பாகப் பார்த்துத், தாம் பிறர் பொருள்களை விலைகொள்ளுங்கால் விலைக்குமேல் அப் பொருள்களை மிக அளந்து வாங்காமலும், தம் பொருள்களைப் பிறர்க்கு விலைப்படுத்துங்கால் அவர் கொடுக்கும் விலைக்கு அவற்றைக் குறைய அளந்து கொடாமலும் ஊதியத்தை வெளிப் படையாகச் சொல்லி விற்பவர் என்பது இப் பகுதியால் நன்கு விளங்குகின்றது. இதனால், உழவுதொழிலும், அவ்வுழவு தொழிலாற் பெற்ற நெல் துவரை முதலான பல் பண்டங்களை விலைப்படுத்தும் வாணிக வாழ்க்கையும் பண்டு தொட்டு வேளாளர் ஒருவர்க்கே உரியவாய் வருதலுந் தெற்றென விளங்காநிற்கும்.

இனிப், பழமைக் காலந்தொட்டே இரப்போராகிய பார்ப்பனச் சுற்றத்தையும், உலகத்தைப் புரப்போராகிய அரசரையுந் தமது வேளாண் முயற்சியி லிருந்தும் வேளாளர்கள் உண்டாக்கிவந்தனரென்பது சிலப்பதிகாரத்து நாடுகாண் காதையில்,

"பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர் பழவிறல் ஊர்களும்."

(கசஅ - கரு0)

என்று ஆசிரியர் இளங்கோவடிகள் கூறியவாற்றால் நன்கு புலப்படும்.

அதுவேயுமன்றித், தம்முள் நுண்ணறிவாற் சிறந் தாரை அறிவுநூல் ஓதுதற்குந் திருக்கோயில்களிற் கடவுள் வழிபாடு ஆற்றுதற்கும் ஒரு வகுப்பினராகப் பழையநாளி லிருந்தே பிரித்துவைத்தார்கள்; இவர்களே தமிழ்நாட்டு அந்தண ராவர்; இவர்தம்மை இக் காலத்தார் 'ஆதிசைவர்' என்றுங், 'குருக்கள்' 'பட்டர்' 'நம்பியார்' என்றும் அழைப்பர். தமிழ் நாட்டின்கண் உள்ள பழைய திருக் கோயில்களெல்லாந் தமிழ் மக்களால் அமைக்கப்பட்டுத் தமிழர்க்கே உரியவாகி வருதலால், தமிழ வேளாளரினின் றும் அந்தணராகப் பிரித்துவைக்கப்பட்ட இவ் வாதிசைவ வகுப்பாரை யன்றி, ஆரியப் பார்ப்பனர் எவரும் இத் திருக் கோயிலிலுள்ள திருவுருவங்களைத் தொட்டு வழிபாடு செய் தற்கு இடம்பெறாராயினர். இப் பண்டைவழக்கம் இன்று காறும் நடைபெற்று வருதல் காண்க. பழையநாளில் ஆரியப் பார்ப்பனர் ஆ எருது முதலியவற்றைக் கொன்று அவற்றின் இறைச்சியைத் தின்றுவந்தமையின், அவர் தமிழ்நாட்டுக் கோயில்களுள் நுழைதற்கும் இறைவன் திரு வுருவத்தைத் தொடுதற்குந் தகுதியிலாராக ஒதுக்கி வைக்கப் பட்டனர். கொலைத்தொழில் புலைத்தொழில்களைக் கைக் கொண்டு ஒழுகினமை பற்றி வேளாளரால் தாழ்த்தப்பட்ட ஆரியப் பார்ப்பனர் பையப் பைய அவ் விழிதொழில்களைக் கைவிட்டுத், தம்மைத் தாமே உயர்த்துப் பேசிக்கொண்டு, தம்மைத் தாழ்த்திய வேளாளர்களைத் தாமுந் தாழ்த்துதற் பொருட்டு அவரைச் 'சூத்திரர்' என்று வழங்கலாயினர்; அவரை மட்டுமோ! அவ் வேளாளரினின்று பிரிந்த 'ஆதி சைவ அந்தண'ரையுங் கூடச் சூத்திரரெனக் கூறி வருகின் றார்கள்!

இனி, வேளாளர் ஓதுதற்குங் கடவுள்வழிபாடு ஆற்று தற்கும் தம்மினின்று ஓர் அந்தணக் குடியை வகுத்து

வைத்தவாறு போலவே, போர் செய்தற்குரிய ஆற்றலுங் குடிகளைப் பாதுகாத்தற்குரிய அறிவுவலியுமுடைய வேளாண்மக்களைப் பிரித்து அரசாளுதற்கு வைத்தார்கள். பண்டைநாளில் மிழலைக் கூற்றத்தை அரசாண்டவனுங், கொடை கொடுப்பதிற் சிறந்தவனுமான வேள் எவ்வி என்னும் மன்னன் வேளாள வகுப்பினனே யாவன். கடையெழு வள்ளல்களில் ஒருவனும், முந்நூறு ஊரையுடைய பறம்பு நாட்டிற்கும் பறம்பு மலைக்கும் அரசனுஞ், சைவ சமயாசிரியருள் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனாராலே "கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்று பாராட்டி யருளிச்செய்யப்பட்டவனுமாகிய வேள்பாரி என்னும் மன்னனும் வேளாள வகுப்பினனே யாவன்; துவரையை அரசாண்டவனுஞ், சிறந்த கொடையாளியும் ஆகிய இருங்கோவேள் என்னும் அரசனும் வேளாள வகுப்பினனே யாவன். ஒருகாற் குமரிமுதல் இமயம்வரை ஒருமொழி வைத்து உலகாண்ட வேந்தர் பெருமானாகிய சோழன் கரிகாற் பெருவளத்தான், நாங்கூர் வேள் என்னும் வேளாண் தலைவனிடத்துப் பெண்கொண்டமையானும், இக் கரிகாற் சோழனுக்குத் தந்தையாகிய உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி என்னும் மன்னர்பிரான் அழுந்தூர்வேள் என்னும் வேளாண் தலைவன்பால் மகட் கொண்டமையானும் பண்டைநாளிலிருந்த சிறந்த சோழ அரசர்களும் வேளாள வகுப்பினரேயாதல் நன்கு தெளியப் படும். இன்னும் பழைய நாளில் அரசாண்ட வேளாள அரசர்களையெல்லாம் எடுத்துரைக்கப்புகின் இது மிக விரியுமெனஅஞ்சி, அவருட் சிலரையே ஈண்டு எடுத்துக் கூறினம்.

இனி, வேளாளர் தமது உழவு தொழிலால் விளைவித்த பொருள்களை அறவோர்க்குக் கொடுத்தும், அவற்றால் அந்

தணரைப் பாதுகாத்தும், அவை தம்மைத் துறவோர்க்கு எதிர்சென்று வழங்கியும், விருந்தினரை ஏற்று அவர்க்கு அருத்தியும், அவ் வாற்ருனெல்லாங் குறைபடாமல் மிகுந்த பண்டங்களை விலைப்படுத்தும் பொருட்டு, அத் தொழில் செய்தற்கேற்ற கணக்கறிவும் இன்சொல்லும் இயற்கையே வாய்ந்தாராய் உள்ள தம்மினத்தவரில் ஒரு சாராரைப் பிரித்து அவரை வணிகராக நிறுத்துவாராயினர். இங்ஙனம் நிறுத்தப்பட்ட வணிக வேளாளரே தொன்றுதொட்டு இன்றுகாறுங் கொலை புலை முதலியன தவிர்ந்த அறவொழுக் கத்தினராய் 'வேளாண் செட்டிகள்' என்று பெயர்பெற்று வருகின்றனர்.

இனிக், கொலை புலை நீக்கமாட்டாராய் அற வொழுக் கத்திற் ருழ்ந்து நிற்போரான மற்றைத் தமிழ்க் குடிகளைத் தமது உழவுதொழிலுக்குந் தமக்கும் உதவியாகும் பல கைத்தொழில்களைப் புரியும்படி ஏவி, அவர்களைப் பதினெண் வகுப்பினராகப் பிரித்து வைத்தவர்களும் வேளாளர்களே யாவர். அப் பதினெண் வகுப்பினராவார்: கைக்கோளர், தச்சர், கொல்லர், கம்மாளர், தட்டார், கன்னர், செக்கார், மருத்துவர், குயவர், வண்ணர், துன்னர், ஓவியர், பாணர் கூத்தர், நாவிதர், சங்கறுப்பார், பாகர், பறையர் என்பவரே யாவர். இப் பதினெண் வகுப்பினருந் தத்தமக் குரிய தொழில்களைச் செய்துகொண்டு வேளாளர் ஏவல்வழிநின்று அவர்க்கும் அவரது உழவு தொழிலுக்கும் பயன்படுவா ராயிருந்து வாழ்ந்துவருதலைத் தமிழ்நாட்டிலுள்ள வேளாள நத்தங்களில் இன்றும் நேரே காணலாம்.

இங்ஙனமாகத் தமிழகத்தில் முதன்முதல் உழவுதொழி லைக் காணும் நுண்ணறிவும், அதனாற் கொலை புலை தவிர்ந்த அறவொழுக்கமும், அதனாற் பெற்ற நாகரிகமும் உடைய

வேளாளரே தமிழ்மக்கள் எல்லாரினுஞ் சிறந்து விளங்கித், தம்மினின்று அந்தணர் அரசர் என்னும் உயர்ந்த வகுப்பினர் இருவரையும் அமைத்துவைத்து, அறவொழுக்கத்தின் வழுவிய ஏனைத் தமிழ் மக்களெல்லாந் தமக்குந் தமதுழவுக்கும் உதவியாம்படி பதினெண் டொழில்களைச் செய்யுமாறு அவர்களை அவற்றின்கண் நிலைபெறுத்தித் தமிழ் நாகரிகத்தைப் பண்டு தொட்டு வளர்த்துவரலானார்கள். மக்களின் தோற்றத்தையும் நாகரிகத்தையும் பெரிதும் வியக்கத் தக்கவாறாய் ஆராய்ந்தறியும் ஆங்கில நூலாசிரியர்களும் 'முதன் முதல் உழவுதொழிலைக் கண்டறிந்த மக்களிலிருந்தே நாகரிகந் தோன்றி வளர்ந்து வரலாயிற்று' என்று இவ் வுண்மையைப் புலப்படுத்தி யிருக்கின்றார்கள். தமது தாளாண்மையாற் கொலை புலை கடிந்து ஈகை அறங்களை இத் தமிழகத்தில் நிலை நிறுத்தினவர்கள் வேளாளர் ஒருவரேயாதல் நன்குணர்ந்தே சைவசமயாசிரியருள் முதல்வரான திருஞான சம்பந்தப் பெருமானும்,

"வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்குந்
தாளாளர் ஆக்கூரிற் றான்றோன்றி மாடமே."

என்று திருவாய் மலர்ந்தருளினர்.

இத் துணைச் சிறந்த வேளாளர் நாகரிகத்திற்குப் பிறப்பிடமாய், ஏனை நாகரிக வகுப்பினர் எல்லாருந் தோன்றுதற்கு முற்றோன்றினவராய் இருத்தலின், இவர்கள் ஆரியர் கூறிய பிரம்ம சத்திரிய வைசிய சூத்திரர் என்னும் நால்வகை வகுப்பினுள் ஒன்றினும் அடங்காராய் அந் நால்வகையினர்க்கும் முற்பட்டாராய்ச் சிறந்து விளங்குதல் நடுவு நின்று ஆராய்வார்க்கு நன்கு விளங்கும்.

இவ் வேளாளர் அன்பிலும் அறத்திலுஞ் சிறந்து நின்றாராதலின், எத்தகையோராயினும் எவ்வகுப்பினராயினுந்

துன்புறக் கண்டால் அத் துன்பத்தை நீக்கும் பொருட்டுத் தமக்குள்ள பொருள்களையுஞ், சில நேரங்களில் தமது உயிரையுங்கூடக் கொடுத்துதவும் அத் துணை இரக்கநெஞ்சமும் அன்புங் கண்ணோட்டமும் உடைய ரென்பது இவர் தம் வரலாறுகளை ஆராய்தலால் நன்கு விளங்காநிற்கும். விருந்தினரை அகமும் முகமும் மலர்ந்து ஏற்று அவர்க்கு வேண்டுவன வெல்லாஞ் செய்து அவரை உவப்பித்தல் இவரது இயற்கை. இஃது,

"இன்மையாற் சென்றிரந்தார்க்
 கில்லையென்னாது ஈந்துஉவக்குந்
தன்மையார் ஆக்கூரிற்
 றான்றோன்றி மாடமே."

என்னுந் திருஞானசம்பந்தப் பெருமான் அருளுரையால் தெளியப்படும்.

உ. ஆரிய நாற்சாதியில் வேளாளர் அடங்காமை

இத் தன்மையினரான வேளாளரை ஆரியர் கூறும் நால்வகைச்சாதிப் பெயரால் வழங்காமல், அவர்கொண்ட நாற்சாதியார்க்கும் முற்பட்டவராகவும் அந் நால்வரினும் மேற்பட்டவராகவும் கொள்ளுதலே பொருத்த முடைத்தாம். ஏனென்றால், வேளாளரினின்றே அந்தண வகுப்பும் அரச வகுப்பும் பிரிந்தமையின் இவர்களைப் பிராமணரென்றாவது சத்திரியரென்றாவது கூறுதல் பொருந்தாது; அல்லது ஆநிரை காத்து உழவும் வாணிகமும் நடாத்துதல் பற்றி இவரை வைசியரென்போ மென்றால், இவர்களுட் பலர் அந்தணராயும் அரசராயும் பண்டுதொட்டு வாழ்ந்து

வரக் காண்டலால், இவர்களை அவ்வாறு வைசியரென்று வரையறுத்துக் கூறுதலும் ஆகாது.

இனி, இவரைச் சூத்திரரென்று கூறுவோமென்றால், அது முற்றும் அடாத உரையாம். ஆரியர் கூற்றின்படி, சூத்திர ரென்போர் பிராமணர் சத்திரியர் வைசியர் என்னும் மூன்று சாதியார்க்குங் குற்றேவல் செய்தல் ஒன்றே உடையரல்லது, வேறு ஏதோர் உரிமையும் ஏதோர் உடைமையும் ஏதொரு முதன்மையும் உடையரல்லர். மற்று, வேளாளரோ அந்தணராயிருந்து நூலோதல் ஓதுவித்தல் திருக்கோயில்களிற் கடவுளுக்கு வழிபாடு ஆற்றல் முதலான உயர்ந்த தொழில்கட்கு உரிமையும், அரசர்க்கு முடிசூட்டும் உரிமையும் அரசாளும் உரிமையும், பண்டுதொட்டுப் பெற்றாராய் வரக்காண்டலானும், அரசர்களாயும் பெருஞ் செல்வர்களாயும் முன்னும் பின்னு மிருந்து வருகின்றமையின் அவர்கள் எல்லாச் செல்வங்களும் உடையராதல் தானே பெறப்படுதலானும், இவ்வாறெல்லாம் அறிவுஞ் செல்வமுங் கல்வியும் வாய்த்த இவர்கள் தனிமுதன்மையுடையராயிருந்து எல்லார்க்குந் தம் பொருள்களை இரக்கத்தானும் அன்பானும் ஈந்து தம்மால் நிறுத்தப்பட்ட பதினெண் வகுப்பினர்பாலுந் தாம் ஏவல்வாங்கி வருதலன்றித் தாம் எவர்க்குங் குற்றேவல் செய்யாமை "இரவார் இரப்பார்க்கொன் றீவர்," "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந், தொழுதுண்டு பின்செல் பவர்" என்னுந் தெய்வத் திருவள்ளுவர் திருக்குறட் பாட்டுகளானும், "இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும், உழவிடை விளைப்போர்" எனச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் அருளிச் செய்த திருமொழியானும், "வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்குந், தாளாளர்," "இன்மையாற் சென்றிரந்தார்க்கு இல்லையென்னாது ஈந்து

உவக்குந், தன்மையார்" எனத் திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய அருளுரையானும் பெறப்படுமாற்றானும் இவரைச் சூத்திரரென்னும் இழித்துரையின்பாற் படுத்து வழங்கல் ஒரு சிறிதும் அடாதென்க.

இன்னும் பண்டைக்காலந் தொட்டுச் சைவவேளாளர்கள் கொலையும் புலாலுணவும் மறுத்துச் சிவவழிபாடு இயற்றி வருகின்றமையின், புலாலுண்டுஞ் சிவவழிபாடு செய்யாமலும் இருக்கும் எந்த வகுப்பினரிடத்தும் உடன் உண்ணுதலும் உடன் கலத்தலுஞ் செய்யாமலே வாழ்ந்து வருகின்றனர். பெரும்பாலும் எல்லாச் சாதியார்களும் சைவ வேளாளர் வீட்டில் உணவெடுப்பர்; சைவ வேளாளர் வேறெந்தச் சாதியார் வீட்டிலும் உணவெடார். ஆரியப் பார்ப்பனர் பழைய நாளிற் புலாலுணவு கொள்வாராயிருந்தமையின், அவர்கள் வேளாளராகிய தம்மைக் கண்டு புலால் மறுத்த பின்னும் வேளாளர் அவர்கள்பால் உணவு கொள்ளாமலே இருந்தனர். சிவதீக்கை பெற்ற சைவ வேளாளர் இந் நாளிலும் ஆரியப் பார்ப்பனர் வீட்டில் உணவெடார்.

இங்ஙனமாகச், சைவவேளாளர் எல்லாவகையானும் உயர்ந்தாராய், ஆரியர்பால் உண்ணல் கலத்தல்களைச் செய்யாமல் அவர் தம்மைப் புறத்தொதுக்கி வந்தமை கண்ட ஆரியப் பார்ப்பனர் தாமும் அச் சைவ வேளாளரைத் தாழ்த்துதற் பொருட்டுத், தம் முன்னோர் எழுதிவைத்த மனு முதலான மிருதி நூல்கட்கும் மாறாகச் 'சூத்திரர்' என்னும் இழிந்தபெயரை வேளாளர்க்கு வைத்து வழங்கத் தொடங்கினர். மனு முதலான பழைய ஆரிய நூல்களின்படி ஆராய்ந்து பார்த்தாலும் வேளாளரைச் சூத்திரர் என்று சொல்வதற்கு ஒருசிறிதும் இடமேயில்லை. மனு தர்மநூலின் ஒன்பதாம் அத்தியாயத்தின் இறுதியில்,

"வைசியன் மறைநூல் ஓதியபின் திருமணஞ் செய்து கொண்டு ஆவைக்காத்தலும், உழவுதொழில் நடாத்தலு மாகிய முயற்சியினை மேற்கொண்டவனா யிருக்கவேண்டும்"

"நான்முகன் ஆனிரைகளைப் படைத்து அவற்றைக் காக்கும் பொருட்டு வைசியனிடத்தும், குடிமக்களைப் படைத்து அவர்களை இம்மை மறுமையிற் காக்கும் பொருட்டு சத்திரிய பிராமணரிடத்தும் ஒப்புவித்தான்"

"நாம் ஆக்களைக் காத்தல் வேண்டாமென்று வைசியன் நினைத்தல் ஆகாது. அவன் காக்கும்போது வேறெந்தச் சாதியானும் ஆக்களைக் காத்தல் கூடாது.

"முத்து மணி பவளம் உலோகம் ஆடை கருப்புரம் முதலிய நறுமணப் பண்டம் உப்பு முதலிய சுவைப்பண்டம் இவைகளுக்கு அவ் வந்நாடுகளில் உள்ளவிலையின் ஏற்றக் குறைச்சல்களையுஞ் சரக்குகளின் நன்மை தீமைகளையும் வைசியன் அறிதல்வேண்டும்"

"தருமமாக வியாபாரஞ்செய்து பொருளைப் பெருக்கு தற்கு முயலல்வேண்டும். மற்ற தானங்களைவிட எல்லா உயிர்களுக்குங் கட்டாயமாக அன்னதானஞ் செய்தல் வேண்டும்"

என்று வைசியனுக் குரிய ஒழுகலாறுகள் வரை யறுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. இதனையடுத்துச் சூத்திர தருமத்தைக் கூறுங்கால்,

"வேதநூல் ஓதியுணர்ந்து புகழ்பெற்ற இல்லறத்தா னாகிய பிராமணனுக்கு ஊழியஞ் செய்வதே சூத்திரனுக்கு வீடு பேற்றை அடைவிக்கும் மேலான அறமாகும்"

"உள்ளும் புறம்புந் தூயன் ஆகிய உயர்ந்த சாதி யானைக் கொடுமையாகப் பேசாமல், பிராமணனுக்கும், அவ னில்லாவிடின் சத்திரியனுக்கும், அவனில்லாவிடின்

வைசியனுக்கும் மேலான பணிவிடை செய்துகொண்டு செருக்கில்லாமல் நாடோறும் அவர்களை யடுத்திருக்கிற சூத்திரன் மேலான சாதியானுவன்''

என்று சூத்திரன் ஊழியத்தொழில் ஒன்றற்கே உரியனுதலை அம் மனுதர்மநூல் வலியுறுத்துக் கூறுகின்றது. ஆரியர்க்குரிய தருமநூல்களில் மிகச் சிறந்ததாகிய மனு தர்மநூலின்படி பார்த்தாலும், ஆன்நிரை ஓம்பல் உழவும் வாணிகமும் நடாத்தல் என்னும் இத்தொழில்களையன்றி, எவர்க்கும் ஊழியஞ்செய்யுந் தொழிலினை மேற்கொள்ளாமல் தொன்று தொட்டு அறவொழுக்கத்தின்கண் வாழ்ந்துவருபவரான வேளாளரை வைசியரெனக் கூறலாமேயன்றிச் சூத்திரரெனக் கூறுதல் ஒருசிறிதும் அடாது. வேளாளர்க்கு ஏவல்புரியும் ஏனைப் பதினெண் வகுப்பினரைக்கூட அவ்வாறு சூத்திரரெனக் கூறுதல் பொருத்தமாகாது.

இனி, வடமொழியில் எல்லார்க்கும் பொதுநூலாகிய அமர நிகண்டிலும் வைசிய வர்க்கத்தைச் சொல்லுமிடத்து உழவு வாணிகம் ஆனிரை ஓம்பல் என்னும் மூன்று தொழிற்கும் உரியார் வைசியரெனக் கூறப்பட்டிருக்கின்றனர். சூத்திரவர்க்கத்தைச் சொல்லுமிடத்துக், குயவர் கொற்றர் கைக்கோளர் துன்னர் கொல்லர் தட்டார் தச்சர் ஓவியர் நாவிதர் வண்ணார் கூத்தர் பாணர் வேடர் கள்விலைஞர் ஊன்விலைஞர் ஏவலர் இழிகுலத்தோர் மடவோர் என்னும் இவர்களே சூத்திர வகுப்பில் அடக்கிக் கூறப்பட்டிருக்கின்றனர். இவ் வடமொழிப் பொது நூலின்படி பார்த்தாலும், உயர்ந்தோருந் தலைவருங் காணியாளருமாகிய வேளாளரை இழிந்தோர்க்குரிய சூத்திரப் பெயராற் கூறுதல் பெரிதுங் குற்றமுடைத்தாதல் காண்க.

௩. ஆரியர் வேளாளரைத் தாழ்த்தச் செய்த சூழ்ச்சி

இனிக், குடியேறிப் பிழைக்கவந்த ஆரியப்பார்ப்பனரை அன்பாக வரவேற்று, அவர் இருக்க இடங்கொடுத்தும், அவர் உண்ணச் சோறும் உடுக்கக் கூறையும் வழங்கியும், நூல்கற்க உதவிகள் புரிந்தும் அவர்க்குப் பலவாற்ருன் நன்றிசெய்து அவரைப் பாதுகாத்த தமிழ் நன்மக்களாகிய வேளாளர்க்குத் திரும்ப நன்றிசெய்தற்கு மாருகத், 'தீட்டின மரத்திற் கூர்பார்த்தலோடு' ஒப்ப, அவ்வாரியப் பார்ப்பனர் அவரை மிகவுந் தாழ்த்துதற்குக் கங்கணங் கட்டிக்கொண்டு, நேரம் வாய்க்கும்போதெல்லாம் அவரைச் சூத்திரரென வாய்கூசாது சொல்லுதற்குஞ், சுந்தரமூர்த்தி நாயனர் காலத்திற்குப் பிற்பட்ட தமிழ்நூல் வடநூல்களில் அங்ஙனமே அவரைச் சூத்திரரென எழுதிக் கரவாய்ச் சேர்த்துவிடுதற்குந் துணிந்து வரலானர். இப் பிற்பட்ட காலத்தில் எழுந்த துலுக்கர் அரசாட்சியால் நேர்ந்த பல குழப்பங்களில் அகப்பட்டு வேளாளரிற் கல்விகற்பார் தொகை மிகச் சுருங்கிப்போகவே, ஆரியப் பார்ப்பனர் இழித்துக் கூறுஞ் சூத்திரர் என்னுஞ் சொல்லுக்குப் பொருள் தெரியாமல், அவ் வேளாளர் தாமும் அச் சொல்லைத் தமக்கு உரியதெனக் கொண்டு அச் சொல்லால் தம்மைத் தாமும் வழங்கிக்கொள்வாரானர்கள். இங்ஙனமே, இஞ்ஞான்றை இந்து சமயத்தவர் பலருந் தம்மை 'அஞ்ஞானிகள்' என்று கிறித்துவமதத்தினர் இகழ்ந்துகூறும் பெயரைத் தமக்கு ஓர் அணிகலனகை ஏற்றுக்கொண்டு, 'அஞ்ஞானிகள்' என்னும் அப் பெயரினலேயே தம்மைத் தாம் சொல்லிக் கொள்கின்றனர்! ஐயோ! அறியாமையின்

பெருமிதம் இருந்தவா றென்னே! இப் பிற்பட்டகாலத்தில் தோன்றிய புராணங்கள் பலவற்றிலும் ஆகமங்களிலும் பிற நூல்களிலும் ஆரியப் பார்ப்பனரும் அவர் வழிச்சார்ந்த தமிழ்அந்தணரும், வேளாளரைச் சூத்திரரென வழங்குதற்குவேண்டும் நிலையான ஏற்பாடுகளையெல்லாஞ் செய்து அவற்றின்கட் செருகிவிட்டனர். வேளாளரிற் கற்றவர் எவரேனும் இப் புரட்டுகளைத் தெரிந்துகொண்டு, 'வேளாளரின் பண்டை வழக்கவொழுக்கங்களெல்லாம் மிகச் சிறந்தனவா யிருத்தலின், இவர்களைப் பழைய நூல்களெல்லாம் உயர்குலத்தினராக மிகுத்துக் கூற, நீவிர்மட்டும் இவரைச் சூத்திரர் என இழித்துக் கூறுதல் என்னை?' என்று அவ்வாரியப் பார்ப்பனரையும் அவர் வழிச் சார்ந்தாரையும் வினவினால், அப்போது அவர்கள் மிகவும் ஆழ்ந்த சூழ்ச்சியுடையராய்ச் சூத்திரரென்னும் பெயரை எடுத்துவிடாமலும், அச் சூத்திரப்பெயர் கொண்டே அவரை அந் நேரத்தில் மகிழ்வித்தல் வேண்டியும் 'நீங்கள் சற்சூத்திரர்; உங்களுக்கு ஊழியம்புரியும் ஏனையோரெல்லாம் அசற் சூத்திரர்' எனக் கூறியும், அதனை நூல்களில் எழுதியும் அவரை ஏமாற்றி வந்தனர். அவ் ஏமாற்றங்களைத் தெரிந்து கொள்ளும் ஆராய்ச்சி யுணர்வில்லாதவர்களும், வடமொழியில் எவர் எவைகளை எழுதிவைத்தாலும் அவை தம்மையெல்லாம் ஆராய்ந்துபாராமற் கடவுள் அருளிச் செய்தனவாகவே நம்பிவிடுவாருமான தமிழ் கற்றார் சிலர் தாம் வேளாளராயிருந்துந் தம்மைச், 'சற்சூத்திரர்' எனச் சொல்லிப் பெருமைபாராட்டிக்கொள்கின்றன! 'சூத்திரர்' என்னுஞ் சொல்லுக்குப் பொருள் 'மடமை யுடையோர்,' 'பிறர்க்கு ஏவல்வேலை செய்வோர்' என்பனவாதல் அமர நிகண்டினால் நன்கு விளங்குதலால், தம்மைச் சற்சூத்திரர் என்போர் தம்மை 'நல்ல மடையர்,' 'நல்லவேலைக்காரர்'

என்று கூறி மகிழ்வாரையே ஒத்திருக்கின்றனர்! தமக்கு உதவிபுரிந்த வேளாளரைச் சூத்திரரெனக் கூறித் தாழ்த்தி வைக்கும்பொருட்டு ஆரியப்பார்ப்பனர் அதுவே கண்ணுங் கருத்துமாயிருந்து பல ஏற்பாடுகளைப் பிற்காலத்திற் செய்து வைத்த தல்லாமலுந், தமிழ்நாட்டில் வேளாளரே செல்வமுஞ் சீருஞ் சிறப்புங் கல்வியும் நன்னடையும் நாகரிகமும் வலிமையும் உடையராயிருத்தலால், அதனையுஞ் சிதைக்கும் பொருட்டு, அவர்க்கு அடங்கி அமைதியாய் வாழ்ந்த குடிமக்கள் பலரையும் அவர்கட்கு எதிரிகளாக்கல் வேண்டி அவருட் சிலரை 'சத்திரியர்' என்றுஞ் சிலரை 'வைசியர்' என்றுஞ் சொல்லித் தூண்டிவிட்டு, அவ்வாற்றால் அவர்கள் வேளாளரைத் தம்மிற் றாழ்ந்த சூத்திரரெனச்சொல்லி அவர்களோடு மாறுடிநிற்கும்படி செய்துவிட்டு, அவ்வாரியப் பார்ப்பனராகிய தாம் அவரெல்லாரினும் உயர்ந்தாராகத் தனிநின்று கொண்டு, அவரிடும் போரினைக் கண்குளிரக் கண்டு மகிழ்கின்றார்கள்! இவர்செய்த இப்பொல்லாத சூழ்ச்சியால், தமிழ்நாட்டில் முன்னே ஒருவர்க் கொருவர் உதவியாய் ஒற்றுமைகொண்டு உறவாடி அமைதியாய் வாழ்ந்த குடிமக்களெல்லாரும் இப்போது பல்லாயிரம் பிரிவினராய்ப் பிரிந்து ஒற்றுமையிழந்து பகைமை மேற்கொண்டு, தமக்குரியவல்லாத சத்திரியர் வைசியர் என்னும் ஆரியப்பெயர்களைத் தாமாகவே புனைந்தனராய் மல்லாடி நாட்டின் நலத்தைக் கெடுக்கின்றனர்! "ஊர் இரண்டுபட்டாற் கூத்தாடிக்கு இளக்கரம்" என்னும் பழமொழிக்கு இணங்க ஆரியப் பார்ப்பனர் பழந் தமிழ்மக்களைத் தம்முட் போராடவிட்டு, அவரெல்லார்க்குந் தாம் மேலானவர்போல் தனிநின்று அவருடைய நலங்களையெல்லாந் தாம் கைப்பற்றி வருகின்றனர்! இனியேனும், இத் தென்றமிழ் நாட்டிலுள்ள தமிழ்மக்கள் தம் பழைய வழக்க ஒழுக்கங்களைப் பண்டைத் தனித்தமிழ்

நூல்களின் உதவிகொண்டு ஆராய்ந்து தெளிந்து, தாம் சிக்கிக்கொண்ட ஆரியர் வலையினின்றுந் தம்மை விடுவித்துத், தம்மை உண்மையாக உயர்த்துதற்குரிய தமிழ் முறையால் தம்மை உயர்த்தி ஒருமித்து வாழ்வதிற் கருத்தாய் விரைந்து முயலல்வேண்டும்.

---

௬. அருளும் அன்பும் உடையாரே உயர்ந்த சாதியார்

தம்மை உயர்த்துதற் குரிய தமிழ்முறை யாதென்றால், அஃது அறிவும் அன்பும் அருளும் உடைய ஒழுக்கமே யாகும். எந்த உயிர்க்குந் தீங்குசெய்யாத அருளொழுக்கமே எல்லா ஒழுகலாற்றினுஞ் சிறந்ததாய்த் தன்னை யுடையார்க்கு எல்லா உயர்வினையுந் தரும். இது,

> "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா உயிருந் தொழும்."

என்னுந் தெய்வத் திருவள்ளுவர் திருக்குறளால் நன்கு விளங்கும். எந்த உயிரையுங் கொல்லுதலும் ஆகாது, கொன்று அதன் ஊனைத் தின்னுதலும் ஆகாது. "தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான், எங்ஙனம் ஆளும் அருள்?" என்று ஆசிரியர் திருவள்ளுவர் கேட்டலாற், கொலையும் புலையும் நீக்காதார் அருளுடையவர் ஆகார். ஆரியர் எண்ணிறந்த யாடு மாடு குதிரை முதலிய உயிர்களை வேள்விவேட்கின்றேமென்று சொல்லிக் கொண்டு கொன்று தின்றமையால் அவர் அருளுடையராகார்; அதனால் அவர் உயர்ந்தோ ராதலும் இல்லை. ஆதலால், அவரைப் பின்பற்றி, அவர் கூறிய பெயர்களால் தம்மை 'சத்திரியர்' எனவும், 'வைசியர்' எனவுஞ்

சொல்லிக்கொண்டு உயர்வு தேடுதலால், ஒருவர்க்கு உயர்வு வந்துவிடமாட்டாது. கொலையும் புலாலுணவும் நீக்கி அருளொழுக்கத்தில் வந்து நிலைபெற்றால் மட்டும் ஒருவர் வேளாளரைப்போல் உயர்ந்தவராகலாம். இப்போது தம்மை சத்திரியர் எனவும் வைசியர் எனவுங் கூறித் தமக்குப் பெருமைதேடுந் தமிழ்க் குடிமக்கள், வேளாளரைப்போற் கொலை புலை நீக்கித் தூய அருளொழுக்கத்தினராய் நடக்கின்றார்களா வென்றால் அதுவுமில்லை. வேளாளர்களோ பண்டைக்காலந் தொட்டே தமது நுண்ணறிவால் நிலத்தை உழுது பயிர்செய்து பல உயர்ந்த சுவைப் பண்டங்களை விளைக்கத் தெரிந்து, அவற்றை உணவாக அருந்தி, மற்றை உயிர்களைக் கொல்லாமலும் அவற்றின் ஊனைத் தின்னாமலும் அருளொழுக்கத்தின் கண்ணராய், இன்றுகாறும் ஏனை எல்லா மக்களானும் உயர்த்துக் கொண்டாடப்பட்டு வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு இயற்கையில் உயர்ந்தோராய் நிற்கும் நன்மக்களை வறிதே 'சூத்திரர்' என்று சொல்லிவிட்டால் அவ்வளவில் அவர்களைத் தாழ்த்திவிடுதல் கூடுமோ? கொலைபுலை யாகிய இழிந்தவற்றைச் செய்யும் ஏனை வகுப்பினர் தம்மைப் 'பிராமணர்' 'சத்திரியர்' 'வைசியர்' என்று வாளா கூறிக்கொண்டால் அவ்வளவில் அவர் உயர்ந்தாராய் விடுதல்கூடுமோ? இரண்டுமில்லை. இது பற்றியன்றே தெய்வத் திருவள்ளுவர் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யால்" என்று அருளிச் செய்தாரென்க.

இனி, மக்களாய்ப் பிறந்தோர் தம்மையொத்த எல்லார்க்கும் பசியும் நோயும் வறுமையும் உண்டென்பதனை உணர்ந்து, அவர்பால் இரக்கமும் அன்பும் மீதூரப் பெற்றாராய் அவர்க்குச் சோறு தந்து பசியை நீக்கியும், மருந்து ஊட்டி நோயைத் தீர்த்தும், பொருள் வழங்கி வறுமை

யைக் களைந்தும் ஒழுகுவதோடு, அவர் இம்மை மறுமைப் பயன்களை எய்துதற்கு இன்றியமையாத கல்வியறிவையுந் தந்து நடத்தல் வேண்டும். இதுவே அன்பொழுக்கமாம். இவ் வொழுக்கம் ஆரியப் பார்ப்பனர் பால் இல்லையென்பதை எவரும் உணர்வர். தம் மினத்தவரல்லாத பிறர் எவரேனும் பசியாலும் விடாயாலும் மிக வருந்திவந்து ஒரு பிடி சோறும் ஒரு குடங்கைநீருங் கேட்டாலுந் தீட்டுப்பட்டுப்போம் என்று சொல்லி அவற்றைக் கொடாமல் அவரைத் துரத்துவர்; தாம் நீர் முகக்குங் கிணற்றிற் பிறர் நீர் எடுக்கவும் விடார்; தாம் குளிக்கும் நீர்த் துறையிற் பிறர் இறங்குதற்கும் ஒருப்படார்; தமது வீட்டுத் திண்ணையிற் பிறர் களைத்திருக்கவும் இடங் கொடார்; பழந்தமிழ்க் குடிகளாகிய பறையர் பள்ளர் தம் தெருவண்டை நெருங்கு தற்கும் மனம் ஒப்பார். நல்ல நிலைமையிற் சிறிது உதவி வேண்டினார்க்கே அதனைச் செய்யாத ஆரியப் பார்ப்பனர், நோயும் வறுமையுங்கொண்டு தமது நிலைமை கெட்ட ஏனை யோரைத் திரும்பியும் பார்ப்பரோ! நடுநிலையுடையீர் கூறு மின்கள்! இனி, இவர் தாங் கற்ற கல்வியைத் தம்மினத் தவர் அல்லாத பிறரெவர்க்குங் கற்றுக்கொடார்; தம் மினத்தவர் மட்டுமே வீட்டுநெறி யெய்துதற்குரியராத லால், ஏனையோர் அவ் வீட்டுநூல்களைக் கற்கலாகா தென்பர். தாமோதும் வீட்டுநூல்களைப் பிறர் ஓதின் அவர் நாவைப் பிளக்கவேண்டுமெனவும், அவற்றைக் கேட்பிற் காய்ச்சி உருகின ஈயத்தை அவரது செவியில் உகுத்தல் வேண்டுமெனவுங் கூறுவர். இவையெல்லாம் அவர்க ளெழுதிவைத்த மனுமுதலான மிருதி நூல்களிற் பரக்கக் காணலாம். இவ்வாரியப் பார்ப்பனர்க்குப் பிறர்மாட்டு ஆ! எவ்வளவு இரக்கம்!

இனித், தமிழ்நன்மக்களான வேளாளர்களோவென்றால் எல்லா மாந்தரிடத்தும் அன்பும் இரக்கமும் உடையராய்ப், பசித்து வருந்தினார்க்கு அப் பசியைத் தீர்த்தற்கு அறச்சோற்று விடுதிகளும், நீர்விடாய் தணித்தற்கு அறக்கூவல் குளங்கள் தண்ணீர்ப்பந்தர்கள் இளமரக்காக்களும், வழிப்போவார் தங்குதற்குச் சத்திரஞ் சாவடிகளும், நோயுற்று வருந்தினார்க்கு நோய்தீர்க்கும் மருத்து விடுதிகளுங், கல்வி கற்பிக்குங் கல்விக் கழகங்கள் திருமடங்களுங், கடவுளை வழிபடுதற்குத் திருக் கோயில்களும் பண்டுதொட்டு ஆங்காங்கமைத்துப் பல்வகை அறங்களுஞ் செய்திருக்கின்றனர். அவைமட்டுமோ, பொருளின்றித் தம்பால் வந்த புலவர்க்குந் துறவோர்க்கும் மழையைப்போற் கொடை கொடுத்து, அவர் தம்மால் உலகிற்குப் பல நலங்களை விளைவித்திருக்கின்றனர். வேளாளர் இங்ஙனம் பல்வகை அறங்களைச் செய்துவைக்க, அவற்றை இன்று வரையில் துய்ப்பவர்கள் மட்டும் பெரும்பாலும் ஆரியப் பார்ப்பனராயிருத்தலை அறியாதார் யார்?

ஆரியப் பார்ப்பனர் தம்மினத்தவர் அல்லாத வேறொருவர் தமக்கு நண்பராதல் பற்றித் தம் வீட்டிற்கு விருந்தினராய் வந்தால் அவர் எவ்வளவு பசியோடிருந்து முகங் குழைந்தாராயினும் அவரைப் புறந்திண்ணையில் இருக்கச்செய்து, வாயிற்கதவை அடைத்துக்கொண்டு தாமுந் தம்மினத்தவரும் உள்ளேயிருந்து நன்றாய் விலாப் புடைக்க மெல்லத் தின்று முடித்தபின் மிஞ்சியதைப் பசித்துப் பாதிஉயிர் போன அவ் விருந்தினர்க்கு வாயிற் கதவண்டை நடையில்வைத்து இடுதலும், அவர் எச்சிற் சோற்றை மனவருத்தத்தோடும் அரைகுறையாய் உண்ட பின் அவரே தாம் உணவுகொண்ட எச்சிற்கல்லையைக் கையில் தூக்கிக் கொண்டு தெருவேசெல்ல, அவர்க்குச்

சோறிட்ட அப் பார்ப்பனரின் மகளிர் அவர் பின்னே சாணத்தைக் கரைத்துத் தெளித்துக்கொண்டு வருதலும் இன்றுகாறும் நடக்கக் காணலாம். வேறினத்தவர் எவரா யிருப்பினும்—அவர் தம்மைச் சத்திரியரெனக் கூறிக் கொள்பவராயினும் வைசியரெனக்கூறிக்கொள்பவராயினும் அன்றித் தம்மையும் பிராமணரெனவே கருதிக் கூறுபவ ராயினும், அல்லது தம்மைச் சூத்திரரெனவே ஒப்புக்கொண் டவராயினும், அவரெல்லாம் ஆரியப் பார்ப்பனர் தமக்கு ஆருயிர் நேசராதல் பற்றி அவர் வீட்டுக்குத் தப்பித்தவறி விருந்தினராய்ச் சென்றால், அவர்கட்கு அங்கே இவ்வளவு பெருஞ் சிறப்பும் நடக்கின்றது! வெட்கங் கெட்ட இவ் வெச்சிற் சோற்றைத் தின்னுதற்குத் தமிழரில் மானமுடை யோர் எவரும் இவ்வாரியப் பார்ப்பனர் வீட்டுக்குச் செல்வரோ?

இனி, வேளாளரோவென்றால் "விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா, மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று" என்று ஒப்புயர்வற்ற தமிழ்மறை கூறுகின்றபடி, வந்த விருந்தினரைப் புறத்தே பசித்திருக்கவிட்டுத், தாமுந் தம்மினத்தவருமாக உள்ளே கதவடைத்துக் கொண்டு உண்ணும் நீரர் அல்லர்; வந்த விருந்தினர், தம்மோடு உட னிருந்து உண்ணுதற்கு ஏற்ற சைவவொழுக்கம் இல்லாத வராயிருப்பின் அவரை முன் ஊட்டிப் பின் தாம் உண்பர்; அல்லது அவரை ஒரு பக்கத்து வைத்துத் தாம் ஒருபக்கத் திருந்து, அவருந் தாமும் ஒரேகாலத்தில் உணவு கொள்ளத் தக்கதான ஒழுங்குஞ் செய்வர். தம்மினத்தவர் அல்லரா யினுங், கொலை புலை தவிர்ந்த சைவவொழுக்கத்தினரா யிருப்பவரைத் தம்மோடு உடன்வைத் துண்ணுதற்கும் வேளாளர் பின் நிற்பவர் அல்லர். ஆனால், வேளாள வகுப் பினரிற் சிலர் இக் காலத்தில் ஆரியப் பார்ப்பனரைப்

பார்த்துத் தாமும் அவர்போல் ஆகல்வேண்டி, விருந்தினராய் வந்த வேற்றினத்தாரைப் புறத்தேவைத்துத் தாம் உண்ணுதலும், உண்டு மிஞ்சிய மிச்சிற்சோற்றை அவர்க்கு இடுதலும், தாம் உண்டபின் எஞ்சிய உணவுகளைப் பறையர்க்கு இட்டால் தமக்குத் தீட்டாகும் என்று பிழைபடக் கருதி அவற்றை நிலத்தின்கண் வெட்டிப் புதைத்தலுஞ் செய்து நடத்தல் உண்மையே; என்றாலும், அன்பும் இரக்கமும் அருளும் பண்டுதொட்டு இயற்கையாகவுடைய வேளாள நன்மக்கட்கு இத்தகைய இரக்கமற்ற கொடுஞ் செயல் சிறிதுந் தகாதென்பதை யுணர்ந்து தம்மைத் திருத்திக்கொண்டு, சைவ வொழுக்கமுடைய வேற்றினத் தாருஞ் சைவ வொழுக்கமில்லா வேற்றினத்தாருமாகிய எல்லாக் குடிமக்களையும் அவரவர்க்கேற்ற தகுதியாக எவர் மனமும் வருந்தாமற் சிறப்பாக நடப்பித்தலிலேயே கண்ணுங் கருத்தும் வைத்தல் வேண்டும். சைவவொழுக்கத் தினராய் உயர்ந்துவரும் வேற்றினத்தாரைக் கீழேநூக்கி அழுத்தாமல், அருட்கைகொடுத்து மேற்றூக்கி அவரைத் தம்மினத்தவராக்கிக் கொள்ளல்வேண்டும். அப்போது தான் கொலையும் புலையுங் கட்குடியும் இவை வாயிலாகவரும் ஏனைத் தீவினைகளும் உலகில் வரவரக் குறையும். 'யாம் உயர்ந்தாற் போதும்; பிறர் எங்ஙனமாயின் எமக்கு என்!' என்று தமது நலமே கருதிப் பிறர் நலங் கருதாதார்க்கு அன்பும் அருளும் இரக்கமும் இன்மையால் அவர் அவை யெல்லாம் ஒருங்கே உடைய கடவுளின் திருவருளைப் பெறமாட்டார்; அவர் இம்மை மறுமை யிரண்டிலும் உயர்ந்த நலங்களைப்பெறார்; அவர் உண்மை வேளாளரும் ஆகார்; அவரை உயர்ந்தோரென அறிவுடையோருங் கொள்ளார். ஆகையால், "அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுகலான்"

என்னுந் தெய்வமறையின் உண்மையைக் கடைப் பிடித்து, வேளாளராவார் பண்டைக்காலந் தொட்டு வருந் தமக்குரிய அருளொழுக்கத்தினின்றுஞ் சிறிதும் வழுவாது ஒழுகுதலே அவர்க்கு என்றும் மங்காத பெருமையையும் இறைவ னருட்பேற்றையுந் தரும் என்க. தொன்றுதொட்டு வருந் தமது அருளொழுக்கப் பெருமையைக் கற்றும் கேட்டும் ஆய்ந்தறியாத அறியாமையுடைய வேளாளரிற் சிலர் ஆரியப் பார்ப்பனரைப் பார்த்து அவர்போல் அருளொழுக்கத்தில் வழுவி நடப்பராயினும், அங்ஙனம் அருளிலராய் நடப்பது அவர்க்கு இயற்கையன் றென்பது, அவர்கள் திருவிழாக் காலங்களிலும் ஏனைச் சிறப்பு நாட்களிலும் எல்லா வகுப்பினரையும் வேற்றுமையின்றி ஒருங்கு வைத்து உடனிருந்து உணவுகொள்ளுதலாகிய 'மகேசுர பூசை' நடத்துமாற்றால் நன்கறியப்படும். அதுநிற்க.

ரு. ஆரியப்பார்ப்பனர் தமிழையுஞ் சிவத்தையும் இகழ்தல்

இன்னும், ஆரியப் பார்ப்பனர் தமக்குப் பல்வகையால் உதவியாற்றிவருந் தமிழ்மக்களெல்லாரையும் ஒரு தொகைப் படுத்துச் சூத்திரர் என்று இகழ்தல் அல்லாமலும், ஆரியர்க்கு முன்னேதொட்டுத் தமிழ் மேன்மக்கள் வழிபட்டு வரும் முழுமுதற் கடவுளாகிய சிவபிரானையுஞ் சூத்திர தெய்வமென இகழ்ந்துவருவதுடன், அதனைத் தமது வசிட்ட மிருதிநூலிலும் எழுதிவைத்திருக்கின்றார்கள். தமிழ்மொழி அவர்கட்கு எட்டிக்காயினுங் கசப்பதாகும். இறந்துபட்ட தமது சமஸ்கிருத மொழியினையுஞ், சில நூற்றாண்டுகட்கு முன் தோன்றிப் பலமொழிக் கலப் புடையவாய் வழங்கும் ஆங்கிலம் இந்தி முதலான மொழி

களையும் எவ்வளவு உயர்த்துப் பேசவேண்டுமாயினும் அதற்கு மடிகட்டிநிற்பர். இன்ன காலத்திற்றான் தோன்றிய தென்று கூறுதற்கு ஆகாத அத்துணைப் பழமையுடைத் தாய்ப், பண்டைக்காலத்திலேயே இலக்கண இலக்கிய வரம்புபெற்று, எல்லா வளங்களும் நிரம்பி இன்றுகாறும் நடைபெறுநின்ற தமிழையுந் தமிழ்நூல்களையும் அவை கற்றாரையுங் கண்டாற் சூத்திரபாஷை சூத்திரநூல்கள் சூத்திரப் படிப்பாளிகள் என்று இகழ்ந்து முகஞ் சுளித்துப் போவர். இத் தென்றமிழ் நாட்டிற் பிறந்தவர்களாயிருந்தும் இவ்வாரியப் பார்ப்பனர், வடநாட்டிலுள்ளவர்களையும், அவர்கள் தம்முடைய மொழிகளில் எழுதிவைத்திருக்கும் நூல்களையுமே எந்நேரமுங் கொண்டாடுவர். இவர்களிற் சிற்சிலர் தமிழ்மொழியைக் கற்றுத் தமிழ்ப்புலவரா யிருந்து பொருள்தேடினும், இவர்களை நெருங்கி ஆராய்ந்தால் இவர்களுந் தமிழையுந் தமிழ்நூல்களையுந் தமிழரையும் இகழ்பவராகவே காணப்படுகின்றனர்; அதனால், இவர்கள் தமிழ்கற்றது வயிற்றுப்பிழைப்புக்கே யன்றிப் பிறிதன் றென்பது நன்கு புலப்படும். இதுமட்டுமோ, தமிழ் நாட்டிற் பிறந்தருளி முழுமுதற் கடவுளின் உண்மையை நாட்டி யருளின திருஞானசம்பந்தர் முதலான சைவசமயாசிரி யரில் மூவர் அந்தணர்களாயிருந்தும் அவர்களையுஞ் சூத்திரர் எனக்கூறி, அவர்கள் அருளிச்செய்த நூல்களைச் சூத்திரப் பண்டாரப் பாட்டென்று இகழ்ந்து, சைவவேளாளர் மிகுதி யாயுள்ள திருநெல்வேலி முதலான ஊர்களிலுங்கூடச் சிவபிரான் திருக்கோயில்களில் ஓதுவார்பாடும் இத் தேவார திருவாசகங்களைத் தாம் செவிகொடுத்துக் கேட்டாற் பார்ப் பனராகிய தமக்குத் தீட்டாம் என்று கருதி, ஓதுவார் அவற்றைப் பாடத்தொடங்கும் முன்னரே நம்பியாரிடந் திருநீறு பெற்றுக்கொண்டு அவ் வாரியப்பார்ப்பனர்

கோயிலைவிட்டு அகன்றுபோதலை இன்றும் பார்க்கலாம். தமிழராற் கட்டிவைக்கப்பட்டுத், தமிழராற் பெரிதும் போற்றி வழிபாடு செய்யப்பட்டுவருந் தமிழ்த்தெய்வ மாகிய சிவபெருமான் உறையுங் கோயில்களிலே, முழு முதற்கடவுளாகிய அச் சிவபிரான் திருவுருவத்தின் எதிரிலே, ஆரியப்பார்ப்பனர் தாம் வணங்கிப் போந்த இந்திரன் வருணன் அசுவினி முதலான சிறுதேவர்கள்மேல் தம் முன்னோர்கள் பாடிவைத்த ஆரியவேதங்களை முதலில் ஓதும்படி, அவ் வேதங்களின் சிறுமையுணராத தமிழர்களை ஏமாற்றி ஏற்பாடு செய்துவிட்டதுமல்லாமற், சிவபிரான் ஒருவனையே வாழ்த்துந் தேவார திருவாசகங்களை முதலில் ஓதாதபடிக்குஞ் சூழ்ச்சிசெய்து விட்டார்கள்! இதனினும் வேளாளரை இழிவுபடுத்தத் தக்கது வேறு எதுவேண்டும்! இதுமட்டுமோ, தமிழ்நாட்டி லிருந்து செயற்கருஞ் செயல் கள் புரிந்து உண்மையன்பாற் சிவபிரான் திருவடி தலைக் கூடிய சைவத்திருத் தொண்டர் வரலாறுகளை இவ் வாரியப் பார்ப்பனர் இகழ்ந்து ஒதுக்கி, வடநாட்டிற் பிறந்து சிறு தெய்வங்களை வணங்கிப்போன தாசர்களின் வரலாறு களையே எந்நேரமும் விரும்பிக் கற்றுக் கொண்டாடுவர்! இவர்கள் சிவபிரான் கோயில்கட்குச் செல்லுதல் தமிழராற் பாராட்டப்படுதற்குந், தம் ஆரிய முறைகளை ஆண்டு நுழைத்தற்குமேயாம். இவர்கள் கடவுள் ஒருவன் உண் டெனக் கொள்ளாமல், தம்மையே கடவுளாகக் கருதும் நாத்திகர் என்பதற்கு, இவர்கட்கே உண்மையாக உரிய மீமாஞ்சைநூல் கடவுள் இல்லையென மறுப்பதனாலுஞ், சங்கராசிரியர் 'நானேகடவுள்' என நாட்டிய மாயவாத வேதாந்தக் கொள்கையையே இவர்கள் அனைவருங் கைக் கொண்டு நடத்தலாலும் நன்கு துணியப்படும். இன்னும் இங்ஙனமே இவ்வாரியப் பார்ப்பனர் தமிழையுந் தமிழ்நூல்

களையுந் தமிழரையுந் தமிழ்ப் பெரியாரையுந் தமிழ்த் தெய்வத்தையுந் தாழ்வுபடுத்திவருஞ் சூழ்ச்சிகளையெல்லாம் ஈண்டுரைக்கப்புகின் இது மிகவிரியும். பொதுவாய்த் தமிழ்த்தொடர்புடைய எதனையும் இகழ்ந்தொதுக்குதலே இவர் தங் கடப்பாடு. தாம் அங்ஙனம் ஒதுக்குதற்கு ஏலாமல் ஏற்பதற்குரிய மிகச் சிறந்தது ஏதேனும் ஒன்றைத் தமிழிற் கண்டால் உடனே அஃது ஆரியராகிய தம்மவரிடமிருந்து வந்ததெனை நாட்டுதற்குத் தக்க ஏற்பாடுகளையெல்லாம் எப்படியோ செய்துவைப்பர்! இவர்திறம் இவ்வாறிருக்க.

சு. வேளாளர் ஆரியத்தையும் பார்ப்பனரையும் கொண்டாடல்

இனி, வேளாளர்களோ வென்றால் வந்தேறுங் குடிகளாய்ப் போந்த ஆரியப் பார்ப்பனர்களை அகமும் முகமும் மலர்ந்தேற்று அவர்க்கு வேண்டுஞ் சிறப்புகளையெல்லாம் இன்றுகாறும் இன்னும் மனங் கோணாமலே செய்துவருகின்றனர். பழையநாளில் வந்த ஆரியர் இருக்க நிலங்களும் இல்லங்களும் உயிர்வாழ்க்கைக்குக் கழனிகளும் பொருள்களும் வேளாளர்கள் வழங்கியிருக்கின்றனர். தமது நூன்முறைப்படி வேளாளர் ஆரியப் பார்ப்பனரைக் குரவராகக் கொள்ளக்கூடா திருந்தும், திருமணக் காலங்களிலுந் தென்புலத்தாரை வணங்குங் காலங்களிலுந் திருக்கோயில் வழிபாடு செய்யுங் காலங்களிலும் பிற சிறப்பு நாட்களிலும் அவர்களையும் வருவித்துத், தம் தமிழ்அந்தணர்க்கு அடுத்த நிலையில் அவரையுங் குரவராகவைத்து அவர்க்கும் வேண்டுவனவெல்லாங் கொடுத்து வந்தனர்; இன்றுங் கொடுத்து வருகின்றனர். சைவசமய ஆசிரியர்கள்

தமிழைச் சிறப்பித்துக் கூறும் இடங்களில் ஆரியத்தையும் உடனெடுத்துச் சிறப்பித்து அருளிச்செய்கின்றனர்; தமிழ் நான்மறைகளைச் சிறந்தெடுத்து ஓதுகின்றுழி ஆரிய வேதங் களையும் உடன்வைத்துச் சிறப்பித்துப் பாடியிருக்கின்றனர்; தமக்குரிய இசைக்கருவியாகிய 'யாழ்' என்பதனைக் குறித்துச் சொல்லுங்காற் கூடவே ஆரியர்க்குரிய 'வீணை' யையும் உடன் வைத்துச் சொல்கின்றனர். இங்ஙனமெல் லாம் பலகாலும் பல்விடத்துந் தமிழ்ச் சான்றோர் தம்மால் உயர்த்துப் பாராட்டப்படுதற்குரிய தகுதியில்லாத ஆரியரை யும் அவர்செய்த நூல்களையும் அருண்மிகுதியால் உயர்த்துப் பாராட்டுதல்போல, ஆரியருள் எவரேனுந் தமிழரையும் அவரியற்றிய அரும்பெரு நூல்களையும் பாராட்டித் தம் வடமொழி நூல்களிற் பேசியிருக்கின்றனரா? இல்லையே. இதனாலேயே, தமிழர் அருளாளராதலும், ஆரியர் அழுக்கா றுடையராதலும் நன்கு விளங்கும்.

இன்னுந், தமிழர் வாய்மையே கூறும் இயல்பினரென் பதற்கும், ஆரியர் பொய்யும் புளுகும் புனைந்து கட்டிச் சொல்லித் தம்மை உயர்த்தும் நீரர் என்பதற்கும் அவரவர் தத்தம் நூல்களைப் பற்றிக் கூறுவனவே சான்றாம். அளக்க லாகாப் பெருமையுடைய திருக்குறள், நாலடியார், தேவார திருவாசகங்கள் முதலிய நூல்களையெல்லாந் தமிழ்மக்கள் அவ்வவற்றை இயற்றிய சான்றோர் பெயர்களால் உண் மையை உள்ளவாறே சொல்லி வழங்குவர். ஆரியரோ, மேற்கூறிய தமிழ்நூல்களின் அரும்பொருள்களில் நூறாயி ரத்து ஒன்றுகூட இல்லாமற், பெரும்பாலுஞ் சிறு தெய் வங்கள்மேற் சிறப்பில்லா வகையாகத் தம்மவராற் பாடப் பட்ட இருக்கு முதலான வேதங்களையும், அருளறத்திற்கு ஒவ்வாத முறைகளைக் கூறும் மிருதிகளையுங், கடவுளின் இறைமைத் தன்மைக்கு இழுக்கந்தேடும் பொய்க்கதைகள்

மிக நிரம்பிய புராணங்களேயும் எல்லாங் கடவுள் அருளிச் செய்தனவாகப் பொய் கூறி, அவற்றின்கண் எல்லாம் ஆரிய ராகிய தாம் தேவர்களாகப் பேசப்பட்டிருத்தலைக் காட்டித் தம்மை உயர்த்திச் செருக்குவர். இன்னும், ஆரியர் தமது மொழியில் தாம் உயர்வாகக் கொள்ளும் நூல்களிற் காணப் படாமல் தமிழில் உயர்ந்தனவாகக் காணப்படுவனவற்றைக் கைக்கொள்ளாதும் அவற்ருற் பயன்பெருதும் போதலைக் கண்டு இரங்கிய பிற்காலத்துத் தமிழறிஞர் தாம் எழுதுந் தமிழ்த் தலபுராணங்களேயும் பிறவற்றையும் அவர் கைக் கொண்டு பயன்பெறல் வேண்டித் தாம் அவற்றை வட நூல்களிலிருந்து மொழிபெயர்த்துச் செய்ததாகவுங் கூறித், தம்மை வெறுத்துத் தள்ளும் அவர்களோடும் உறவு பாராட்டாநிற்பர்.

தமிழ் நாட்டுச் சைவசித்தாந்தத் திருமடங்களுக்குத் தலைவரும் ஆசிரியருமாய் இருக்குந் தமிழ வேளாளக் குர வர்கள் தமது சைவசித்தாந்தக் கொள்கைக்கு முற்றும் மாருன மாயாவாத வேதாந்தக் கொள்கையுடைய ஆரியப் பார்ப்பனரைக் கூட்டங் கூட்டமாகத் தம் மடங்களில் வைத்துக்கொண்டு அவர்கட்கு எல்லாவகையான உதவி களும் புரிந்து வருதலை இஞ்ஞான்றும் பார்க்கலாம். ஆனல், ஆரியப்பார்ப்பனக் குருவான சங்கராசாரியரோ தம் மடங் களில் வேளாளர் முதலான தமிழர் எவரையும் அணுகுதற் கும் விடுவதில்லை; எவரேனுந் தமிழரை, அச் சங்கராசாரி யர் கண்டு பேசும்படி நேர்ந்தால் அவரது முகத்தை நோக்கிப் பேசுதலுந் தமக்குத் தீட்டாமெனக் கருதித் தம் ஆரியப்பார்ப்பனருள் எவரது முகத்தையேனும் நோக்கிய படியாகவே பேசுவர். இன்னுந், தமிழ வேளாளர் தாம் கட்டிவைத்த பற்பல சத்திரஞ் சாவடிகள் பள்ளிக்கூடங்கள் கோயில்களில் ஆரியப் பார்ப்பனரைத் தலைவர்களாக

ஏற்படுத்தி, அவ்வாற்ருல் அவை தம் தமிழினத்தார்க்கும் பயன்படாவாறு செய்துவர, ஆரியப்பார்ப்பனரோ தாம் எடுப்பித்த சிற்சில சத்திரங்கள் கோயில்கள் சமஸ்கிருத பாடசாலேகளில் தமிழர் எவரையும் நெருங்கவிடாது வருதலேயும் இன்றுகாறும் எவரும் நேரே கண்டு தெளியலாம். இங்ஙனமே, ஆரியப்பார்ப்பனர் தம்மினத்தவரல்லாத மற்றெவரும் முன்னேற்றம் அடைதற்குத் தினேயளவும் இடங்கொடாமல் ஒரவன்னெஞ்சம் உடையராய்ச் செய்து வரும் பொல்லாத கட்டுப்பாடுகளேயும், தம்மினத்தவ ரல்லாததுடன் தம்மை ஒயாது புறம்பழித்து வருவாரு மான அவ்வாரியப் பார்ப்பனர்க்கும் பிறர்க்குந் தமிழ வேளாளர் ஈர மென்னெஞ்சமுடையராய்ச் செய்துவரும் அருளுதவிகளேயும் ஈண்டு முற்ற வெடுத்து மொழியப்புகுந் தால் இது மிகவிரியுமென அஞ்சி இதனே இவ்வளவில் நிறுத்தி, வேருென்று கூறத் துவங்குவாம்.

எ. தொல்காப்பியரும் வேளாளரும்

இவ்வாறு பண்டைக்காலந் தொடங்கிச் சீருஞ் சிறப்பும் உடையராய் வரும் வேளாளவகுப்பினரைச் சூத்திரரெனவும், இத்தகைய சீருஞ்சிறப்பும் இல்லாத ஏனேவகுப்பினரைப் பிராமண சத்திரிய வைசியரெனவுங் கூறிஞல் அதனே நடுவுநிலே பிறழா அறிவுடையோர் எவரேனும் ஒப்புவரோ? ஒருசிறிதும் ஒப்பாரன்றே. அற்றன்று, செந்தமிழ்த் தொல்லாசிரியராகிய தொல்காப்பியனுர் தாம் இயற்றியருளிய ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்துள் வேளாளரைச் சூத்திரரெனக் கூறிய தென்னே யெனின்; இது தொல்காப்பியம் என்னும் ஒப்புயர்வில்லாச் செந்தமிழ்த் தனி முதல்நூலே நன்குபயின்று அறியாதார்

கூறுங் கூற்றும். ஆசிரியர் தொல்காப்பியனார் வேளாளரை வேளாளரென்றே ஓதினரல்லது சூத்திரரென யாண்டும் ஓதிற்றிலர். அற்றன்று, சூத்திரர் என்னுஞ் சொல் வடமொழிப் பெயராகலின் பண்டைச் செந்தமிழ் நூலாகிய அத் தொல்காப்பியத்தின்கண் அச் சொல்லால் அவரைக் குறித்திலரெனின்; “வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை” என்னுஞ் சூத்திரத்தில் ‘வைசிய’ எனும் வடமொழிச்சொல்லை அவர் எடுத்தாண்டிருத்தலின், வேளாளரையுஞ் சூத்திரரெனக் கூறல்வேண்டினாராயின் அவர் அச் சொல்லை அவர்க்குப் பெயராக வழங்காதிரார். இஃதொன்று கொண்டே வேளாளரைச் சூத்திரரெனக் கொள்ளுதல் தொல்காப்பியனார் திருவுளக்கருத்துக்கு இணங்குவதன்றென்பது பெற்றும். அஃதொக்குமாயினும், அந்தணரையும் அரசரையும் வைசியரையுங் கூறியபின் அவர் வேளாளரை நான்காம் முறைமைக்கண் வைத்து வடநூலார் கூறுமாறே கூறுதலின், வேளாளரைச் சூத்திர ரென வெளிப்படையாக வைத்துக் கிளந்து கூறிற்றிலரா யினும், அவர் தம்மைச் சூத்திரரெனக் கூறுதல் தொல் காப்பியனார்க்கும் உடன்பாடேயாமெனின்; நன்று கூறினாய், நான்காம் முறைமைக்கண் வைத்துக் கூறிய துணையானே அவரைச் சூத்திரரெனக் கொண்டாரென்பது ஆசிரியன் கருத்தை முன்னொடுபின் ஆராய்ந்து உணரமாட்டாதார் கூற்றும். ஆசிரியன் இன்னாரை இன்ன வகுப்பினர் எனக் கொண்டானென்பது, அவரவர்க்கு வரையறுத்த தொழில் களை அவன் எடுத்துக்கூறும் வழியா னல்லது வேறு வகை யாற் றுணியப்படாது. மேலே யாம் விளக்கிக் காட்டியபடி பழைய ஆரியநூல்கள் சூத்திரர்க்கு வரையறுத்த தொழில்: “மேல்வகுப்பினர் மூவர்க்கும் அவர் ஏவிய குற்றேவற்றொழில் புரிதல் ஒன்றேயாம்.” சூத்திரராவார்

உழவுதொழிலாயினும் வாணிகமாயினுஞ் செய்தற்கு உரிமையுடைய ரல்லர். ஆரியர் வகுத்த சூத்திரவகுப்பில் வேளாளரை அடக்குதல் ஆசிரியர் தொல்காப்பியனார்க்குக் கருத்தாயின் அவர் அவ் வேளாளர்க்குக் குற்றேவற்றொழில் ஒன்றுமே கூறியிருப்பர்; மற்று அவர் அவ்வா றுரையாது, ஆரிய நூல்கள் வைசியர்க்கு உழவு தொழிலைச் சிறந்ததாக வைத்துக் கூறுமாறுபோலவே,

> "வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
> இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி."

எனக் கிளந்து கூறினாராகலின் அவரைச் சூத்திரரெனக் கோடல் அவர்க்குக் கருத்தன்றாதல் துணியப்படும். மேலும், வேளாளர் காடு கெடுத்து நாடாக்கிக் குளந் தொட்டு வளம்பெருக்கி உழவுசெய்யும் வகையினை முதன் முதற் கண்டறிந்த நாகரிக உயர்குடி மக்களாதல் பற்றி அவர்க்கு உழவுதொழிலைச் சிறந்ததாக வைத்துக் கூறினா ராயினும், அவர்கள் அரசர்க்கு உதவியாளராய் அவர்க்குப் படைத்தலைவரும் அமைச்சரும் ஆதற்குரியா ரென்ப தூஉம், அரசர்தரும் வரிசைகளைப் பெற்றுக் குறுநில மன்னர் ஆதற்குரியா ரென்பதூஉம் மேற்சூத்திரத்தை யடுத்து,

> "வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
> வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே."

என்று ஆசிரியர் மீண்டுங் கூறுதலாற் றெளியப்படும். இங்ஙனம் வேளாளர் ஒருவர்க்கே யுரிய சிறப்புத் தொழி லும், அவர் அரசரைச் சார்ந்து பெறுந் தண்டத் தலைமை முதலிய பொதுத்தொழிலுங் கூறி, அந்தணாளர் ஒரோ வழி அரசு செலுத்துதற்குரியராதலும் அரசர்க்குரிய வரிசைகளிற் பல குறுநில மன்னர் பெறுதற்குரியாராதலுங் கூறிமுடித்தபின் ஆசிரியர்,

"அன்ன ராயினும் இழிந்தோர்க்கு இல்லை"

என்னுஞ் சூத்திரம் அருளிச்செய் திருத்தலின், இச் சூத்திரத்தின்கண் 'இழிந்தோர்' எனக் குறிப்பிக்கப்பட்டவர், வேளாளர்க்கு ஏவல் புரிவாராக வகுக்கப்பட்ட ஏனைப் பதினெண் வகுப்பினராதல் இனிது விளங்கும். வடமொழிக்கண் மிருதிநூல் முதலியவற்றிலும் அமரநிகண்டிலும் இப் பதினெண் வகுப்பினருஞ் 'சூத்திரவர்க்கத்' தின்கண் அடக்கப்பட்டிருத்தற்கேற்பவே, ஆசிரியரும் இவரை 'இழிந்தோர்' என்பர். இப் பதினெண்மருஞ் செல்வத்தான் மிக்குயர்ந்தாராயினும், அரசனாற் பெறுந் தண்டத் தலைமை அமைச்சுரிமை சிற்றரசர்க்குரிய அடையாளங்கள் முதலாயின வெல்லாம் பெறுதற்குரியர் அல்லரென்பது தொல்காப்பியனார் கருத்து. அந்தணரும் அரசரும் வேளாளரும் அல்லாத பிறரே 'இழிந்தோர்' என ஆசிரியராற் கொள்ளப்பட்டனரென்பது எற்றாற் பெறுதுமெனின், உயர்ந்தோராவார் தத்தமக்குரிய கடமைகளைத் தமக்கு மேம்பாடுண்டாகுமாறு செய்து முடிக்கும் வகைமையை வாகைத்திணையுள் ஆசிரியன்,

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்."

என்று ஓதியவாற்றாற் பெறுதுமென்பது. இதன்கண் அரசரல்லாத 'ஏனோர்' எனப்பட்டவர் 'மரபியலிற்' கூறியாங்கு அரசராற் பெறும் வரிசைக்கு உரிமையுடைய வேளாளரே யாவர்; இவர்தமக் குரிய இருமூன்று கடமைகளாவன: ஓதலும் வேட்டலும் ஈதலும் உழவும் நிரையோம்பலும் வாணிகமும் என இவை. இவ் வறுவகைத்தொழில் வேளாளர் அல்லாத ஏனைப் பதினெண் வகுப்பினுட் பட்டார்க்கு அக்காலத்து இல்லாமையின், இச் சூத்திரத்

தின்கண் மூன்றும் வகுப்பினராக ஓதப்பட்டவர் வேளாளரே யாதல் ஐயுறவின்றித் தெளியப்படுகின்றதன்றோ? இவ்வாறு இவ் வறுவகைத் தொழில் வேளாளர் ஒழிந்த ஏனைக் கீழ்வகுப்பினர் பதினெண்மருக்கும் பெரும்பாலும் இல்லாமையானும், அவை இல்லையாகவே அவற்றின்கட் சிறந்து வென்றி பெற்றுத் தோன்றுதலும் அவர்க் கில்லாமையானும் அந் நான்காம் வகுப்பினரை ஆசிரியன் இச் சூத்திரத்தின்கண் ஓதிற்றிலன். அற்றேல், இவ் வாகைத் திணைச் சூத்திரத்தில் வேளாளரை மூன்றும் வகுப்பின்கண் வைத்து ஓதிய ஆசிரியன், மரபியலில் "வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை" என வைசியனை மூன்றும் முறைமைக் கண் வைத்து, அதன்பின் "வேளாண் மாந்தர்க்கு" என்னுஞ் சூத்திரத்தை நிறுத்தி வேளாளனை நான்காம் முறைமைக்கண் வைத்தோதியவா றென்னையெனின் உழவும் வாணிகமும் வேளாளர்க்கு ஒப்ப உரியவாயினும், அவருள் ஒருபகுதியார் உழுதொழிலைவிட்டு வாணிகம் ஒன்றையே நடத்துங்கால் அவரை அத் தொழில்பற்றி அஞ்ஞான்று வேறு பெயரான் வழங்கினமை தெரிப்பார் "வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை" என்றோதினர்; இக் காலத்திலும் வாணிகஞ்செய்யும் வேளாளர் 'வேளாண் செட்டிகள்' என்று வழங்கப்படுதல் காண்க. உழவுதொழில் வேளாளர்க்கு என்றுஞ் சிறந்த உரிமையாதல்பற்றி அவர்க்கு எஞ்ஞான்றும் வழங்கும் "வேளாண்" பெயராற் சூத்திரஞ் செய்தார். இவ்வாறு வேளாளரை இருவேறு தொழில் பற்றி இருவகைப்படுத் தோதுங்கால், இவரல்லாத ஏனைப் பதினெண் குடிமக்களையும் ஒருதொகைப் படுத்து ஐந்தாம் வகுப்பாக்கி, அவர்தம்மை "இழிந்தோர்" எனவும் "கீழோர்" எனவும் ஆசிரியன் கூறுவன்; அவ்வாறு வேளாளரை இருவகைப்படுத்தாது ஒன்றாக்கி ஒரு வகுப்பினராகக்

கூறும்வழி அவ் வேளாளர் தம்மை "ஏனோர்" எனவும் "பின்னோர் எனவுங் கூறுவன். ஓதுதற்றொழில் அந்தணர் ஒருவர்க்கே சிறந்ததாயினும், அஃது ஏனை அரசர் வணிகர் வேளாளர் என்னும் ஒவ்வொரு சிறப்புத் தொழில் உடையார்க்குந், தனித் தனிக் கைத்தொழில்களுடைய ஏனைப் பதினெண் வகுப்பார்க்கும் பொதுவகையில் உரித்தென்று ஓதுகின்றுழி, அந்தணரல்லாத அவ் வேனையோரை நான்கு வகுப்பாக்கி, அவ் வந்தணரை ஒருவகுப்பாக்கி "மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே" என்று ஆசிரியன் தன் கருத்தை இனிது புலப்படுத்துரைத்தல் காண்க; இச் சூத்திரத்தில் 'மேலோர் முறைமை' என்றது அந்தணர்க்குச் சிறப்பாகவுரிய 'நூல் ஓதுந்தொழில்;' 'நால்வர்க்கும் உரித்து' என்றது அவ் வோதுதற்றொழில்; அஃது ஏனைத் தொழில்களிற் றனித்தனிச் சிறந்தாராகிய அரசர் வணிகர் வேளாளர் இவரல்லாத ஏனைப் பதினெண்மர் என்னும் நால்வகையார்க்கும் பொதுப்பட உரியதாகும் என்றபடியாம். இனி, அந்தணரை வேறுபிரியாமல் அவரையும் அகப்படுத்து, வணிகரையும் வேளாளரையும் ஒருவகுப் பாக்கி யுரைக்கும்வழி, அந்தணர் அரசர் வேளாளர் என்னும் மூவரையும் 'மேலோர்' எனவும், அவரல்லாத ஏனைப் பதினெண்மரையுங் 'கீழோர்' எனவும் ஆசிரியன் ஓதுவன்; அது,

> "மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணங்
> கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே."

என்னுந் தொல்காப்பியக் கற்பியற் சூத்திரத்தால் நன்கு தெளியப்படும். இச் சூத்திரப் பொருள் 'மேலோராகிய அந்தணர் அரசர் வேளாளராகிய மூவர்க்குங் கூட்டிச் சொல்லிய வேள்விச்சடங்கு, ஏனைக் கீழோராகிய பதினெண் வகுப்பார்க்கும் உரித்தான காலமும் உண்டு' என்பதாம்.

இங்ஙனம் ஒருகால் நால்வகுப்பினராகவும், பிறிதொரு கால் ஐவகுப்பினராகவும் பகுத்து உயர்ந்தோராகவும் இழிந்தோராகவும் ஆசிரியனாற் கூறப்பட்ட மக்கள் மருதநிலத்திற்கு உரியராவர். வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதநிலமே மக்கள் உழவுதொழிலாற் சிறந்து நாகரிகமுற்று வாழ்தற்கு உதவிசெய்வதாகலின், அந் நிலத்தாற் பெருகிய மக்களையே ஆசிரியன் மேலோரெனவுங் கீழோரெனவும் வகுத்து அவ்வவர்க்குரிய தொழில்வேறுபாடுகளை எடுத்து மொழிந்து நூலருளிச் செய்தான். அரசனது அரண்மனை மருதநிலத்தின்கண்ணேதான் உளதென்பது "உழிஞை தானே மருதத்துப் புறனே" எனவும், "முழுமுத லரணம் முற்றலுங் கோடலும், அனைநெறி மரபிற் றாகுமென்ப" எனவும் ஆசிரியன் புறத்திணையியலிற் கூறிய சூத்திரங்களான் அறியப்படும்.

இனி, மருதநிலம் அல்லாத முல்லை, குறிஞ்சி முதலான நிலப்பகுதிகளினும் மேலோருங் கீழோருஞ் சிறுபான்மை உளரென்பது,

> "ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
> ஆவயின் வரூஉங் கிழவரும் உளரே."

என ஆசிரியன் கூறுமாறுபற்றி உணர்ந்துகொள்க. எனவே, தமிழ்நாட்டின்கட் பிறந்த மக்கள் வகுப்பு, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலம்பற்றி எழுந்த தொன்றாதல் நன்கு பெறப்படும். இந் நால்வகை நிலத்தும் மேலோரான நன்மக்கள் தம்முள் ஏதும் வேறுபாடின்றி உண்ணல் கலத்தல்களைச் செய்து வந்தமை 'தொல்காப்பியம்,' 'இறையனாரகப் பொருள்,' 'திருச்சிற்றம்பலக் கோவையார்' முதலான தெய்வத் தமிழ் மறை நூல்களால் நன்கறியப்படும்; அவையெல்லாம் ஈண்

டுரைக்கப் புகின் மிகவிரியுமாதலின் அவைதம்மை அந் நூல்களுட் கண்டு கொள்க.

இங்ஙனம் நால்வகை நிலத்தும் அவ்வந் நிலத்து மக்களின் தொழில் வேறுபாடு பற்றிப் பல்வகுப்பினராகப் பிரிக்கப்பட்டோருட், கொலையும் புலாலுணவும் மறுத்து ஓதல் வேட்டல் அரசுபுரிதல் வாணிகஞ் செய்தல் உழவு நடாத்தல் என்னும் உயர்ந்த தொழிற்கண் நிலைபெற்று நின்றோர் 'மேலோர்' எனவும், அவர்தம் ஏவல்வழி நின்று, அக் கொலையும் புலையும் நீக்காமற் பெரும்பாலுங் கைத் தொழில் செய்யும் அவ் வளவில் நின்ற ஏனைவகுப்பினர் 'கீழோர்' எனவும் இருபெரும் பிரிவில் வகுக்கப்பட்டு, அவரவரும் அறிவாலும் ஒழுக்கத்தாலுந் தொழிலாலுந் தத்தமக்குள்ள உயர்வு தாழ்வுகளை நினைந்து, கீழோர் மேலோர்க்கு அடங்கி நடக்கவும், மேலோர் தங்கீழ்வாழுங் குடிமக்களை இனிது பாதுகாத்து வரவும் இவ்வாறு மிகவும் அமைதியாகவும் ஒழுங்காகவும் பண்டைத் தமிழ்மக்கள் வாழ்க்கை இனிது நடைபெறலாயிற்று.

அ. வடநாட்டிற் குடியேறிய வேளாளர்

நாகரிக வாழ்க்கையிற் சிறந்த இத் தமிழ் மக்கள் இத் தென்னாட்டின்கண் மட்டுங் குடிவாழ்ந்தவர் அல்லர். இவர்கள் இத் தமிழ்நாட்டின் மேல்கடற்கரைப் பக்கமாகவும் வடக்கு நோக்கிச் சென்று இமயமலைச் சாரல் வரையிலுள்ள வடநாடெங்கும் பரவி, ஆங்காங்கு நாடுநகரங்கள் அமைத்துத் தமது நாகரிகத்தைப் பெருக்கிவந்தனர். இங்ஙனம் பெருக்கிவந்த தமிழர்களுள் வேளாள வகுப் பினரே முதன்மையானவர். வடக்கே மேல்கடற்கரை

யைச் சார்ந்த பல ஊர்களும் நகர்களுங், கீழ்கடற்கரையைச் சார்ந்த தெலுங்குநாட்டு ஊர்களும், அங்கு அரசாண்ட ஆந்திர சாளுக்கிய அரசர்களும், 'வேள்புலம்,' 'வேளாபுரம்,' 'வேளகம்,' 'வேள்காம்,' 'வேள்பட்டி,' எனவும்; 'வேளிர்,' 'வேண்மார்' எனவும் முறையே வழங்கப் பட்டு வந்தமையே இதற்குச் சான்றாம்.[1] வடக்கே கீழ்கடற் கரையிலுள்ள நாடுகளை அரசாண்ட சளுக்கியர்களும் வேளாளரேயாவர்; "வேள்புல அரசர் சளுக்கு வேந்தர்" என்னுந் திவாகரச் சூத்திரமும் இதற்குச் சான்றாம். இவ் வேளாள அரசர்கள் வடக்கே கங்கையாறு பாயும் இடங் களிற் பெருந்தொகையினராகிய தம் மினத்தவரோடு குடி யேறி வாழ்ந்துவந்தமை பற்றி, வேளாளர் 'கங்கையின் புதல்வர்' என்றும் வழங்கப்படுவர். இங்ஙனம் வடநாடு களில் அரசாண்ட வேளிரும் அவர் இனத்தவருமான வேளாண்மக்கள் தென்னாட்டிலிருந்த தம் முன்னோரைப் பிரிந்து போனவரேனும், அவர்கள் தம் முன்னோரின் பிறப் பிடமான தமிழ்நாட்டையும், அதன்கண் தம் முன்னோர் வழிவந்த வேளாண்மரபினரையும் மறந்தவரல்லர். காலம் வாய்த்துழியெல்லாம் அவர்கள் தென்னாட்டிலுள்ள தம் உறவினரோடு உறவு கலந்தும், நேரிமலைக்குத்[2] தெற்கே யுள்ள காடுகளையழித்து அவற்றின்கண் நாடுநகரங்கள் அமைத்து அரசுபுரிந்தும் வந்தனர். நடுநாடாகிய மைசூரில் இப்போது 'துவாரசமுத்திரம்' என வழங்கும் 'துவரை நகரை' வேளிர் அரசர் நாற்பத் தொன்பது தலைமுறை செங்கோல்செலுத்தி வந்தனரென்பதும், அவருள் இறுதி யாக வந்தோன் இருங்கோவேள் என்னும் மன்னனும் என்பதும் புலப்பட,

---

1. 'வேளிர் வரலாறு,' கூகூகூ, பக்கம், கச.

2. நேரிமலை என்பது விந்தயமலை; 'கல்லாடம்,' உ.

"நீயே, வடபால் முனிவன் தடவினுள் தோன்றிச்
செம்புபுனைந் தியற்றிய சேண்நெடும் புரிசை
உவரா ஈகைத் துவரை ஆண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே."

என்று கபிலர் கூறுதல் காண்க[1]. இதுகொண்டு, பண்டை நாளில் தென்னாட்டிலும் வடநாட்டிலும் பரவியிருந்த வேளாளரும், அவருள் அரசராயிருந்த வேளிரும் நாகரிகத்திற் றலைசிறந்தவரா யிருந்தமையின், தாம் ஒருவரையொருவர் மறவாது, வடநாட்டிலுள்ளார் தென்னாடு போந்தும், தென்னாட்டில் உள்ளார் வடநாடு சென்றும் இடையிடையே உறவுகலந்து வந்தமை தெற்றென விளங்காநிற்கும்.

இங்ஙனமாகத் தமிழரில் மிகச் சிறந்த வேளாளர் இவ் இந்திய நாட்டின் வடபால் எங்கும் பண்டைக்காலத்திற் பரவியிருந்தன ரென்பதற்கு, மகதநாட்டை ஆண்ட ஆந்திரர் பேசிய தெலுங்குமொழியும், நருமதையாறு பாயும் இடங்களிலும் நாகபுரியின் வடக்கிலுமுள்ள **கோண்டு** மொழியும், இராசமகல் மலைச்சாரல்களில் வழங்கும் இராசமகல், ஊராவோன் மொழிகளும், இவ்விந்தியாவின் வடமேற் கெல்லையிலுள்ள பெலுசித்தான மலைப்பக்கங்களி லுள்ள குன்றவர் வழங்கும் பிராகுவி மொழியும், இமயமலைச்சாரலிலும் வடகிழக்கு நாடுகளிலும் பேசப்படும் மொழிகள் சிலவுந் தமிழ்மொழியோடு இனம் உடையவைகளாயிருத்தலே ஒருபெருஞ் சான்றாம் என்க.

---

1. புறநானூறு, உ0க.

௯. இந்தியாவின் வடமேற்கிற் குடிபுகுந்த ஆரியரின் புலையொழுக்கம்

இவ்வாறிவர்கள் இந்தியாவினுள் எங்கும் மேம்பட்டு வாழு நாளையில், இவ் விந்திய நாட்டின் வட வெல்லையாய் உள்ள இமயமலைக்கும் வடக்கே நெடுந்தொலைவில் இந் நிலவுருண்டையின வடமுனைநாடுகளில் இருந்த ஆரியர், அந் நாடுகள் வரவரக் குளிர்மிகுந்து உயிர்வாழ்தற்கு ஏற்ற தன்றாய் மாற, அவர்களுட் பலர் தாம் இருந்த இடத்தை விட்டுத் தெற்கு நோக்கிவந்து, இவ்விந்திய நாட்டின் வட மேற் கெல்லையிலுள்ள பெலுசித்தானத்தின் வழிப்புகுந்து பஞ்சாபிலுள்ள சிந்துயாற்றங் கரையிற் குடியேறினார்கள்.[1] அப்போது அங்கு அரசாண்ட தமிழரசர்களாகிய வேளிர், பல நகரங்கள் அமைத்து வலிய கோட்டைகள் கட்டி வலிமையும் நாகரிகமும் உடையராய் விளங்கினரென்பது அவர்பால் வந்தெய்திய ஆரியரே தம்முடைய இருக்குவேதப் பாட்டுகளிற் கூறுமாற்றால் நன்குவிளங்கும்.

"பொன்னாலும் மணிக்கலன்களாலும் ஒப்பனைசெய்து கொண்டவர்களாய் அவர்கள் (தாசர்கள்) இந் நிலத்தின் மேல் ஒரு மூடுவலையை விரித்தார்கள்"[2]

"இலபிசனுடைய வலிய கோட்டைகளை இந்திரன் உடைத்துப் பிளந்தான்."[3]

---

1. இது பாலகங்காதரதிலகர் நுணுகி ஆராய்ந்தெழுதிய 'வேதங்களிற் கூறிய வடமுனை இல்லம்' (Arctic Home In The Vedas) என்னும் நூலிற் காண்க.

2. இருக்குவேதம், ௧, ௩௩, ௮.

3. இருக்குவேதம், ௧, ௩௩. ௧௨.

"மறஞ்சிறந்த நெஞ்சினனாகிய நீ பிப்ருவின் கோட்டைகளை உடைத்து வீழ்த்தினாய், ஆரியர்களையுந் தாசியர்களையும் நீ நன்றாகப் பகுத்துணர்ந்து கொள்ளல்வேண்டும், உறுதியாகக் கட்டிவைக்கப்பட்ட சுஷ்ணாவின் கோட்டைகளை அவன் (இந்திரன்) துண்டு துண்டாகப் பிளந்தான்."[1]

"இந்தச் சோமபானத் துளிகளால் உவந்து இந்திரன் தாசியர்களைக் கலைத்துத் துரத்த, நாங்கள் அவர்களின் பகைமைக்குத் தப்பிப்பிழைத்து, ஏராளமான உணவைப் பெறுவேமாக.

"ஓ இந்திரனே, ஏராளமான செல்வத்தையும் உணவையும் பெற்று, மிகச்சிறந்த வலிமையினால் நாங்கள் வானளவும் உயர்ந்து விளங்குக.

"இரிஜிஸ்வான் அவர்களைச் சூழ்ந்து முற்றுகையிட்டஞான்று, நீ சிறிதும் விட்டுக்கொடாமல் வங்கிரிதனுடைய நூறு கோட்டைகளை நறுக்கியிருக்கின்றனை."[2]

இவ்விருக்குவேதப் பாட்டுகளில் ஆரியர்கள் இந்திரனை நோக்கிக்கூறும் வேண்டுகோளுரைகளால், தம் காலத்திருந்த வேளாண்மக்களையும் அவர்க்குத் தலைவரான வேளிர் அரசர்களையும் நிரம்பக் கொடுமையாக இகழ்ந்துரைத்தனராயினும், ஆரியர் அவர்களின் பெருஞ்செல்வத்தையும் நாகரிக அரசவாழ்க்கையையும் பொறாமையால் உடன் உயர்த்துக் கூறுதலுங் காண்க. ஆரியர்களாகிய தம்மையுந், தம்மால் தாசியரென வழங்கப்பட்ட தமிழரையும் பிரித்துக்காணுமாறு அவ்விந்திரனை வேண்டிக் கோடலும் நினைவுகூரற்பாற்று. இன்னுந், தமிழராகிய பிறர் இனிது வாழ்தலைக் காண இவ் வாரியர் மனம்பொறாது எரியும் இயல்பினர் என்பதற்குக்,

1. இருக்குவேதம், க, ருக. 2. இருக்குவேதம், க, ருரு.

"குயவன் என்பவனின் மனைவியர் இருவரும் பாலிலே தலைமுழுகுகின்றனரே! அவர்கள் சிபா யாற்றின் ஆழத்திலே அமிழ்ந்தி இறவார்களா"[1]

என்னும் அவர்களது கொடிய வேண்டுகோளுரையே சான்றும். "அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார், வழுக்கியுங் கேடு ஈன்பது" என்னுந் தெய்வத் திருக்குறளின்படி, பெருஞ் செல்வத்தில்வாழ்ந்த இத் தமிழ் நன்மக்களை வயிறெரிந்து வைத ஆரியர் உண்ணச் சோறும் உடுக்கச் சீரிய துணியும் இருக்கச் சிறந்த இல்லமும் இன்றி மிக மிடிப்பட்டுக் காலங்கழித்தனரே யல்லாமற் பிறிதில்லை யென்பது அவர்களது வாய்மொழியினாலேயே நன்கு புலப்படுகின்றது.

அற்றேல், விருந்தோம்பும் நல்லறத்திற் சிறந்த பண்டைத் தமிழ வேளாளர் மிடிப்பட்டு வருந்திவந்த ஆரியரை வருத்தியது என்னையெனிற் கூறுதும். பண்டை நாளிலிருந்தே ஆரியர் முழுமுதற் கடவுளின் உண்மையை உணர்ந்தவர் அல்லர்; அதனை யுணராமையின் தாம் அம் முதற்பொருளை வழிபடுமாறும் உணராராயினர். தமக்காகத் தம் பகைவரோடு போர் இயற்றவும், மழைபெய்வித்துத் தமக்கு உணவுப் பண்டங்களை விளைவித்துத் தரவும் வல்லன வாகத் தம்மாற் கருதப்பட்ட இந்திரன் மித்திரன் வருணன் மருத்துக்கள் முதலான சிறு தெய்வங்களையே பெரிதும் வேண்டி வணங்கிவந்தனர். சோமப்பூண்டின் சாற்றினாற் சமைத்த களிப்பான பானகத்தை அத் தெய்வங்களுக்குப் பருகக் கொடுத்தலானும், யாடு மாடு குதிரை முதலிய விலங்கினங்களை வெட்டி அவற்றின் இறைச்சியை அவை தமக்கு உணவாகக் கொடுத்துத் தாமும் உண்டலானும்

1. இருக்குவேதம், க, கO௪.

தாம் இந் நிலவுலகத்திற் பெறவேண்டிய எல்லாச் செல்வங்களையும் பிழையாமல் எளிதிற் பெறலாம் என்று நம்பி வந்தார்கள். இந் நம்பிக்கையாற் சோமபானத்தையும் விலங்கின் இறைச்சியையும் அவியாகக் கொடுக்கும் பொருட்டு அளவிறந்த வேள்விகளையும் வேள்விச் சடங்குகளையும் நாடோறும் பெருக்கி வந்தனர். அதற்கு இருக்கு வேதத்தின் ஐந்தாம் மண்டிலத்தின்கண் உள்ள,

'ஒ பிராமணர்களே, மருத்துக்களே, யான் கருத்தாய்ப் பிழிந்த இந்தச் சோமபானத்தை இந்திரன் பருகட்டும்;

ஏனென்றால் இந்தக் காணிக்கையானது ஆடவனுக்கு ஆடுமாடுகளைத் தேடித் தந்தது; இந்திரன் அதனைப் பருகிய பின் அவ் அரவினைக் கொன்றான்.

ஒரு நண்பன் மற்றொரு நண்பனுக்கு உதவிசெய்தல் போல, அக்கினியானவன் அவன் வேண்டியபடியே முந்நூறு எருமை மாடுகளை விரைந்து பாகம் பண்ணிக் கொடுத்தான்.

இந்திரனும், விருத்திரனைக் கொல்லுதற்கு ஆடவனது காணிக்கையாக, நெருக்கிப் பிழிந்த மூன்று பெரிய தொட்டிச் சோமபானத்தை உடனே குடித்துவிட்டான்.

மகவான், நீ முந்நூறு எருமை மாடுகளின் இறைச்சியைத் தின்று, மூன்று தொட்டிச் சோமபானத்தைப் பருகிய போது, தேவர்களெல்லாரும் வென்றி முழக்கத்தை எழுப்பினார்கள்; அவன் அரவினைக் கொன்றதற்காக அவனைப் புகழ்ந்தார்கள்."[1]

என்னும் பாட்டே சான்றாம். மயக்கத்தைத் தருங் கள்ளையொத்த சோமப்பூண்டின் சாற்றை ஏராளமாகப் பருகியதல்லாமலும், முந்நூறு எருமை மாடுகளையுங் கொலை

1. இருக்குவேதம், ரு, உகூ, ள, எ, அ.

செய்து பலியூட்டி ஆரியர் தம் தெய்வமாகிய இந்திரனுக்கு ஒருகால் வெறியாட்டு அயர்ந்தமை இதன்கண் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ? இங்ஙனமே வெள்ளாடு களுஞ் செம்மறிக்கிடாய்களும், எருதுகளும், ஆக்களும், குதிரைகளும் ஆரியரால் அளவின்றிக் கொல்லப்பட்டமை யினை இருக்கு வேதத்தின் முதன்மண்டிலம், ஐந்தாம்மண்டிலம், ஆறும்மண்டிலம், பத்தாம் மண்டிலங்களில் இடையிடையே காணலாம். இச் சிற்றுயிர்களையே யல்லாமல், தம்மை யொத்த மக்களையுங்கூட ஆரியர் கொலைபுரிந்து புருஷமேதம் செய்தமையுஞ் சதபதபிராமணத்தாற் புலனாகின்றது; கடைசி யாக ஓர்ஆண்மகனைக் கொன்று பலியூட்டினவன் சியாபர்ண சாயகாயனனே ஆவன் என்று சதபதபிராமணங் கூறுதல் காண்க.[1] இவ்வாறாகக் குடியுங் கொலையும் மலிந்த வெறியாட்டுச்சடங்குகள் கொண்டாடுவதைத் தவிர, அத் தீவினையை ஒழித்து எல்லா அருளும் உடைய ஒரு முழு முதற் கடவுளைத் தமக்கு இயன்றமட்டுமாவது வணங்குத லில் ஆரியர்க்குக் கருத்துச் செல்லாமை, அவர்கட்கு இன்றி யமையாததாகிய மீமாஞ்சை நூலாலும் நன்கு விளங்கும்; இம் மீமாஞ்சைநூல் முழுமுதற்கடவுள் என ஒன்று இல்லை என்று மறுப்பதோடு, பன்னூறு வகையவான இத்தகைய வெறியாட்டு வேள்விச் சடங்குகளை வாளா விரித்தோது தலும் யாம் கூறுவதன் உண்மையை நிலைநாட்டும். மேலும், ஆரியர் தாம் இயற்றும் இவ் வெறியாட்டு வேள்விச் சடங்கு களுக்குத் தமிழவேளாளர் இசையாமையை அவ்வாரியர் தாமே,

"இந்திரனே, நீ நின் துணைவருடன் சென்று நின்கையி லேந்திய குலிசப்படையாற் செல்வம்மிக்க தாசியரைத் தனியே கொல்கின்றாய்! சடங்குகள் புரியாமல், எமக்கு

---

1. இருக்குவேதம், க, ௱௲.

முன்னமே பழையராய் உள்ள அவர்கள் வான் நிலத்தினின்றும் பலமுகமாய்ச் சிதறியோடி அழிந்தார்கள்''[1] என்று இருக்குவேதத்திற் கூறுமாற்றால் அறிந்து கொள்க.

க௦. வேளாளர் ஆரியரை அருவருத்து ஆரியத்தில் அறிவுநூல்கள் இயற்றினமை

கொலை புலை தவிர்ந்த அருளொழுக்கத்தில் நிலைபெற்று நிற்கும் வேளாளர், கொலை புலை கட்குடி முதலிய தீவினைகளைப் பெருக்கி ஆரியர் கொண்டாடிய வெறியாட்டு வேள்விகளில் மிக வெறுப்புக்கொண்டு அவ் வேள்விகளை அழித்தற்கும், அவை செய்வதில் உறைத்து நின்ற ஆரியரோடு போர்புரிந்து அவரை அடக்குதற்கும் முன்னின்றமை ஒரு வியப்பன்று. இங்ஙனந் தாஞ்செய்த வெறியாட்டு வேள்விகளை அழித்தமைபற்றியே அவ்வாரியர் பெரிதுஞ் சினங்கொண்டு அவ் வேளாளரையும் அவருள் அரசரான வேளிரையுந் தாசியர், இராக்கதர், அசுரர் என்று இகழ்ந்துகூறி, அவரைத் தாழ்த்துதற்பொருட்டுப் பொய்யான பல புராண கதைகளையும் எழுதிவைப்பாராயினர். ஆரியர் இங்ஙனமெல்லாம் நூல்வழியாலும் பல கொடுமைகளைச் செய்துவரவே, அவர் எழுதிய அந் நூல்களின் பொய்ம்மையும் அவர்தம் பொருந்தாச் செயலும் எல்லார்க்கும் விளக்கல் வேண்டி, அவர்க்குரிய ஆரிய மொழியைத் தமிழவேளாளராகிய தாமுங் கற்றுக் கொலை புலை கட்குடி மறுத்த தமதுயர்வுந், தாம் வழிபடும் முழுமுதற் கடவுளாகிய சிவபிரான் அருட்சிறப்பும், அவனை யடைதற்குரிய மெய்

1. சதபதபிராமணம், ௬, ௨, க, ௩௯.

புணர்வின் மாட்சியுந் தெளித்து இருக்கு எசுர் சாம அதர் வண வேதப்பாட்டுகள் சிலவும், உபநிடதங்கள் சிலவும், சாங்கியம், நையாயிகம், வைசேடிகம், யோகம், வேதாந்தம் முதலிய ஐந்து மெய்யுணர்வு ஆராய்ச்சி நூல்களும், இதிகா சங்கள் புராணங்கள் சிலவும் இயற்றியிட்டார்கள். ஆரிய மொழியில் தமிழர் இயற்றிய இந் நூல்களினும் பாட்டு களினும், உயிர்களைக் கொன்று செய்யும் வேள்விச்சடங்கு களின் இழிபும், அவர் வணங்கிய இந்திரன் வருணன் மித்திரன் மருத்துக்கள் முதலான சிறுதெய்வங்களின் சிறுமையும், அவர் தம்மைத் தேவரெனச் சொல்லிக் கொள்ளும் 'அகம்பிரமச்' செருக்குரையின் இழுக்குந் தெரித்துக் கூறப்பட்டிருப்பதுடன், கொல்லாமை புலா லுண்ணாமை களியாமை என்னும் அறவேள்விகளின் உயர் வும், பிறப்பு இறப்பு இல்லாத் தனிமுதற்கடவுளான சிவத்தின் முழுமுதற்றன்மையும், பிறந்து நோயாலுங் கவலை யாலும் இடையிடையே மாய்ந்துபோகும் மக்கள் பிரமம் ஆதல் செல்லாமையும், அன்பும் அருளும் மெய்யுணர்வின் முற்றுப் பேறும் உடையராய்ச் சிவபிரான் திருவடித் தொண்டில் இடையறாது நிற்பாரே மீண்டு வாரா வீட்டு நெறி தலைக்கூடிச் சிவத்தோடு இரண்டறக் கலக்குமாறும் வற்புறுத்துச் சொல்லப்படுதல் பகுத்தாராய்ந்து கொள்க. இவ்வாறு ஆரியமொழியில் அதற்குரிய ஆரியரும் அதற்கு வேறான தமிழறிஞரும் இயற்றிய செய்யுட்களும் நூல்களும் ஒன்றோடொன்று விரவித் தலைமயங்கிக் கிடப்பினும், அவற்றுள் இவை ஆரியர் செய்தன, இவை தமிழர் செய்தன வென்று மேற்காட்டியவாற்றாற் பகுத்துணர்ந்து கோடல் எளிதேயாம். ஆரியர் செய்தவைகளில் ஆரியராகிய தம்மைப் பற்றிய உயர்வும், விலங்குகளைக் கொன்று வேட்கும் வெறியாட்டு வேள்விகளின் சிறப்பும், மயக்கந்

தருஞ் சோமச்சாற்றின் பெருமையும், இந்திரன் வருணன் முதலான சிறுதெய்வ வணக்கமும், தமக்குந் தம் இழி செயல்களுக்கும் உடம்படாத தமிழர்களை இகழும் இகழுரைகளும் முழுமுதற் கடவுளாகிய சிவபிரானைப் பழிக்கும் பழிப்புரைகளும், இன்னும் இவை போன்றவை களும் மலிந்துகிடக்கும். தமிழறிஞர் செய்தவைகளில் அன்பு அருள் என்னும் உயர்ந்த நெறிகளின் மாட்சியும், வெறியாட்டு வேள்விச்சடங்குகள் பயனிலவாதல் காட்டும் அறிவுரைகளும், உலகு உயிர் இறை என்னும் இவற்றின் உண்மைத் தன்மையை ஆராயும் ஆராய்ச்சிகளும், எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் சிவம் ஒன்றே என்னும் மெய் யுரையும், பிறப்பு இறப்புக் கவலைநோய் முதலியவற்றிற் கிடந்துழலும் புல்முதல் மக்கள் தேவர் ஈறுன எல்லா உயிர் களும் மாசு பொதிந்தனவாயிருத்தலின் அவை முதன்மை யிலவாதல் தெரிக்கும் உண்மையுரைகளும், அவை மலமாசு தீர்ந்து இறைவனைத் தலைக்கூடிநிற்கும் வகையாகிய தவநிலை களும், இன்னும் இவைபோல்வனவும் நிரம்பிக்கிடக்கும். இவ்விருவேறு அடையாளங்கள் கொண்டு ஆரிய மொழியில் ஆரியர் தமிழர் என்னும் இவ்விரு வேறு வகுப்பாரும் இயற்றிய செய்யுட்களையும் நூல்களையும் பிரித்து அறிந்து கொள்க.

இனி, மண் நீர் நெருப்புக் காற்று வான் என்னும் ஐம்பெரும் பொருள்களின் கலப்பாற் றோன்றிய இவ்வுலகங் களின் உள்ளும் புறம்புமாகிய எவ்விடங்களினும் இறைவன் எள்ளில் நெய்போற் கலந்து நிற்பனுயினும், மக்கள் தன்னை எளிதிற் கண்டு வழிபடுதற் பொருட்டு அவன் அனற் பிழம்பின் கண்ணே முனைத்துத் தோன்றுவன். அது பற்றியே,

"சுடர்கின்ற கோலந், தீயே யெனமன்னு சிற்றம் பலவர்."

என்று மாணிக்கவாசகப் பெருமானும்,

"பொங்கு அழல் உருவன் பூத நாயகனல்."

என்று திருஞானசம்பந்தப் பெருமானும்,

"எரி பெருக்குவர் அவ்வெரி ஈசனது
உருவருக்கமது ஆவது உணர்கிலார்."

என்று திருநாவுக்கரசு நாயனாரும்,

"அணுவாகி ஓர் தீயுருக்கொண்டு."

என்று (திருநனிபள்ளித் தேவாரம்) சுந்தரமூர்த்தி நாயனாரும் அருளிச்செய் திருக்கின்றனர். அனற்பிழம்பு இறைவனுக்குத் திருமேனியாய் நிற்றலின் உண்மையைச் 'சிவஞானபோத ஆராய்ச்சி'யில் விரித்து விளக்கியிருக்கின்றேமாகலின் அதனை அங்கே கண்டுகொள்க. இங்ஙனந் தீப்பிழம்பும், அத் தீப்பிழம்பின் வடிவாய் வானத்தின்கட் டிகழும் ஞாயிற்றுமண்டிலமும் இறைவற்குச் சிறந்த திருமேனியாதல் கண்டு, தீயினையும் ஞாயிற்றினையும் பண்டைக் காலந்தொட்டே தமிழ்முதுமக்கள் வழிபட்டு வருகின்றனர். ஆரியரும் அங்ஙனமே அவ் விரண்டனையும் வழிபட்டு வருவரெனின்; அவர் அவற்றையே தெய்வங்களாகக் கருதி வணங்குவரல்லது, அவற்றுக்கும் மேற்பட்ட முழுமுதற்கடவுள் ஒன்று உண்டென்றும், அவ்வொன்றே அவ் விரண்டிலும் ஏனை ஒளியுடைப் பொருள்களிலும் பிறவற்றிலும் ஊடுருவி விளங்குவதென்றும் ஒருசிறிதும் உணரார்; 'தீயை வளர்ப்பர், ஆனல் அது சிவபெருமான்றன் உருவ வகைகளில் ஒன்றாதலை அவர் உணர்ந்திலர்' என மேலெடுத்துக் காட்டிய திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த திருப்பாடலும் அறிவுறுத்துதல் காண்க. இங்ஙனமே,

"அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்கன் ஆவான் அரன்உரு அல்லனே."

என்று அந்நாயனர் மீண்டும் அருளிச் செய்யுமாற்ருல், ஞாயிற்றினை வணங்கும் ஆரியர் அஃது இறைவற்கோர் உடம்பாதலைச் சிறிதும் உணர்ந்திலரெனத் தெளிவித்தல் காண்க. ஆரியர் தீயினையும் ஞாயிற்றினையுந் தனித் தனித் தெய்வங்களாகக்கொண்டு வணங்காநிற்கத், தமிழரோ அவற்றை எல்லாம் வல்ல ஒரு முழுமுதற் கடவுளுக்குச் சிறந்த வடிவங்களாக மட்டும் வைத்து வழிபடாநிற்பர். ஆகவே, இருக்கு முதலான வேதங்களில் தீயையும் ஞாயிற்றையுந் தனித்தனித் தெய்வங்களாக வைத்து வணக்கவுரை கூறும் பாட்டுக்களெல்லாம் ஆரியராற் செய்யப்பட்டனவாகு மென்றும், அவை தம்மை இறைவன்றன் ஒளி வடிவங்களாக வைத்து வழிபடும் பாட்டுக்க ளெல்லாந் தமிழ்ச் சான்ருேராற் செய்யப்பட்டனவாகு மென்றும் பகுத்துணர்ந்துகொள்க. விசுவாமித்திரர் என்னுந் தமிழரச முனிவராற் செய்து சேர்க்கப்பட்ட **இருக்குவேத மூன்ரும் மண்டிலத்தில்** உள்ள **காயத்திரி** மந்திர மானது, ஞாயிற்று மண்டிலத்தின்கண் முனைத்து விளங்கும் **பர்க்கன்** என்னும் பெயருடைய சிவபிரான்மேற்ருய் விளங்கு தலே யாம் கூறும் உண்மைக்குச் சான்ரும் என்க.

இவ்வாருக, ஆரியரைத் திருத்தும் பொருட்டுத், தமிழ்ச்சான்ருேர் அவரோ டுடன்பழகி அவர்தம் ஆரிய மொழியையுங் கற்று, அவர் வணங்கிய தீயும் ஞாயிறும் என்னும் இரண்டின் வழியே சிவபிரானை வழிபடும் உயர்ந்த நெறியை அவர்க்கு உய்த்துணரவைத்துக் காட்டியும், அவ் வாரியர் அதிற் கருத்தில்லாதவராய், விலங்கினங்களைக் கொன்று அவற்றின் ஊனைத் தின்னும் வெறியாட்டு வேள்வி கள் புரிவதிலேயே முயற்சியுங் கருத்தும் உடையராய் நின்றனர். உயர்ந்த நுண்பொருள் உணர்ச்சியில் அவர்க்கு உள்ளஞ் செல்லாமையைக் கண்ட தமிழ்ச்சான்ருேர்

எப்படியாவது அவரை உய்விக்கவேண்டுமென எண்ணி, அவர்தங் கொடுந்தன்மைக் கேற்றதாக ஓர் உயர்ந்த கடவுள் வணக்கத்தை நிலைபெறுத்துவான் வேண்டிச் 'சீகண்ட உருத்திரர்' மேற் சில பதிகங்களுஞ் சில வழுத்துரைகளும் இயற்றி அவற்றையுஞ் சேர்த்து இருக்குவேதத்தை ஒழுங்கு படுத்தினர். 'சீகண்டஉருத்திரர்' நான்முகன் திருமால் காலருத்திரர் என்னும் மூவர்க்கும், இந்திரன் வருணன் மித்திரன் முதலான ஏனைத் தேவர்கட்கும் மேற்பட்டவ ராய்ச், சைவசமயத்தவரால் வணங்கப்படும் முதற்பெருந் தெய்வமாய் இருத்தலின், அவரை வணங்குதற்குப் புகுந்த வளவானே, ஆரியர் ஏனைச் சிறு தெய்வவழிபாட்டையும் உயிர்க்கொலையையும் விட்டுப் பையப் பையத் தமது தமிழ்க் கொள்கையைத் தழுவுவரெனத் தமிழ்ச் சான்றோர் எண்ணி னர். எண்ணியும், இவையெல்லாஞ் செய்துவைத்தும் என்! ஆரியர் இன்றுவரையிற் றமது சிறுதெய்வ வழிபாட்டை விட்டவர் அல்லர். இன்னும் உற்றுநோக்கின், அவர் அச் சிறுதெய்வ வழிபாட்டினுந் தாழ்ந்த மக்கள் வழிபாட்டிலே இப்போதும் மிகுதியாய் இறங்கிவிட்டனர்; இராமன், கண்ணன் முதலான அரசர்களையே மிக வணங்குவதோடு, "தம்மின்வேறாகக் கடவுள் ஒன்றில்லை, தாமே கடவுள்," என்னும் ஒரு பொல்லாத கொள்கையையும் விடாப்பிடி யாய்க் கைக்கொண்டு ஒழுகி வருகின்றார்கள். அதுமட்டுமோ, சீகண்ட உருத்திரரையுஞ் சூத்திரர்க்குரிய சூத்திரதெய்வ மென ஒதுக்கிவைத்துவிட்டார்கள்!

கக. மாயாவாதி ஒருவர் உருத்திரவழிபாடு தமிழரதன்று என்றது பொருந்தாமை

உண்மை யிவ்வாறிருக்க, 'எல்லாம் பொய் நானே கடவுள்' என்னும் மாயாவாதக் கொள்கையுடைய தமிழர் ஒருவர், உருத்திர வழிபாடு ஆரியர்க்கே உரியதெனவும், அதனை ஆரியரே தமிழர்க்குக் கற்பித்தாரெனவும், இந்திர வருண வழிபாடுகளையே ஆரியர் தமிழரிடமிருந்து பழகிக் கொண்டாரெனவுஞ் சான்றுகள் காட்டாது தமக்குத் தோன்றியவாறே கூறினர். உருத்திரவழிபாடு ஆரியர்க்கே உரியதாயின், இருக்குவேதத்திலுள்ள முழுத்தொகைப் பதிகங்கள் ஆயிரத்து இருபத்தெட்டில் இருநூற்றைம்பது பதிகங்கள் இந்திரன்மேலும், இருநூறு பதிகங்கள் அக்கினி மேலும், நூறு பதிகங்கள் சோமப்பூண்டு சோமபானத்தின் மேலும், ஏனைய ஏனைத்தேவர்கள் மேலுமாக, அவற்றுள் மூன்று நான்கு பதிகங்களே 'உருத்திரர்' மேலனவாய் இருத்தல் என்னை? உருத்திரர்மேல் மூன்று நான்கு பதிகங்கள் அல்ல, எத்தனையோ பல இருக்கு வேதத்தில் உள்ளனவென்று கூறும் அவர் அப் பதிகங்கள் இவ்விவை யென எடுத்துக்காட்டாமையே அவரது கூற்று உண்மை யன்றென்பதனை நன்கு புலப்படுத்தும். ஏனைத் தேவர்கள் மேல், முதன்மையாய் அக்கினிமேற், பாடப்படும் பதிகங்களில் இடையிடையே சிற்சில இடங்களில் உருத்திரப் பெயர் வருமாயினும், ஆண்டது அக்கினியையும் உருத்திரகணங் களையும், ஒரோவழிச் சீகண்டருத்திரரையுங் குறியாநிற்கும். அவையெல்லாந் தமிழ்ச் சான்றோராற் சேர்க்கப்பட்டனவே யாம்.

இன்னும், உருத்திரவழிபாடு ஆரியர்க்கே உரியதாயின் வடநாடு தென்னாடுகளில் அவ் வேதங்களை நன்கு கற்

றுணர்ந்த ஆரியப் பார்ப்பனர் அனைவரும் அவ்வுருத்திரனைச் சூத்திர தெய்வமென வழிபடாமல் ஒதுக்கி, இராமன் கண்ணன் நாராயணன் முதலான ஏனையோரையே வழிபடுதல் என்னை? தென்னாட்டில் உள்ள தமிழர் அவ் வழிபாட்டிற்கு உரியரல்லராயின், அவர் தென்னாடெங்கணும் பல்லாயிரந் திருக்கோயில்கள் பண்டுதொட்டு அமைத்து அவற்றின்கண் அவ்வுருத்திரனை வழிபட்டுவருதலென்னை? இந்திரன் வருணன் முதலான சிறுதெய்வ வணக்கமே தமிழர்க்கு உரியதாயின், தமிழ்நாட்டில் ஓரிடத்தேனும் அத் தெய்வங்களுக்குத் தனிக்கோயில்கள் இல்லாமையும், அவற்றை அவர் வணங்காமையும் என்னை? பண்டைநாட் டொட்டுத் தமிழ் மேன்மக்கள் சிவபிரானையே வழிபட்டு வந்தனர் என்பதற்குக், குமரிநாடு கடல் கொள்ளப்படுமுன் பாடப்பட்டதாகிய தமிழ்ச் செய்யுள் ஒன்றில்,

"பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே."[1]

எனப் போந்த குறிப்பும், அந்நாள் முதல் இந்நாள் காறும் ஒரு தொடர்பாகப் போதருகின்ற சிவ வணக்கச் செய்யுட்களுஞ், சிவபிரான் திருக்கோயில்கள் திருவிழாக்கள் முதலியவற்றின் மாட்சியும் நன்கு சான்றுபகர்கின்றனவல்லவோ? சிவபிரானோடு ஒப்பவைத்து ஏனைச் சிறு தெய்வங்களைத் தமிழ் மேன்மக்கள் வழிபட்டு வந்தனர் என்பதற்கு ஒரு தினையளவு சான்றும் இல்லாதிருக்கத், தாம் தமிழரது வழிபாட்டை முற்று முணர்ந்தார்போற் செருக்கிப் பொய்யுரை கூறித் தமிழரை இழித்துரைக்கப் புகுந்தது அறிவுடையாரால் நகையாடி விடுக்கற் பாலதாமன்றி மற்றென்னை? அற்றேற், காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரனுக்கு விழா எடுத்தமையும், நெய்தல்நில மக்கள் வருணனை வழிபடுத

1. புறநானூறு, சு.

லும் பழைய தமிழ்நூல்களிற் காணப்படுதல் என்னை யெனின்; மழைவேண்டியுங் கடல் நீரால் இடர்நேராமைப் பொருட்டும் இந்திரனையும் வருணனையும் மருதநில நெய்தல் நில மக்கள் வணங்கும் வணக்கம் அவ்வந் நிலத்துக் குடி மக்களாற் செய்யப்படுவ தல்லது, தமிழ் நிலத்துள்ள எல்லா மக்களும் அவருள் உயர்ந்தாருஞ் செய்வதொன்றன்று. இஞ்ஞான்றும் இழிந்தாரான தமிழ்க் குடிமக்கள் செய்யும் மாரி மதுரைவீரன் முதலான சிறுதெய்வ வணக்கத்தை மட்டுங் கண்டு, ஆங்காங்குள்ள சிவபிரான் திருக்கோயில் களையும் அவற்றின்கட் டமிழ் மேன்மக்கள் செய்து போதரும் வழிபாடுகளையுங் காணப்பெறாதவேற்றுநாட்டார் ஒருவர் தமிழர்க்குரியது இழிந்த சிறுதெய்வ வணக்கமே என்று கூறிடுவராயின், தமிழ்மேன்மக்கள் அவரது மடமைக்கிரங்கி அவரை நகையாதொழிவரோ? இங்ஙனமே பண்டைத் தமிழ் மேன்மக்களை இழித்துரைக்கும் இப் போலித்தமிழர் கூற்றும் நகையாடி விடுக்கற் பாலதாம் என்க. பண்டைநாளில் தமிழ்மக்களால் வணங்கப்பட்ட தெய்வங்களுள்ளும், அத் தெய்வங்கள் உறையுங் கோயில்க ளுள்ளுஞ் சிவபிரானும் அவனுறையுந் திருக்கோயிலுமே முதன்மையாக வைக்கப்பட்ட உண்மைக்குப்,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்."

எனச் சிலப்பதிகாரத்திற்[1] சிவபிரான் கோயில் முதலிலும், இந்திரன் கோயில் கடையிலுங் கூறப்பட்டிருத்தலே சான் றாம். இதனோடு ஒப்பவே மணிமேகலையிலும்,

1. இந்திரன் விழவூரெடுத்த காதை, ௧௬௯—௧௭௩.

"நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறுக."[1]

என்று சிவபிரானே முழுமுதற் கடவுளாக முதற்கண் வைத்து ஓதப்பட்டிருத்தல் காண்க.

அஃதொக்கும், இந்திரன் வருணன் முதலான ஆரியர்க்குரிய தெய்வங்களைப் பண்டைக் காலத்திலேயே தமிழ் மக்களும் வணங்கலாயினது என்னையெனின்; ஆரியர் வணங்கிய இந்திரனுந் தமிழர் வணங்கிய இந்திரனும் ஒருவர் அல்லர். ஆரியர்க்குரிய இந்திரன் இடி மழை மின்னல் முதலியவற்றிற்குரிய தெய்வமாதலோடு, அவர்தம் பகைவரோடு போராடுங்கால் அவர்க்கு உதவியுந்துணையுமாய் நின்று அவர்க்கு வெற்றியைத் தருபவனாகவும், அவர்தருஞ் சோமச் சாற்றையும் விலங்கி னிறைச்சியையும் நிறைய உட்கொண்டு அவர் வேண்டிய நலங்களையெல்லாம் அவர்க்கு விளைப்பவனாகவுஞ் சொல்லப்படுகின்றான். தமிழர் வணங்கிய இந்திரனோ வயலும் வயல்சார்ந்த இடமுமாகிய மருதநிலத்தில் உள்ள உழவர்களால் மழையின் பொருட்டு மட்டும் வேண்டி வணங்கப்பட்ட மழைக்கடவுள் ஆவன்; மழையின் பொருட்டாகவன்றிவேறெந்த நன்மைப்பேற்றின் பொருட்டாகவேனுந் தமிழர்களால் அவன் வணங்கப்பட்டவன் அல்லன். இருக்கு வேதத்திலுள்ள பாட்டுகளில் மூன்றில் ஒருகூறு இந்திரன்மேற் செய்யப்பட்டிருத்தல் போலத், தமிழ்நூல்களில் எங்கும் ஒரு பாட்டேனும் இந்திரன்மேற் செய்யப்படவில்லை. பழந்தமிழ் நூல்களில் உள்ள வணக்கச் செய்யுட்களெல்லாஞ் சிவபிரான்மேலும் முருகக்கடவுள் மேலுந் திருமால் காடுகிழாள் முதலான ஏனைச் சில தெய்வங்கண்மேலுமே பாடப் பட்டனவாய் இருக்கின்றன. அதுவேயுமன்றித், தொல்காப்பியம் முதலான மிகப்பழைய

1. மணிமேகலை, விழாவறை காதை, ௫௪ - ௫௫.

தமிழ்நூல்களில் 'இந்திரன்' என்னுஞ் சொல்லே காணப் படவில்லை. மருதநிலத்து மக்களாற் கொண்டாடப்படுந் தெய்வம் 'வேந்தன்' என்று சொல்லப்படுகின்றது; "வேந் தன்மேய தீம்புனல் உலகமும்"[1] என்று ஆசிரியர் தொல் காப்பியனர் கூறுதல் காண்க. தமிழர் மழையைவேண்டி வணங்கிய 'வேந்தனும்' ஆரியர் மழையின் பொருட்டாக வும் வணங்கிய 'இந்திரனும்' மழைக்கடவுளாதல் பற்றிப் பிற்காலத்தவரால் அவ் விருவரும் ஒருவராகக் கொள்ளப் படுவாராயினர்; அவ்வாறு கொள்ளப்படினுந் தமிழர்க்குரிய வேந்தனுக்கும், இருக்குவேத ஆரியர்க்குரிய இந்திரனுக்கும் ஏதோர் இயைபும் இல்லையென்பது அவ் விருவர்தம் பழைய நூல்களையும் நன்காராய்ந்து பார்க்கும் நடுநிலையாளர்க்கும் நன்குவிளங்கும். பிற்காலத்துப் புராண நூல்களிற் சொல் லப்படும் இந்திரனுக்கும் இருக்குவேதத்திற் சொல்லப்படும் இந்திரனுக்குங் கூடச் சிற்சில வகைகளிற் றவிர மற்றப் பல வகைகளில் ஏதோர் ஒற்றுமையும் இல்லை. உற்று ஆராயுங் கால் தமிழர்க்குரிய 'வேந்தன்' என்போன், தமிழர்க்குள் முதன்முதற் றலைவனாய்த் தோன்றி, மழைபெய்யுங் கால மும், அம் மழையினுதவியாற் பயிர் செய்தற்கேற்ற வளவிய நிலமும், அந் நிலத்தைத் திருத்திச் செவ்வனே பயிர் விளைக்கும் வகைகளும் நன்குணர்ந்து உழவுதொழிலைக் கற்பித்துத் தமிழ்மக்களை மேல்நிலைக்குக் கொணர்ந்தவனா தல் வேண்டுமென்பது புலப்படும். நன்றிசெய்த முன் னோரை நினைந்து அவர்களைப் பரவுதல் தமிழர்க்கு இயற்கை யாதலால், அவர் கால்வழியில் வந்த மருதநிலத்து உழவர் முதல்வேந்தனை அவனது ஆவியை வேண்டி வணங்குவா ராஞர் என்க. மருத நிலத்தின்கண்ணேதான் அரசனும் அரச வாழ்க்கையும் அவனது அரண்மனை வாய்ந்த நகரமும்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், ரு.

இருந்தமை பண்டைத் தமிழ்நாட்டு வழக்கு என்பதனையும் மேலே காட்டினும். அங்ஙனந் தமிழர் தம் முதல்வேந்தனை வணங்கினும் அவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டிலர் என்பது யாம் மேலே காட்டியவாற்றால் நன்கு புலனும்.

இனி, ஆரியர் வணங்கிய 'வருணனும்' வேறு, தமிழர் வணங்கிய 'வருணனும்' வேறு. ஆரியர்க்குரிய 'வருணன்' வானின் தெய்வமாக இந்திரனோடு ஒப்பவைத்துச் சிறந் தெடுத்து அவரால் வணங்கப்படுவோன் ஆவன்; இருக்கு வேதத்தில் இவன்மேற் பாடப்பட்ட பதிகங்கள் பல. தமிழர்க்குரிய வருணனோ தமிழருட், கடலுங் கடல் சார்ந்த இடமுமாகிய நெய்தல் நிலத்திலுள்ள மக்களால் மட்டுங் கடற்றெய்வமாக வைத்து வணங்கப்படுபவன் ஆவன். இருக்குவேதத்திலுள்ள 'வருணன்' கடற்றெய்வமாக ஒரோ வொருகால் அருகிச் சொல்லப்படினும், பிற்காலத்துப் புராணங்களிற் சொல்லப்படும் வருணனுக்கும் இருக்குவேத வருணனுக்கும் ஏதோர் இயைபுங் கண்டிலேம். தமிழ வருணனும், ஆரிய வருணனுஞ் சொல்லால் ஒத்தல்பற்றி அவ் விருவரையும் ஒருவரென்றல் ஆராய்ந்துணராதார் கூற்றும். தமிழரில் நெய்தல்நில மாக்கள் வருணனை வணங் குதல் தமக்கு வலைவளம் வாய்த்தற் பொருட்டுங், கடல் மேற்செல்லுந் தமக்குத் தீங்குநேராமைப் பொருட்டுமே யாம். இத்துணையே யன்றித் தமிழரில் ஏனையோர் வருணனை ஒரு பெருந்தெய்வமாக வைத்து வழிபட்டவர் அல்லர். அவ் வருணனுக்குத் தனிக்கோயில்களாதல், அவனை வழுத்திய பாடல்களாதல் தமிழ்நாட்டினுந் தமிழ் மொழியினும் இல்லை ஆகையால், ஆரியர் தமக்குரிய பெருந்தெய்வங்களாக வைத்துப் பலவாற்றானுங் கொண் டாடிய இந்திர வருண வழிபாடுகளை, அங்ஙனம் அவற்றைக் கொள்ளாத தமிழர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்க

ளென்பதூஉம், தமிழர்களில் ஒவ்வொரு நிலத்து மக்கள் வணங்கிய வேந்தனும் வருணனும், ஆரியர் எல்லாரும் வணங்கிய இந்திரனும் வருணனுந் தம்மிற் பெரிதும் வேறு பாடுடையராயிருப்ப, அவ் விருவரும் ஒரு திறத்தினரேயா மெனக் கூறுதலும் பகுத்துணர்வில்லாதார் கூறும் போலி யுரையாமென்று தெளிக.

இனி, ஆரியர் தமிழரோடு கலந்தபின் அவர்க்குரிய இந்திர வருண வழிபாடுகளைத் தாம் கற்றுந், தமக்குரிய உருத்திர வழிபாட்டை அவர்க்குக் கற்றுக்கொடுத்தும் வந்தது உண்மையாயின், தமிழர் இருந்த இவ் விந்தியநாட் டுக்குள் வராமல், அதற்குப் புறம்பே தம்மினத்தவரான பாரசிகர் கிரேக்கர் முதலியோருடன் ஆரியர் அயல் நாடு களிற் குடியிருந்த அக் காலத்தில் அவரெல்லாருமாய்ச் செய்தது உருத்திரவழிபாடா யிருத்தல் வேண்டும்; தமிழர்க்குரியதாயின் இந்திரவருண வழிபாட்டைப், புறம்பேயிருந்த அவ்வாரிய வகுப்பினர் அந் நாளிற் சிறிதும் அறியாராயிருத்தலும் வேண்டும். மற்று, அவ்வாரிய வகுப்பினரான பண்டைப் பாரசிகரின் அவஸ்தா என்னும் நூலையுங், கிரேக்கருடைய பழைய நூல்களையும் ஆராய்ந்து பார்ப்பின் அவற்றின்கண் உருத்திர வழிபாடு ஒருசிறிதுங் காணப்படாமையின், அவ் வழிபாடு பண்டை யாரியர்க்கே உரியதென்பார் உரை பெரும் பிழைபாட்டுரையேயாம். இன்னும், இந்திரனுக்கும் வருணனுக்கும் உரிய பெயர் களாக இருக்குவேதத்தில் வழங்கும் 'விருத்திரகன்,' 'அசுரன்' என்னுஞ் சொற்கள், பாரசிகர்க்குரிய பழைய வேதமாகிய அவஸ்தா என்னும் நூலிற் காணப்படுவதோடு, 'வருணன்' என்னுஞ் சொல்லுஞ் சிறிது திரிபோடு கிரேக்க ருடைய பழைய நூல்களிலும் வழங்குகின்றது. இங்ஙனமே ஆரியரெல்லார்க்கும் பொதுவாக உரிய தெய்வங்கள், பழக்க

வழக்கங்கள் முதலியவற்றின் பெயர்கள் இருக்குவேத ஆரியர்க்கும் பாரசிகர் முதலான பழைய ஆரியவகுப்பினர்க்கும் பொதுவாயிருத்தல் கண்டுகொள்க. அவையெல்லாம் ஈண்டெடுத்துரைப்பின் இது மிக விரியும். இங்கே காட்டினவை கொண்டு இருக்குவேதத்திற் சொல்லப்பட்ட இந்திர வருண வழிபாடுகள் ஆரியர்க்கே உரியனவாமென்றும், அதில் இடையிடையே புகுத்தப்பட்ட உருத்திரவழிபாடு தொன்றுதொட்டுத் தமிழ் நன்மக்கட்கே உரியதாமென்றும் பகுத்துணர்ந்துகொள்க.

கஉ. நடுநிலையுடைய ஐரோப்பிய ஆசிரியர் உருத்திரவழிபாடு தமிழரதென்றமை

இக் கோட்பாடு யாம் மட்டும் புதிதாகக் கூறுவதன்று, வடமொழி நூல்களை நடுநிலைமையோடு எழுத்தெண்ணிக் கற்று அவற்றின்கண் நிகரற்ற புலமையுடையராய் விளங்கும் ஐரோப்பிய அறிஞரும், ஆரிய வேதங்களின் இடையிடையே காணப்படும் உருத்திர வழிபாடு சிவவழிபாடுகள் பண்டு தொட்டு ஆரியர்க்கு உரியன அல்லவென்றும், அவை தமிழர்பால் நின்றும் ஆரியர் கைக்கொண்டனவா மென்றும், இந்திரவருண வழிபாடுகளே ஆரியர்க்கு உண்மையில் உரியனவாமென்றும் நடுநிலைபிறழாமல் உண்மையை உள்ள வாறே ஆராய்ந்து காட்டி விளக்கியிருக்கின்றார்கள். அவையெல்லாம் ஈண்டு எடுத்துக் காட்டலுறின் இது மிகவிரியும். [1]மாக்ஸ்மூலர், மியூர், டெய்லர், வீபர், ராகொசின், கிரிபித் மாக்டனல் முதலான மிகச் சிறந்த வடநூற் புலவர்கள்

1. MaxMuller, Muir, Taylor, Weber, Ragozin, Griffith, Macdonell.

எழுதியிருக்கும் அரும்பெரு நூல்களில் அவற்றின் பரப்பைக் கண்டுகொள்க.

இவ்வைரோப்பிய அறிஞர்க்குள்ள ஆராய்ச்சித்திறத்தி லும் வடமொழிப் புலமையிலும் நூறுயிரத்து ஒருசிறு கூறேனும் வாய்ப்பப் பெருதார் தாமுந் தமது அறியா மையையே அறிவாகப் பிழைபடக் கருதி அவ்வைரோப்பியர் செய்த ஆராய்ச்சிகளையெல்லாம் பிழையென எளிதாகச் சொல்லிவிடுவர். இவ் இந்தியநாட்டிற் பிறந்து, ஒவ்வொரு கோட்பாட்டிற் குரியராய், ஏனைக் கோட்பாடுகளை முற்றும் இகழ்ந்து, ஏனையோர் கூறுவனவற்றை நடுவுநின்று ஆராய்ந்து உண்மை கண்டறியும் வேட்கையிலராய்த், தாந் தாம் பிடித்ததனையே நிலைநாட்டும் பொய்ப்பற்று உடைய நம் இந்தியநாட்டுப் புலவர்களிற் பெரும்பாலார் ஆரிய வேதங்கள் உபநிடதங்கள் முதலியவற்றின் பொருள்களை நடுநின்று கண்டு உண்மையை உள்ளவாறு உரைக்கும் நீரர் அல்லர். ஆரிய வேதங்களுக்குச் சொற்பொருள்களும் உரைகளும் எழுதிய யாஸ்கர், சாயனர், மகீதரர், அங்வதர் முதலியோரும், உபநிடதங்கள் வேதாந்த சூத்திரங்கள் முதலியவற்றிற்கு உரைகள் எழுதிய நீலகண்டர், சங்கரர், இராமாநுஜர், மத்வர் முதலியோரும், பிற்காலத்தில் இவை தமக்கு உரைகளும் விளக்கங்களும் வரைந்த தயாநந்த சரசுவதி, ராசாராம் மோகன்ராய் முதலியோருந் தாந் தாம் உரைவகுத்தற் கெடுத்த நூற்பொருள்களை நடுநின்று ஆராய்ந்துகண்டு கூருமல், தாந்தாம் வேண்டிய பொருள் களை நுழைத்து, ஒருவரோடொருவர் பெரிதும் மாறு கொண்டு உரையுரைத்தலைச் சிறிது ஆராய்ச்சியுடையாரும் நன்கு உணர்ந்துகொள்வர்.

நிலனூல், வான்நூல், மொழிநூல், உயிர்களின் தோற்றவளர்ச்சிநூல், மக்கட்டோற்றநூல், மனநூல் முத

லான பல்வகை நூலுணர்ச்சியினும் ஒப்புயர்வில்லாப் புலமையுடையராய் விளங்கும் ஐரோப்பிய அமெரிக்க அறிஞர்களில் வடமொழியையும் ஆராய்ந்து உண்மை காணப் புகுந்த புலவர்களே, நம் இந்திய உரைகாரரைவிட அம் மொழிநூற் பொருள்களின் உண்மையை உள்ளவா றறிந்து உரைக்கும் நீரராவர். இவ் விருதிறத்தார் உரைகளையும் ஒத்துநோக்கிப் பயில்வார்க்கே யாம் கூறுவதன் உண்மை விளங்கும். 'யாமே பிரம மாதலால் எம்மிடத்தே எல்லா நூலுணர்ச்சியும் உள்ளன; யாம் பிறர் நூல்களை உணர்தல் வேண்டாம்' என்று கூறித் தமதறியாமையையே அறிவெனக் கருதி இறுமாந்திருப்பார்க்கு எத்துணை உயர்ந்த அறிவுநூலும் வேண்டப்படுவதில்லை. அத்தன்மையினார்க்கு யாம் கூறும் உண்மையுரைகள் ஏறுவாதலால், அவரைவிடுத்து ஏனை அறிவுவேட்கையுடையார் பொருட்டே யாம் இஃது எழுதவேண்டிற் றென்க. இங்ஙனம் யாம் எழுதியது கொண்டு ஐரோப்பிய அமெரிக்க அறிஞரே இத் தகைய ஆராய்ச்சியிற் சிறிதும் பிழைபடுதல் இல்லாதவர் என்று கொள்ளற்க. அவர் வடமொழியையும் வடமொழி நூல்களையும் ஆராய்ந்த அளவுக்குப் பழைய செந்தமிழ் மொழியையும் அதில் எழுதப்பட்ட நூல்களையும் நன்கா ராய்ந்து பாராமையால், தமிழரின் பண்டை வழக்க வொழுக்கங்களையுங் கடவுள்வழிபாட்டினையும் ஒரோ விடத்து இகழ்ந்து கூறியும் பிழைபடுவர். ஆயினும், அது பற்றி அவர் இகழப்படார். ஏனெனின், நம் இந்தியநாட்டுப் புலவர்போற், செருக்கும் பொய்ப்பற்றும் உடையராய் நூற்பொருள்களைத் தத்தமக்கு வேண்டியவாறே திரித்து உரையாமல், அவ் அறிஞர் தாம் செய்யும் நடுநிலை ஆராய்ச்சியில் தாம் அறிந்தவற்றை அறிந்தவாறே திறப்பாக வெளியிட்டு உண்மைவளர்ச்சிக்கு இடஞ்செய்தலான் என்க.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப் பொருள், மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்று தெய்வத் திருக்குறள் கட்டளையிடுமாறே, வெள்ளைக்காரரேனும் இந்தியரேனுங் கூறுவனவற்றை நடுநின்று ஆராய்ந்து எவர் கூற்றில் எஃது உண்மையோ அதனைக் கைக்கொள்ளவேண்டு வதாயிருக்கப், பல்வகை நுண்ணிய ஆராய்ச்சியிலுஞ் சிறந்து விளங்கிவரும் வெள்ளைக்காரர் கூறும் உறுதிப்பொருள்களை இகழ்ந்து, அவருடைய ஆராய்ச்சியிலும் அறிவிலும் ஒரு தினையளவுகூட இல்லாத நம் இந்திய மக்களிற் பெரும் பாலார் தம்மைத் தாம் உயர்த்துரைத்தல், "கூவல் ஆமை குரைகடல் ஆமையைக், கூவலோடு ஒக்குமோ கடல்" என்று கூறுதற்கே ஒப்பாம்.

இந்தியர் கல்லை வணங்குகிறார்களென்று வெள்ளைக் காரர் அவரது கடவுள்வழிபாட்டை இழித்துரைப்பதாக மாயாவாதியார் கூறினர்; வெள்ளைக்காரர் எல்லாரும் அங்ஙனம் இகழ்ந்து கூறுபவர் அல்லர். மாக்ஸ்மூலர் பல இடங்களில் இந்தியர் கல்முதலிய திருவுருவங்களிற் செய்யும் வழிபாட்டின் கருத்தையும் மேன்மையையும் நன்கு விளக்கியிருக்கின்றனர்.[1] அமெரிக்காவிற் பேரறிஞராய் விளங்கிய உவில்லியம் ஜேம்ஸ் என்பவர் திருக்கோயில் வழி பாட்டின் இன்றியமையாமையை வற்புறுத்திப் பேசி இருக் கின்றார்.[2] ஆதலால், இம் மாயாவாதியார் கூற்று வெறும் பொய்யேயாம். இம் மாயாவாதியாராற் கொண்டாடப்படுந் தயாநந்த சரசுவதி சுவாமிகள் நம்மனோர் பண்டுதொட்டுச் செய்துபோதருந் திருவுருவ வழிபாட்டைப் பெரிதும்

1. Prof. Max Muller's 'Six Systems of Indian Philosophy,' p. 216.

2. Prof. W. James' 'The Varieties of Religious Experience,' Lecture XIX.

இகழ்ந்து ஒதுக்கவில்லையா? தயாநந்த சரசுவதி வட மொழியில் வல்லரேனுங், தமிழ்நூல் உணர்ச்சி யில்லாதவ ராகலின், தம்முடைய கோட்பாட்டுக்கு இணங்க இருக்கு வேதப் பாட்டுகள் பலவற்றின் உண்மைக் கருத்தைத் திரித்துத் தாம் வேண்டியவாறே அவற்றிற்கு உரைகள் எழுதினர்; அவர் தமிழராற் செய்யப்பட்ட வடமொழிச் சாங்கியநூல் உணர்ச்சிகொண்டு சைவசித்தாந்தத்தோடு ஒத்த கோட்பாடுகளைக் கண்டறிந்து, சங்கராசிரியர் கட்டிய 'மாயாவாத வேதாந்தத்தைத்' தகர்த்தெறிந்த பேரறிஞரே யாயினுந், தமிழ் நூலுணர்ச்சியுந் தமிழரின் நுண்ணறிவு விழுப்பமும் அறியாதவராகலின் ஒரோ விடங்களிற் சைவ சித்தாந்தத்திற்கு ஒவ்வாதவற்றையுங் கூறி இழுக்குவர். ஆதலால், தயாநந்த சரசுவதிசுவாமிகள் கூறுவனவெல் லாம் ஆராயாமற் கைக்கொள்ளற்பாலன அல்ல.

இனிப், 'பிரம சமாசத்தைத்' தோற்றுவித்த ராசாராம் மோகன்ராய் என்பவர் வடமொழிநூல்களில் மிக வல்லுநரா யிருந்துந், தமிழ் நூலறிவு பெறாதவராகலின், அவரும் நம்ம னோர் செய்யுந் திருவுருவ வழிபாட்டை இகழ்ந்தொதுக்க வில்லையா? நம் இந்திய நாட்டவரிலேயே இங்ஙனம் நாம் செய்யுந் திருவுருவ வழிபாட்டை இகழ்பவர் பலராயிருக்க, வெள்ளைக்கார அறிஞரே அதனை யிகழ்பவர் என்று அவர் மேற் பழிசுமத்துவது பெரிதும் ஏதமாமென்க. எனவே, பல்வகை நூல் உணர்ச்சியிலும் மிக்காராய், அவ் வுணர்ச்சி வலியால் உலகத்திற்குப் பல அரும்பெரு நன்மைகளை விளைத்துவரும் வெள்ளைக்கார அறிஞரின் நடுநிலையாராய்ச்சி யுரைகள் நம்மனோராற் பெரிதுங் கைக்கொள்ளத் தகுவ னவே யல்லாமல் இகழ்ந் தொதுக்கற்பாலனவல்ல வென்று கடைப்பிடிக்க.

கங. உருத்திரனிலுஞ் சிறந்த சிவத்தைத் தமிழர் மறைத்து வைத்தமை

இனி, உருத்திர வழிபாட்டினுஞ் சிறந்த சிவ வழிபாட்டைத் தமிழ்நன்மக்கள் இருக்குவேதத்தின்கட் புகுத்துச் சொல்லாமை என்னையெனின்; உயிர்க்கொலையாகிய கொடுஞ் செயலைப் புரிந்து, அதற்கேற்ற இந்திரன் வருணன் மருத்துக்கள் முதலான கொடிய சிறு தெய்வங்களை வணங்கி வெறியாட்டு வேள்விகள் புரிந்துவருவாரான ஆரியர்க்கு, அன்பும் அருளும் இன்பமுமே உருவான சிவத்தின் வழிபாட்டைக் கற்பித்தால் அதில் அவர்க்குக் கருத்துச் செல்லாது. அதுபற்றியே அம் முழுமுதற் கடவுள் வணக்கத்தை ஆண்டுச் சொல்லாமல், அக் கடவுள் அருள்வழி நின்று அழித்தற்றொழிலைச் செய்வாரான சீகண்ட உருத்திரரின் வணக்கத்தை மட்டும் ஆண்டுச் சேர்த்தார்கள். அவரவர்தம் மனநிலையும் அறிவுநிலையும் அறிந்து அவ்வவற்றிற்குத் தக்கதாக மெய்ப்பொருள்களைப் படிப்படியாக அறிவுறுத்தி, அவரவரை அவ்வாற்றான் மேனிலைக்குக் கொண்டு வருதலே மெய்யுணர்வுடைய தமிழ்ச்சான்றோர் கோட்பாடு. இம் முறையால், இந்திரன் வருணன் முதலிய ஏனைக் கடவுளர் எல்லாரினும் உயர்ந்த சீகண்ட உருத்திரரை வணங்குவார் அதனால் மெய்யுணர்வு பிறந்து, அவர்க்குமேற்பட்ட மகேசுவரர் சதாசிவரை வழிபட்டு, அதன்பின் மலமாசு தீர்ந்து, அவர்க்கு மேற்பட்ட முழுமுதற் கடவுளாகிய சிவத்தினைத் தலைக்கூடி அழியாப் பேரின்பத்தில் வைகுவர். இப் படிவழிமுறைதான் சைவசித்தாந்தத்தால் உணர்த்தப்பட்டதாகும். சீகண்ட உருத்திரர் சைவசமயத்தவரால் வணங்கப் படுபவரேனும், அவர் சைவசித்தாந்த முடிபொருளாய் உள்ள முழுமுதற் கடவுளாகிய சிவம்

அல்லர். இவ்வுண்மை சிவஞானமாபாடியத்திலுங் காண்க. இருக்குவேதப் பாட்டுகளில் மிகப் பழையனவற்றிற்குரிய பழைய ஆரியர்க்குக் கற்பிக்கப்பட்ட உருத்திரர் சீகண்ட உருத்திரரே யல்லாமற் சிவபெருமான் அல்லர் என்பதற்கு, அவர்மேற் பாடப்பட்ட பழைய இருக்குவேதப் பாட்டுகளில் எங்கும் அவர்க்குச் சிவன் என்னும் பெயர் சொல்லப்படாமையே சான்றும். அப் பழைய ஆரியர் தாழ்ந்த மனநிலையுடையரா யிருந்தமையின், அவர்க்கு அறிவுறுத்தப் புகுந்த தமிழ்ச்சான்றோர் சீகண்டருத்திரர்க்கு மேற்பட்ட கடவுள் நிலையை உணர்த்துதற்கு ஒருப்பட்டிலர். சீகண்டருத்திரர்க்கு மேற்பட்ட 'மகேசுவரர்' 'சதாசிவர்' முதலிய தலைமைக் கடவுளரை யாதல், அவர்க்கும் மேற்பட்டு எப்பொருளுங்கடந்து நிற்குஞ் சிவத்தையாதல் இருக்குவேதப் பழம்பாட்டுகள் சிறிதும் உரையாமையே இதற்குச் சான்றும் என்க.

அற்றன்று, இருக்குவேத காலத்திருந்த தமிழர் உருத்திரர்க்கு மேற்பட்டுச் சிவம் என்பதொன்று உண்டென்பதனை அறியார் எனக் கொள்ளாமோ வெனின்; இருக்குவேத ஏழாம் மண்டிலத்தின்கண் உள்ள இருபத்தோராவது பதிகத்திலும், பத்தாம் மண்டிலத்தின்கண் உள்ள தொண்ணூற்றொன்பதாவது பதிகத்திலும் அந்நாளில் தமிழ்நன்மக்கள் செய்து போந்த சிவலிங்க வழிபாடு குறிப்பிடப்பட்டிருத்தலின், அவர் சிவத்தை யறியார் என்பது பொருந்தாது. அந்நாளில் தமிழ வேளாளர் செய்து போந்த சிவலிங்கவழிபாட்டின் பெருமையை ஆரியர் அறிந்துகொள்ளத்தக்க நுண்ணறிவு இலராய் இருந்தனர் என்பதே தேற்றமாம். அவ் வாரியர் அவ்விரண்டு பதிகங்களிலும் 'ஆண்குறித்தெய்வம்' என்று பொருள் படுஞ் 'சிசிநதேவர்' என்னுஞ் சொல்லால் அச் சிவலிங்

கத்தை இழித்துரைத்ததோடு, அதனை வழிபடுந் தமிழ் நன்மக்களையுந் 'தாசர்கள்' என வைதமையும் யாங்கூறும் இவ் வுண்மைக்குச் சான்றும் என்க. எனவே, சைவ சித்தாந்த முடிபொருளாயுள்ள சிவத்தை உணர்த்தாத இருக்குவேதமும் அதன் வழிவந்த ஏனை ஆரியவேதங் களுஞ் சைவசித்தாந்தத்திற்கு மேற்கோள்களாகாவென்று உணர்ந்து கொள்க.

அற்றேல், இருக்குவேதத்தினின்றும் பிரித்தெடுத்துச் செய்யப்பட்டதாகிய எசுர்வேதத்திற் போந்த 'சதருத்ரியத்' திற் 'சிவன்' என்னும் பெயர் காணப்படுதல் என்னை யெனின்; எசுர்வேதம் ஒழுங்குபடுத்திய பிற்காலத்தில் ஆரியர் தாம் செய்துபோந்த சிறுதெய்வ வணக்கத்தை மெல்ல மெல்லக் கைந்நெகிழவிட்டுத், தமிழ்ச்சான்றோர் அறிவுரைகளை ஏற்று உருத்திர வழிபாட்டைக் கைக் கொள்ளப் புகுந்தமையின், அவரை அவ் வுருத்திர வழி பாட்டினின்றும் மேலுயர்த்திச் சிவவழிபாட்டிற் கொண்டு செல்லும்பொருட்டே, எப்பொருளுங் கடந்த சிவத்தின் பெயரை அவ் வுருத்திரர்மேல் வைத்து, அச் சதருத்ரியத் தினை இயற்றி அவ் வெசுர்வேதத்தில் முதன்மைபெற வைத்த தல்லது, ஆண்டும் முழுமுதற் கடவுளான சிவத்தை அவர்க்கு உணர்த்தியபடி யன்றாம். இஃது எற்றாற் பெறுது மெனின்; அப்பகுதிக்குச் 'சதருத்ரியம்' என உருத்திரச் சொல்வழியே பெயரமைத்தமையானும், அவ் வுருத்திரர்க் குரிய 'நீலமிடறும்,' 'சிகண்டர்' எனும்பெயரும் அதன்கட் சொல்லப்படுதலானும் பெறுதும் என்பது. அவ் வுருத்தி ரரின் கொடிய திருவுருவத்திற்கு மிக அஞ்சியிருந்த ஆரியர், இப்போதுதான் அஃது அன்புருவாதலுந் தீது செய்யாதது ஆதலுந் தெளிந்து,

"மலைகளில் எழுந்தருளுவோய், கொடியதல்லாத இன்பவுருவினதுங், தீங்கு குறியாததும்ஆன நின் திருவுருவத்தோடும் எங்கள்மேல் துலங்கியருள்க" என்று பொருள்படும் "யாதே ருத்ர சிவாதநூர் அகோர பாபகாசிநீ | தயா நஸ்தந்வா சந்தமயா கிரிசந்தாபிசாக சீஹி" என்னும் வணக்கவுரையால் அச்சதருத்ரியத்தின் முதலிலேயே வழிபாடு செய்தல் காண்க; அவ் வுருத்திரர்க்கு அவ்வாரியர் மிக நடுங்கிய நடுக்கம் இன்னும் அவரது நினைவைவிட்டுத் தீர்ந்திலாமை இதிற் கண்டுகொள்க. இங்ஙனமே பின்னுளில் வரவர ஒழுங்குபடுத்து வேதங்களாகச் சேர்க்கப்பட்ட 'அதர்வவேதப்' பாட்டுகளிற் சீகண்டருத்திரர் வழிபாடு மிகுந்து வரலானமை, வரவரத் தமிழுவேளாளர் செய்து போந்த முதற்கடவுள் வழிபாட்டின் மேன்மையை ஆரியர் உணர்ந்து கொண்டதனுலேயாம். சீகண்டருத்திர வழிபாட்டில் தொன்று தொட்டுத் தலைநின்றவர்கள் வேளாளரும், அவருள் அரசராகிய வேளிருமே யாவர் என்பது பண்டைத்தமிழ் ஆரிய நூல்களால் மேற் காட்டியவாறு விளங்குவதோடு, பின்றைக் காலத்தில் இவை தம்மையெல்லாம் ஒருங்காராய்ந்துணர்ந்த ஆசிரியர் சேக்கிழார்,

"நஞ்சையமுது செய்தவருக்,
கிம்பர்த்தலத்தில் வழியடிமை
என்றுங் குன்றுஇயல்பில் வருந்
தம்பற்றுடைய நிலைவேளாண்
குலத்தில்."[1]

என்று அருளிச் செய்யுமாற்ருனும் நன்கு புலனுதல் காண்க. இருக்கு முதலிய நான்கு வேதங்களும் மாபாரதப் போர்க்குப் பின் ஒழுங்கு படுத்தப் பட்டமையினைப் பின்னே காட்டுதும்.

---

1. திருத்தொண்டர் புராணம், மூர்க்க நாயனுர்.

அங்ஙனமாயின், பின்றைக் காலத்துஞ் சைவசமய உண்மையை நிலைநாட்டிய மாணிக்கவாசகர், திருஞான சம்பந்தர் முதலான ஆசிரியன்மாருஞ் சிவ வழிபாட்டினை ஓதாது, சீகண்ட உருத்திரரையே வழிபட்டுப் பதிகங்கள் அருளிச் செய்தல் என்னையெனின்; மலம் மாயை வினை என்னும் மும்மலவயத்தராய் நின்று பிறப்பு இறப்புக்களிற் பட்டுழலும் நான்முகன் மால் இந்திரன் முதலிய ஏனைச் சிறுதேவர்கள் போலாது, இயற்கையே மலமாசு பெரிதுந் தேய்ந்து, சிவத்தின் தலைமைத்தன்மை (அதிகாரம்) தங்கட் பதியப்பெற்று அதன் அருட்பேற்றிற்கு முற்றும் உரியராய் நிற்குஞ் சீகண்டருத்திரர், சிவபெருமானுக்குரிய எல்லா அடையாளங்களும் உடையரெனவும், மனமொழிகளுக்கு எட்டா இயல்பினதாகிய சிவத்தை நினைத்தலும் வழுத்தலும் இந் நிலவுலகத் துள்ளார்க்கு ஏலாமையின் அவர் சீகண்ட ருத்திரர்பாற் செய்யும் வழிபாடுகளெல்லாம் முழுமுதற் சிவத்தையே சென்று சேருமெனவுஞ் சிவஞானபோதம் முதலிய சித்தாந்த நூல்கள் வலியுறுத்துக் கூறுதலிற், சைவசமயாசிரியர் சீகண்டருத்திரர்மேல் வைத்துக் கூறிய வழிபாடுகள் சிவத்தையே சாருமென்று ஓர்ந்துகொள்க. இஃது எதுபோலவெனின், நம்மையாளும் அரசர்க்கு நாம் நேரே செய்தற்கு இயலாமல், அவ்வரசர்க்கு ஈடாக நம் மெதிரே நமக்கு அணுக்கராய் நிற்கும் ஆட்சித்தலைவர் பால்[1] நாம்செய்யும் வழிபாடுகள் அவ்வரசரைச் சென்று சார்தல்போல வென்க. அங்ஙனம், ஆட்சித்தலைவர்பால் நமது வணக்கத்தைச் செலுத்துகின்ற விடத்தும், அஃது அவர்க்கு முதல்வரான அரசரையே நினைந்து செய்யப் படுதல் போலச் சீகண்டருத்திரர்பாற் செய்யப்படும் வழிபாடுகளுஞ் சிவத்தை நினைந்தே செய்யப்படுவனவாம்.

---

1. Governor-general.

முழுமுதற்சிவம், மூவர்க்கும் ஏனைத் தேவர்க்கும் மேற் பட்டதென்பது,

"மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவருங் காணுச் சிவபெருமான்."

என்று மாணிக்கவாசகப் பெருமானும்,

"எந்தையார் அவர் எவ்வகையார் கொலோ."

என்று திருஞானசம்பந்தப் பெருமானும்,

"அவனருளே கண்ணுகக் காணி னல்லால்,
இப்படியன் இவ்வுருவன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணுதே."

என்று திருநாவுக்கரசு அடிகளும் அருளிச் செய்தவாற்ருல் நன்கு உணரப்படும். ஈண்டுக் கூறியவாற்ருல், முழுமுதற் சிவத்தை நினைந்து செய்யப் படுகின்றுழி அன்புருவாகவுந் தான் செய்யும் அழித்தற்ருெழிலை நினைந்து செய்யப்படு கின்றுழிக் கொடிய வடிவாகவும் வைத்து வழுத்தப்படுஞ் சீகண்டருத்திர வழிபாட்டின் இருதிறமுஞ் சைவசித்தாந்த வழிநின்ற பண்டைத் தமிழ் வேளாளர்க்கு உரியவேனும் ஆரியர்க்கு அவர் செய்துவந்த வெறியாட்டு வேள்விக்கேற்ற அச்சவடிவே உணர்த்தப்பட்டமை தெள்ளிதிற் புலனும்.

கச. தமிழர்கள் 'உபநிடதம்,' 'சாங்கியம்' முதலிய அறிவுரை நூல்கள் வகுத்தமை

இனி, வேதங்களை ஒழுங்குபடுத்தி உருத்திர வழிபாட்டைக் கற்பித்த பின்னும், வெறியாட்டு வேள்விகள் புரிதலையுஞ், சிறு தெய்வ வணக்கத்தையும் ஆரியர் விட்டு நீங்காமையின், அவ் வேள்விகளையும் அவ் வணக்கத்தையும் அறவே தொலைத்தற் பொருட்டாகவே, தமிழ்ச் சான்றோர்கள் ஈச கேந கடப் பிரசின முண்டக மாண்டுக்ய தைத்திரீய பிருகதாரணியக சாந்தோக்கிய முதலான மிகப் பழைய அறிவு நூல்களாகிய உபநிடதங்களையுஞ், சாங்கியம் நையாயிகம் வைசேடிகம் யோகம் வேதாந்தம் முதலான மெய்ப்பொருளாராய்ச்சி நூல்களையும் இயற்றினார்கள். வெறியாட்டு வேள்விச் சடங்குகளையுஞ் சிறு தெய்வ வணக்கத்தையுங் கூறும் இருக்கு முதலிய வேதங்கள் பயனிலவாதலும், உலகு உயிர் கடவுள் என்னும் முப்பொருட் டன்மைகளை உள்ளவாறு ஆராய்ந்து மெய்யுணர்வு தலைக்கூடி இன்ப வுருவினதாகிய சிவத்தை எய்துதலே மக்கட் பிறப்பெடுத்ததன் பயனாதலும் இந் நூல்களில் நன்கு விளக்கி அறிவுறுத்தப் படுதல் காண்க. இந் நூல்கள் எழுந்த பிறகுதான் கன்மகாண்டத்தின் இழிவும், ஞானகாண்டத்தின் உயர்வும் பிரிந்து விளங்கலாயின. வேதத்தினும் வேதாந்தமாகிய உபநிடதங்களே சிறந்தனவெனவும், வேதாந்த உணர்ச்சியே பெரும்பயனை யளிப்பதெனவும் எல்லாரும் விளங்க அறிவாராயினர். முழுமுதற் கடவுளாகிய சிவபிரான்முன், இந்திரன் அக்கி வருணன் மாதரிஸ்வான் முதலாக வேதங்களிற் சொல்லப்பட்ட கடவுளர் ஒரு சிறு துரும்பையும் அசைக்க வலியிலராதலும், அவனது அருட் சத்தியாகிய உமைப் பிராட்டியாராலன்றி அவன் அறியப் படாமையுங் கேநோபநிடதத்தில் நன்கு வலியுறுத்தப் பட்டன.

கரு. இந்திரன் முதலிய பெயர்கள் சிவத்தைக் குறியாமை

இனி, இவ் வுண்மைகளைப் பகுத்துணர மாட்டாத மாயாவாதியார் இந்திரன் வருணன் முதலான பெயர்கள் பற்பல தெய்வங்களைக் குறிப்பன அல்ல, அவையெல்லாம் ஒரு முழுமுதற் கடவுளையே குறிப்பனவாம் என்று கூறினர். இந்திரன் முதலிய பெயர்கள் முழுமுதற் கடவுளையே குறிப்பது உண்மையாயின், அப் பெயர்களால் உணர்த்தப் படும் அத் தெய்வங்கள் முழுமுதற் கடவுட்குரிய இலக்கணங்கள் உடையனவாய் இருத்தல்வேண்டு மல்லவோ? அக்நி இந்திரன் சோமன் என்போர் பிரசாபதியாற் படைக்கப்பட்டவர் எனச் சதபதபிராமணங் கூறுதலானும்,[1] மித்திரன் வருணன் தாத்ரி அர்யமான் அம்சன் பகன் விவஸ்வதன் ஆதித்யன் என்னும் எண்மரும் அதிதியின் புதல்வர் என அஃது அங்ஙனமே எடுத்துச் சொல்லுதலானுங், கட்குடியும் விலங்குகளின் கொலையால் வரும் ஊன் உணவும் அவர் கைக்கொண்டமை மேலே காட்டப் பட்டமையானுந், தந்தையைக் கொல்லல் மகளைப் புணர்தல் முதலான மக்களினும் இழிந்த பல செயல்களை அத் தெய்வங்கள் புரிந்தமை அங்ஙனமே அந் நூல்களிற் காணப்படுதலானும், அவர் பகைவரால் தோல்வியடைந்தமையுந் தாம் இறவாதிருத்தற் பொருட்டுச் சாவாமருந்து வேண்டினமையும் அவற்றின் கண் வெளிப்படையாகக் காட்டப்பட் டிருத்தலானும் அவரெல்லாருஞ் சிற்றுயிர்களேயாவரல்லது, இக் குற்றங்கள் ஒரு சிறிதுந் தீண்டப் பெறாத முழுமுதற் சிவம் ஆகார் என்பது சிறிதுணர்வுடையார்க்குந் தெற்றென விளங்கும்.

1. சதபதபிராமணம், கக, க, சு.

சொற்களும், அச் சொற்களால் உணர்த்தப்படும் பொருள்களும், அப் பொருள்களின் இலக்கணங்களும் ஒன்றோடொன்று மாறுபட்டு வெள்ளிடை மலைபோல் விளங்கிக் கிடப்பவும், அவற்றையெல்லாம் ஒன்றெனல் உண்மையாராயுந் தருக்கத்திற்குக் கட்டுப்படாமல் தமக்குத் தோன்றியவாறே பேசும் மாயாவாதியார் ஒருவர்க்கேயன்றி ஏனை மெய்யுணர்வுடையார்க்கு அடாது. நல்ல தண்ணீரும் உப்புத் தண்ணீருந் தம்மில் வேறுபட்டனவாய் இருப்பவும், அவையிரண்டனையும் ஒன்றெனக் கூறி உப்புத் தண்ணீரைக் கொடுத்தால் எவரேனும் பருகுவரா? சோறும் புழுவும் வேறாயிருக்க அவைதம்மை யொன்றென வற்புறுத்திச், சோற்றுக்கு மாறாகப் புழுக்களை வட்டித்தால் அவற்றை எவரேனும் உண்பரா? இரும்பும் பொன்னும் வேறாயிருப்ப அவையிரண்டும் ஒன்றெனவே வாயாடிப், பொன்னுக்கு மாறாக இரும்பை எடுத்துக் கொடுத்தால் மாயாவாதியார் அதனை ஏற்றுக் கொள்வரா? ஆதலால், அறிவாராய்ச்சிக்கும் உலக வழக்கிற்கும் இசையாதபடி வைத்து, எல்லாச் சிறு தெய்வப் பெயர்களும் ஒரு முழுமுதற் கடவுளையே குறிக்குமென்றல் அறிவுடையார் கழகத்தில் நகையாடி விடுக்கப்படும் என்க.

அற்றேல், இருக்கு வேத முதன் மண்டிலம் நூற்றறுபத்து நான்காம் பதிகத்தில் "சத்துப் பொருள் ஒன்றேயுளது, கற்றவர் அதனைப் பல பெயர்களால் வழங்குகின்றார்கள்" என்று காணப்படுதல் என்னையெனின்; இக் கொள்கை இருக்கு வேதத்தில் இவ் வோரிடத்தில் தவிர வேறெங்குங் காணப்படாமையானும், ஓரிடத்தில் மட்டும் புதிதாகக் காணப்படும் இக் கொள்கை ஆரியர்க்கு உரியதாயின் மேற்காட்டியவாறு முதற்கடவுள் இலக்கணத்திற்குப் பொருந்தாமல் மக்களினுந் தாழ்ந்த பழிச் செயல்களைப்

புரிவாரான அச் சிறு தெய்வங்களை அவர் வணங்குதல் செல்லாமையானும், இச் சிறு தெய்வப் பெயர்களெல்லாம் முழுமுதற் சிவத்தையே குறிப்பனவாயின், வேதங்களினுஞ் சிறந்த வேதாந்தமாகிய கேநோபநிடதத்தில் இத் தெய்வங் களெல்லாம் இயக்க வடிவத்திற் றோன்றிய சிவத்தின்முன் வலியிலராய் ஒழிந்தமை தெளிவுறுத்தப் பட்டதற்கு வேறு வழி காட்டுதல் இயலாமையானும் அக் கொள்கை ஆரி யர்க்கு உரியதன்றென்பதே முடிபாம். பண்டைக்காலத் திருந்த தமிழ்ச்சான்றோர்கள், பல சிறு தெய்வங்களை வணங்கும் ஆரியரது சிறுமையை ஒழித்தல் வேண்டியே, ஆரிய வேதங்களை ஒழுங்கு படுத்திய ஞான்று தமக்குரிய அக் கொள்கையை அவ் வாரியநூலின் இடையே புகுத்தி வைத்தனர். ஆரியர் பல பெயர்களான் வணங்குஞ் சிறு தெய்வங்கள் முதற்கடவுள் ஆகார், எவர் எவ்வகைப் பெய ரில் எத்தெய்வத்தை வணங்கினும், அத் தெய்வங்கள் பிறந் திருந்து மாய்வனவாதலால் அவை அவர் வழிபாட்டை ஏன்று கொண்டு அவர்க்கு அருள்புரியமாட்டா; எல்லாம் வல்ல முழுமுதற் சிவம் ஒன்றே அவரவர் அவ் வத்தெய்வத் திற் செய்யும் வழிபாட்டை ஏன்று கொண்டு அவரவர்க் கேற்ற பரிசாகத் தனது அருளை வழங்கி அவரைமேன்மேல் உயர்த்தும் என்பதே தமிழ்ச்சான்றோர் கொள்கையாம். இது,

> "விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்தே
> எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாமே."

எனத் திருநாவுக்கரசு நாயனாரும்,

> "அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய்
> வேறாங் குறியது வுடைத்தாய்."

எனவும்,

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படும் இறக்கும் பிறக்கும் மேல் வினையுஞ் செய்யும்
ஆதலால் இவைஇ லாதான் அறிந்தருள் செய்வ னன்றே."

எனவும் அருணந்தி சிவாசிரியரும் ஓதுமாற்றால் நன்கு தெளியப்படும். இவ் வுண்மையையே இக் காலத்திருந்த இராமலிங்க அடிகளும்,

"அச்சமயத் தேவர்மட்டோ நின்பெயர் என்பெயரும் அவர் பெயரே எவ்வுயிரின் பெயரும் அவர் பெயரே"

என்று ஓதுதல் காண்க. எல்லா உயிர்களும் அவனை இன்றி இயங்காமையானும், அவன் எல்லா உயிர்களிலும் பிரிவின்றிக் கலந்து நிற்றலானும் அம் முறைபற்றி எல்லா உயிர்ப்பெயரும் இறைவற்கு உரியனவாகக் கூறப்பட்டனவே யல்லாமல், அங்ஙனங் கூறப்பட்ட அப் பெயர்கட்குரிய சிற்றுயிர்கள் அதனால் அம் முதல்வனாவான் செல்லுதல் ஒரு சிறிதுமில்லை யென்க. இஃது என்போலவெனின்; அரசன் ஆணைவழி நின்று அரசு செலுத்தும் அமைச்சர் தண்டத்தலைவர் ஊர்காவலர் முதற் பலருந் தத்தம் அளவிற்கேற்ற தலைமைப்பாடும் பெருமையும் உடையரேனும், அதுபற்றி அவரெல்லாம் அவ் வரசனேயாதல் செல்லாமை போலவும், அவர்மாட் டெல்லாம் ஊடுருவி நின்று அவர்க்கு அச் சிறப்பினை நல்குந் தனது ஆணையை அவர் மாட்டு நின்றும் அரசன் வாங்கிக் கொண்டவழி அவர் அப் பெருமையையும் பெயரையும் ஒருங்கிழத்தல் போலவும் என்க. இங்ஙனமாகவே, ஆரியர் வணங்கிய சிறுதெய்வப் பெயர்களும், அத் தெய்வங்கள் முதலான எல்லாச் சிற்றுயிர்களிலும் நிறைந்து நிற்குஞ் சிவத்திற்கும் பெயர்களாக முகமனாய்த் தமிழ்ச் சான்றோரால் உரைக்கப்பட்டனவே யல்லாமல், அப் பெயர்க்குரிய சிறு தெய்வங்கள் அச் சிவ

மாதல் ஒருவாற்ருனும் இல்லையென்றொழிக. இதுவே, ''ஏகம்சத் விப்ரா பகுதாவதந்தி'' என்னும் அவ் விருக்கு வேதத் தொடர்மொழிக்குப் பொருளா மென்று கடைப் பிடிக்க. இன்னும் இதன்விரிவை எமது **சைவ சித்தாந்த ஞானபோதத்திலும், சிவஞானபோத ஆராய்ச்சியிலுங் கண்டு** கொள்க. இக் கூறியவாற்ருல், உருத்திரசிவ முழுமுதற் கடவுள் வழிபா டொன்றுமே தொன்று தொட்டுச் சைவ வேளாளர்க்கு உரித்தாமெனவும், இந்திரன் வருணன் முதலான ஏனைச் சிறு தெய்வவழிபாடுமட்டுமே ஆரியர்க்கு உரித்தா மெனவும் பகுத்தறிந்து கொள்க.

கசா. ஓம் என்னும் பிரணவம் தமிழுக்கே யுரித்தாதல்

அஃதொக்குமாயினும், எல்லா ஒலிவடிவு வரிவடிவு கட்கும் முதலாவது ஓங்காரமாகிய பிரணவமே என்பது பெறப்படுதலானும், அப் பிரணவம் வடமொழிக்கே உரித் தாகலானும், அப் பிரணவவடிவாய் விளங்கும் எல்லா வட மொழிக்கலைகளும் இறைவன் வாய்மொழியேயாம் என்று மாயாவாதியார் கூறுமாறென்னையெனின்; அவர் ஆராயாது கூறினமையின் அது பொருந்தாக் கூற்றேயாம். பிரணவம் என்பது ஓ என்னும் ஒலியேயாம். ஓ என்பது நெட் டெழுத்து. நெட்டெழுத்துக்க ளெல்லாங் குற்றெழுத் துக்களின் நீட்டமேயாதலால் முதலில் குற்றெழுத்தொலி களும் அவற்றின்பின் அவற்றோடொத்த நெட்டெழுத் தொலிகளுந் தோன்ருநிற்கும். அகரந் தோன்றிய பிறகே ஆகாரந் தோன்றும். ஒகரந்தோன்றிய பிறகே ஓகாரந் தோன்றும்; ஒகரம் இன்றி ஓகாரந் தோன்ருது. இனித்

தமிழ்மொழியில் மட்டும் ஒகரமாகிய குற்றொலியும் அதன் நீட்டமாகிய ஓகார ஒலியும் இருப்பக் காண்டுமன்றி, வடமொழியில் ஓகாரத்திற்கு முதலாகிய ஒகரஒலி வழங்கக் காண்கிலேம். குற்றொலி இன்றி அதன் நெட்டொலி வழங்குதல் ஏலாமையால் ஒகரம் இல்லாத ஓகாரம் வடமொழிக்கு உரியதாதல் யாங்ஙனம்? தமிழில் ஒகர ஓகாரம் இரண்டும் இருத்தலால், அவ் விரண்டுந் தமிழுக்கே உரியவாதல் நன்கு துணியப்படும். மேலும், ஓசையைக் குறிக்கும் ஒலி ஓசை ஓதை ஒலம் முதலிய தமிழ்ச் சொற்கள் ஒகர ஓகார ஒலிகளை உடையதாதல்போல, வடமொழிக்கண் உள்ள சப்தம் த்வநி முதலிய சொற்களில் அப் பிரணவ ஓசை காணப்படாமையானும் பிரணவமாகிய ஓங்காரந் தமிழ்மொழிக்கே உரித்தாதல் தெளிந்துகொள்க. அதுவேயுமன்றித், தமிழல்லாத வேறுமொழிகளிலும் பிரணவமானது வரிவடிவில் எழுதப்படுங்கால் தமிழுக்குரிய ஓ எழுத்தால் எழுதப்படுவதல்லது வேறுவடி வின்மையானும், பிரணவத்தின் ஒலிவடிவு வரிவடிவு இரண்டுந் தமிழ்மொழிக்குந் தமிழர்க்குமே உரியவாதல் தெற்றென விளங்கற்பாலதாம். இவையெல்லாம் எமது 'சைவசித்தாந்த ஞான போதத்'தில் 'தமிழ்நான்மறை' என்ற தலைப்பின்கீழ்ப் பதினைந்து ஆண்டுகட்கு முன்னமே யாம் விரித்து விளக்கியிருக்கின்றேம். இந் நுட்பங்களை ஆய்ந்துணராது மாயாவாதியார் பிரணவம் வடமொழிக்கே உரியதெனக் கூறியது போலியுரையேயாம் என்க. ஓங்காரந் தமிழிற்குரியதாகவே, அதன் விரிவாய்த் தோன்றிய தமிழ்மொழியுந் தமிழ்மறைகளும் மட்டுமே இறைவன் வாய்மொழியாமென்று தெளிந்துகொள்க. இன்னும் இம் மாயாவாதியார் தமிழ்மொழிக்குத் தாய் பாகதமொழியா மென்னுந் தமது கூற்றிற்குச் சான்று ஏதுங் காட்டாமையின், அவர் கூற்றுச்

சிறு மகார் கூறும் பொருள் இல் கூற்றேயாமென்க. இனிச், சைவசமயாசிரியர் வேதங்களெனத் தாந்தழுவிக் கூறுபவை, பெரும்பாலுஞ் சிறுதெய்வ வெறியாட்டு வேள்விகளைக் கூறும் ஆரியவேதங்கள் அல்லவென்பதூஉம், அவை அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள் வேள்வி களைக் கூறுந் தமிழ்மறைகளே யாமென்பதூஉம் எமது திருவாசகவிரிவுரையில் விரித்து விளக்கியிருக்கின்றேமா தலின், அதனை ஆண்டுக் கண்டுகொள்க; ஈண்டு விரிப்பிற் பெருகும்.

கஎ. வேளாளர் உபநிடதங்கள் இயற்றினமைக்குச் சான்று

இவையெல்லாம் ஒக்குமேனும், ஆரியமொழியிலுள்ள உபநிடதங்களைத் தமிழர் எழுதினரெனக் கூறல் யாங்ஙனம் பொருந்துமெனிற்; கடவுள் உயிர் உலகு முதலான மெய்ப் பொருள்களைப் பற்றிய நுண்ணிய ஆராய்ச்சிகளை ஆரியப் பார்ப்பனர் அறியாது மயங்கினமையும், அவற்றை அவர்க்கு அஞ்ஞான்றிருந்த தமிழஅரசர் அறிவுறுத்தினமையும் பழைய உபநிடதங்களிலேயே நன்கு எடுத்துச் சொல்லப் படுதலின் அவை தமிழ்ச்சான்றோரால் இயற்றப் பட்டன வாதல் தெளியப்படும். கற்றறிவுடைய ஆரியப்பார்ப்பனர் ஐவர், வைஸ்வாநர ஆத்மாவைப் பற்றித் தமக்கு அறி வுறுத்தும்படி உத்தாலக ஆருணி என்பவரை அடைய, அவர் அதனை அறிவுறுத்தும் ஆற்றல் தமக்கில்லாமையைத் தெரிவிக்க, அவரோடு அறுவரும் **அஸ்வபதிகைகேயன்** என்னும் அரசன்பாற் சென்று தமது விருப்பத்தை யுணர்த்த, அவ்வரசன் அவர்க்குள்ள அறியாமையை

முதலில் எடுத்துக் காட்டி, அதன்பின்னர் அவ் வாத்மா வைப் பற்றிய உண்மையை அவர்க்குத் தெருட்டினனென்று பழைய சாந்தோக்கிய உபநிடதங் கூறுகின்றது.[1] இன்னும் ஆரியவேதநூல் உணர்ச்சியிற் பெரிதும் புகழ்பெற்று விளங்கிய கார்க்கியபாலாகி என்னும் பார்ப்பன ஆசிரியன், காசி மன்னனாகிய அஜாதசத்துரு என்பவன்பாற் பிரமத்தைப் பற்றிப் பிழைபாடான பன்னிரண்டு உரைகளைக் கூறித், தான் கூறியவற்றிலுள்ள அப் பிழைகளை அம் மன்னவன் எடுத்துக் காட்டியபின், அப் பார்ப்பனன் தன் அறியாமை யுணர்ந்து அவனுக்கு மாணாக்கனாகி, அவனாற் பிரமத்தின் உண்மைத் தன்மை தெளியப்பெற்றன னென்று பிருக தாரணியகோபநிடதமுங் கௌஷீதகி உபநிடதமுங் கூறுதல் காண்க.[2] இவ்வாத்ம ஞானமானது அரசரைத் தவிர, ஆரியப் பார்ப்பனர் எவரும் அறியாரென்பதும் அவ் வுப நிடதங்களில் நன்கு வலியுறுத்தப்படுதல் காண்க. பிரவாகன ஜைவலி என்னும் அரசன், ஆருணி என்னும் ஆரியப் பார்ப்பன ஆசிரியனுக்கு ஞானோபதேசஞ் செய்தபின், "ஓ கௌதமனே! நீ சொல்லியபடியே, இந்தக் கொள்கை யானது இதுகாறும் பார்ப்பனர்க்குள் வழங்காமையால், அரசவாழ்க்கையானது எல்லா உலகங்களிலும் அரச வகுப் பினர் கையிலேயே தங்கியிருக்கின்றது"[3] என்று, பழைய வேளிர் அரசர்க்கே மெய்யுணர்வும் அரசுரிமையுந் தொன்று தொட்டு உளவாதல் காட்டினமை சாந்தோக்கியத்தில் தெளி வுறுத்தப் படுகின்றது. இவ் விந்தியநாட்டுள் வந்தேறுங்குடிக ளாய் ஆரியர் பிழைக்கவந்த ஞான்று, அரசராய் அவர்க்கு முன்னே தொட்டு இமயம்முதல் குமரிவரையில் இதன்

1. சாந்தோக்கியம், ரு, கக-உச.
2. பிருகதாரணியகம், உ, க. கௌஷீதகி, ச.
3. சாந்தோக்கியம், ரு, ங, எ.

கண் அரசாண்டவர்கள் தமிழ வேளாள அரசரே என்பது மேலே காட்டப் பட்டமையானும், ஆரியப்பார்ப்பனர்க்கு அறிவுறுத்தும் அவ் வரசர்கள் தம்மை அவரோடு ஓர் இனப் படுத்திக் கொள்ளாமல் தம்மையுந் தமது மெய்யுணர்வினை யும் அவரினின்றும் வேறுபிரித்தே கூறுதல் மேற்குறிப் பிட்ட உபநிடதங்களில் நன்கு தெளியக் கிடத்தலானும் அவற்றிற் சொல்லப்பட்ட அவ் வரசர்கள் தமிழரேயாதல் ஐயுறவின்றித் துணியப்படுமென்க.

கரு. புராண இதிகாசக் கருத்து

இனி, ஆரியவேதங்களின் புன்மையும், அவற்றின்கட் சொல்லப்பட்ட இந்திரன் முதலான சிறுதெய்வ வழி பாட்டின் சிறுமையும், அவரைக் கொண்டாடும் வெறி யாட்டு வேள்விகளின் தீவினையும் எடுத்துக்காட்டி, முழு முதற் கடவுள் சிவம் ஒன்றேயாதலும் அதனை உள்ளவாறு உணரும் மெய்யுணர்வின் மாட்சியும் அதனை எய்துதற் குரிய மெய்யறிவின் சிறப்புந் தேற்றித் தமிழ்ச்சான்றோர்கள் ஈச கேனம் முதலான பழைய உபநிடதங்களையுஞ் சாங்கியம் முதலான தரிசனங்களையும் இயற்றியும், ஆரியர் அவற் றானும் அறிவுதிருந்தாராய்த் தமக்குரிய வெறியாட்டு வேள்விகளைப் பெருக்கிச் செய்தற்குந், தமிழர் அறி வுறுத்திய முதற் கடவுள் வழிபாட்டை மறுத்தற்குமாக 'மீமாஞ்சை' நூல் இயற்றிவிட்டார். அவர் செய்த அம் மீமாஞ்சைநூல் உணர்ச்சியும், அதன்வழியே வெறியாட்டு வேள்விகளும் பின்னும் பெருகவே, ஆரியர்க்குந் தமிழர்க் கும் பெரும் போர் மூண்டது. இங்ஙனம் மூண்ட பெரும் போரின் வரலாறுகளே பின்னர்ப் புராணங்களினும் இதி காசங்களினும் எழுதிவைக்கப் பட்டன. இவற்றின்கட்

சொல்லப்பட்ட தாருகாவனத்து இருடிகளின் வேள்விகளுந், தக்கன் முதலாயினோர் சிவபிரானை இகழ்ந்து செய்த வேள்விகளும் எல்லாம் ஆரியராற் செய்யப்பட்ட வெறியாட்டு நாத்திக வேள்விகளேயாம்; அவ் வேள்விகளை அழித்து அவற்றைப் புரிந்த ஆரியரை ஒறுத்து அவர்தஞ் செருக்கை அடக்கின பிட்சாடனருத்திரர் வீரபத்திரருத்திரர் முதலியோரின் செயல்களெல்லாந் தமிழ்மக்களின் செயற்கருஞ் செயல்களேயாம். ஆரியரின் இத்தகைய வெறியாட்டு வேள்விகளை அழித்துவந்த சூரன் இராவணன் முதலான நிகரற்ற தமிழ்வேந்தர்களே, ஆரியர்களால் அரக்கரென்று இகழ்ந்து பேசப்படுவாராயினர். இத் திறங்களெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும். இனி யாம் எழுதுந் 'தமிழர் ஆரியர் வரலாறு' என்னும் நூலில் அவையெல்லாம் விரித்துக் காட்டுதும்.

இவ்வாறாக, ஆரியர் உலகத்திற்குப் பெரிது பயன்படும் ஆ, ஆன்கன்றுகள், எருதுகள், எருமைகள், குதிரைகள், யாடுகள், சிற்சில அமயங்களில் உயர்பிறப்பினரான மக்கள் முதலான எத்தகைய உயிர்களையுங் கொன்று கட்குடித்து வெறியாட்டு வேள்விகள் புரிந்து, முழுமுதற் கடவுளை வணங்காத நாத்திகராய் உழன்றமையினாலேதான், அன்பு அருள் அறம் கல்வி முதற்கடவுள் வழிபாடு நாகரிகம் முதலியவற்றிற் றலைசிறந்து விளங்கிய பண்டைத் தமிழ் நன்மக்களான வேளாளரும் அவர்க்கு அரசராயிருந்த வேளிரும் இயற்கையிலேயே விருந்தோம்பும் வாழ்க்கையிற் சிறந்தவராயிருந்துந், தமது நாகரிக முறையில் திருத்தப்படுதற்கு இசைந்துவராத ஆரியர்மேல் வெறுப்புற்று அவர் தம்மை ஒறுத்துவரலாயினாரென்க.

கக. ஆரியர் தம்மை உயர்த்தச் செய்த சூழ்ச்சி

இதன்பின், எல்லாவாற்றானுந் தமிழ்மக்களுந் தமிழரசருஞ் சிறந்தாராயும் நிகரற்ற வலிமையுடையாராயும் இருத்தல் கண்டு, ஆரியர் அவரை நேரே எதிர்த்தலும் இகழ்தலுஞ் செய்தலைவிட்டு, அவரோடு அளவளாவி அவர்தம் வழக்க வொழுக்கங்களைக் கைப்பற்றுவார்போற் புறத்தே காட்டி, அகத்தே அவரைத் தாழ்த்தித் தம்மை உயர்த்துதற்கு வேண்டுஞ் சூழ்ச்சிகளெல்லாம் மிகவுங் கருத்தாய்ச் செய்து வருவதில் முயற்சியுடையரானார். அக் கருத்து நிரம்புதற்கு முதலில் ஊன் உணவையும் வெறியாட்டு வேள்விகளையும் அறவே ஒழித்தனர். அதன்பின், தம்மை எல்லாரினும் உயர்ந்த பிராமணர் எனவும், ஆரியரல்லாத தமிழரை சத்திரியர், வைசியர், சூத்திரர் எனவும் பிரித்து, இவ் வேற்பாடு கடவுளால் வகுக்கப் பட்டதென எழுதி, மெல்ல மெல்ல வேதங்கள், பிராமணங்கள், உபநிடதங்கள் முதலியவற்றின்கண் அவ் வெழுத்தை நுழைத்துவிடுவாராயினர். களங்கமில்லா உள்ளத்தினரான தமிழர் அவ்வாறு அவர் நுழைத்த அவ் ஏற்பாட்டினை உண்மையென நம்பத் தலைப்பட்டபின், அதனை மேலும் மேலும் வலியுறுத்தி விரித்து மநுமுதலான மிருதிநூல்களை எழுதி வைக்க லாயினர். இம் மிருதிநூல்கள் வழங்கத் துவங்கித், தமது கருத்து எளிதாய் எங்கும் நிறைவேறுதலைக் கண்டபின், ஆரியர் தம்மைப் பிராமணர் எனவும், ஆரியரல்லாத தமிழரை சத்திரிய வைசிய சூத்திரரெனவும் வகுத்த நால்வேறு வகுப்பையுங்கூட ஒழித்துத், தமிழர் எல்லாரையும் ஒருங்கு சேர்த்துச் சூத்திரரென முற்றும் இகழ்வாகவே வழங்குதற்குந் துணிந்து, ‘கலிகாலத்தில் சத்திரிய வைசிய வகுப்பில்லை, பிராமணர் அல்லாத அனைவருஞ்

சூத்திரரே ஆவர்' என ஒருகதை புனைந்துகட்டி, அதனைத் தாம் இயற்றிய சில நூல்களினிடையே நுழைத்துவிட்டு, அதனையுந் தமிழர் எல்லாரும் எளிதிலே நம்பும்படி செய்து தமது கருத்தை நிறைவேற்றிக் கொண்டார்கள். இங்ஙனம், இவர்கள் கருத்து நிறைவேறிய பிற்காலத்திற் றோன்றிய உரையாசிரியர்களான இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலியோர், ஆரியப் பார்ப்பனர் வழக்கத்திற் கொணர்ந்த இவ்விகழ்ச்சிப் பொய்யுரையை மெய்யென நம்பித், தாம் உரை எழுதுதற்கு எடுத்துக் கொண்ட 'தொல்காப்பியம்' முதலான பழைய செந்தமிழ்த் தனி நூல்களில் வேளாளரைப் பற்றிக் கூறுமிடங்களிலெல்லாம் பிழையான உரைகளை எழுதிவிடலானார்கள். இவ் விந்திய நாட்டிற் சரித்திர நூல்களும், அவற்றின் வழியே மெய் இது, பொய் இதுவெனப் பகுத்துக்காணுஞ் சரித்திரவுணர்வும் இல்லாமையால், ஆரியப் பார்ப்பனர் தமிழ் நன்மக்களைத் தாழ்த்துதற்குச் செய்த இச் சூழ்ச்சிகளை அறியாமல், அவையெல்லாங் கடவுள் வகுத்த ஏற்பாடெனவே நம்பி, அவற்றுக்கு மாறாக ஏதுங் கூறமாட்டாராய், நூலாசிரியர் கருத்துக்கு முரணாக அவர்கள் அங்ஙனம் பிழைபட்ட உரைகள் எழுதியது ஒருவியப்பன்றென்க.

உ௦. சேக்கிழாரும் வேளாளரும்

இனித், திருத்தொண்டர் புராணம் அருளிச்செய்த ஆசிரியர் சேக்கிழார் வேளாளரைச் சூத்திரக் குலத்தவராகக் கூறுதல் என்னை? என்று அறிஞர் சிலர் நிகழ்த்திய தடைக்கு விடைகூறி, அதன்பின் அவர் நிகழ்த்திய ஏனைச் சிலவற்றிற்கும் முடிபு கூறுவாம். அறுபத்துமூன்று நாயன்மார்களுள் வேளாளக் குடியிற் பிறந்தவர்கள் பதின்மூவ

ராவர் என்று உமாபதிசிவனார் தாம் அருளிச்செய்த சேக்கிழார் புராணத்திற் கூறியிருக்கின்றார். சேக்கிழாரும் இப் பதின்மூவர் வரலாறுகளையும் உரைக்கின்றுழிச் 'சத்தி நாயனார்' புராணத்தில் "விரிஞ்சையூரினில் வாய்மை வேளாண் குலம்" எனவும், 'விறன்மிண்டர்' புராணத்தில் "அப் பொற்பதியினிடை வேளாண் குலத்தை விளக்க அவதரித்தார்" எனவுந், 'திருநாவுக்கரையர்' புராணத்தில் "மேதக்க நிலை வேளாண் குலத்தின்கண்" எனவுஞ், 'சாக்கியர்' புராணத்தில் "தகவுடைய வேளாளர் குலத்துதித்தார்" எனவுங், 'கோட்புலியார்' புராணத்தில் "வேளாண் குலம்பெருக வந்துதித்தார்" எனவும், 'மானக்கஞ்சாறர்' புராணத்தில் "விழுமிய வேளாண் குடிமை" எனவும், 'ஏயர்கோன் கலிக்காமர்' புராணத்தில் "வேளாண்மையில் உயர்ந்த பொற்பினதால்" எனவும், 'மூர்க்கர்' புராணத்தில் "நஞ்சையமுது செய்தவருக்கு, இம்பர்த் தலத்தில் வழியடிமை என்றுங் குன்று இயல்பில் வருந், தம் பற்றுடைய நிலை வேளாண் குலத்தில்" எனவும், 'அரிவாட்டாயர்' புராணத்தில் "தொக்க மாநிதித் தொன்மையில் ஓங்கிய, மிக்க செல்வத்து வேளாண் டலைமையார்" எனவுஞ், 'செருத்துணையார்' புராணத்தில் "திருந்து வேளாண் குடிமுதல்வர்" எனவும், 'முனையடுவார்' புராணத்தில் "வேளாண் தலைமைக் குடிமுதல்வர்" எனவும் பதின்ஒரு நாயன்மார் குலத்தை 'வேளாண்குலம்' என்னும் பெயரினாலேயே விளங்கக் கூறி யிருக்கின்றனர். இவ்வாறு கூறியவிடத்தும் வேளாண் குலம் என வாளா கூறாது, அக் குலத்தவர் மெய்ம்மையே பேசும் இயல்பினர் என்பது புலப்பட 'வாய்மை' 'நம்புவாய்மையின் நீடு' என்னுஞ் சொல்லையுஞ் சொற்றொடரையும், அவர் பொருந்திய தகுதிப்பாடு உடையர் என்பது விளங்க 'மேதக்க'

'தகவுடைய' என்னுஞ் சொற்றொடர்களையும், இக் குலஞ் சிறந்தது என்பது தெரிக்க 'விழுமிய' என்னுஞ் சொல்லை யும், இக் குலத்தவர் ஈகையிற் சிறந்தவர் என்பது புலனாக 'வேளாண்மையில் உயர்ந்த' என்னுஞ் சொற்றொடரையும், இக் குலத்தவர் சிவபிரான் ஒருவற்கே வழிவழி யடிமை செய் தொழுகுங் குறையா இயல்பும் பற்றும் உடையர் என்பது நன்குணர்த்த "நஞ்சை யமுது செய்தவருக்கு, இம்பர்த் தலத்தில் வழியடிமை என்றுங் குன்றா இயல்பில் வருந், தம் பற்றுடைய" என்னுஞ் சொற்றொடரையும், வேளாளர் தொன்றுதொட்டுப் பெரும் பொருட்டிரள் உடைய மிக்க செல்வ வாழ்க்கையினர் என்பது தெளி வுறுத்தத் "தொக்கமாநிதித் தொன்மையில் ஓங்கிய, மிக்க செல்வத்து" என்னுஞ் சொற்றொடரையும், வேளாள குலந் திருத்தமானது என்பது தெருட்டத் "திருந்து" என்னுஞ் சொல்லையும், வேளாள குலம் ஏனை எல்லாக் குலங்கட்குந் தலைமையானது என்பது அறிவுறுத்த "வேளாண் தலைக்குடி" என்னுஞ் சொற்றொடரையும் ஆசிரியர் சேக்கிழார் அடைகளாகப் புணர்த்தி வேளாண் குலத்தின் உயர்வைப் பலவாற்றானும் நன்கு விளக்கியிருக் கின்றனர். இத்துணைச் சிறந்த உயர்வுடையதாகத் தம்மாற் கூறப்பட்ட வேளாள குலத்தை இழிந்த சூத்திர குலமாகக் கூறுவது சேக்கிழார் திருவுள்ளக் கருத்தாகுமா என்பது ஆராயற்பாலதன்றோ ? சூத்திரராவார் இன்னர் என்பது மநுவினால் நன்கு காட்டப்பட்டிருக்கின்றது :

" சண்டையில் வென்று சிறையாகப் பிடித்துக் கொணரப்பட்டவன், அன்புடன் ஊழியஞ் செய்பவன், தன்வேசி மகன், விலைக்குக் கொள்ளப் பட்டவன், ஒருவ னாற் கொடுக்கப் பட்டவன், குலவழியே தொன்றுதொட்டு

ஊழியஞ் செய்பவன், குற்றத்திற்காக வேலை செய்பவன் எனச் சூத்திரர் எழுவகைப்படுவர்" எனவும்,

"பார்ப்பனன் ஐயம் இன்றி மேற்கூறிய எழுவகைச் சூத்திரரிடத்திலிருந்தும் பொருளை வலிந்து எடுத்துக் கொள்ளலாம். தம் தலைவன் எடுத்துக் கொள்ளுதற்குரிய பொருளையுடைய அந்தச் சூத்திரர் தம் பொருளுக்குச் சிறிதும் உரிமையுடையர் அல்லர்"[1] எனவும் மநுகூறுஞ் சூத்திர இலக்கணந் தமிழ் நாட்டிலுள்ள வேளாளர்பாற் காட்டல் கூடுமா? இங்குள்ள வேளாளர் சண்டையிற் சிறையாகப் பிடிக்கப் பட்டவரா? அல்லது எவர்க்கேனும் ஊழியஞ் செய்பவரா? அல்லது பார்ப்பனர் தம் வேசிக் கேனும் மக்களாய்ப் பிறந்தவரா? அல்லது எவரிடத்தேனும் விலைக்கு வாங்கப்பட்டவரா? அல்லது எவராலேனும் விலைக்குக் கொடுக்கப்பட்டவரா? அல்லது கால்வழி கால் வழியாக எவர்க்கேனும் அடிமையூழியஞ் செய்பவரா? அல்லது எந்தக் குற்றத்திற்காகவேனும் வேலை செய்பவரா? எந்த வேளாளராவது தமக்குந் தம் பொருளுக்கும் உரிமை யில்லையென்று அவை தம்மைப் பார்ப்பனர் வலிந்து எடுத் துக்கொள்ள விட்டிருக்கின்றனரா? இங்குள்ள வேளாளர் இச் சூத்திர இலக்கணங்களெல்லாம் உடையர் என்று ஒரு கால் அவ்வறிஞர் தாமாகவே நாட்டத் துணிவராயினும், ஆசிரியர் சேக்கிழார் வேளாளரையும் வேளாண் குலத் தையும் உயர்த்துக் கூறும் உயர்ச்சிகட்கெல்லாம் இவர் என் சொல்லமாட்டுவார்! மநு சூத்திரரைப்பற்றிக் கூறும் இழித் துரை இலக்கணங்களும், சேக்கிழார் வேளாளரைப்பற்றிக் கூறும் உயர்த்துரை இலக்கணங்களும் ஒன்றோடொன்று பெரிதும் மாறுபட்டு நிற்றலின் வேளாளரைச் சூத்திர

1. மநுமிருதிநூல், அ-ஆம் அத்தியாயம், சகரு, சகஎ.

ரெனக் கோடல் சேக்கிழார்க்குக் கருத்தன்று என்பது தானே பெறப்படும்.

அற்றன்று, மநு கூறியவாறே வேளாளரைச் சூத்திர ரெனக் கொண்டாராயினுந், தாம் அவ் வேளாண் குலத்திற் பிறந்தமைபற்றி அதனைச் சேக்கிழார் உயர்த்துப்பேசுவா ராயினரெனின்; அங்ஙனம் மநு கூறியதற்கு மாறாக அக் குலத்தைப் பொய்யாக உயர்த்துப் பேசுதல் சேக்கிழார்க்கு ஒரு பெருங் குற்றமாய் முடியுமன்றோ? அதுவேயுமன்றித், தமிழ்நாட்டின்கண் உள்ள வேளாளர் பண்டுதொட்டே உழவு வாணிகம் ஈகை அறம் முதற்கடவுள்வழிபாடு முதலியவற்றிற்கு உரியராய் அந்தணராயும் அரசராயும் அமைச்சராயும் படைத்தலைவராயுங், கொலை புலை தவிர்ந்து நாகரிகத்திற் சிறந்தாராயும் வாழ்ந்து வந்திருத்தல், பண்டைத் தமிழ்நூல் வழக்கானும், இன்றுகாறும் நடை பெற்று வரும் உலகவழக்கானும் நன்கு துணியக்கிடத் தலின், இவற்றிற்கெல்லாம் மாறாகச் சேக்கிழார் இவர்களைச் சூத்திரரெனக் கொண்டாரென்பது, பண்டை நூலாராய்ச்சி யின்மை உலகவழக்கொடு மாறுகொள்ளுதல் என்னும் பெருங்குற்றங்களைச் சேக்கிழார்பால் ஏற்றுவதாய் முடியு மன்றோ? மநுவுக்கு மாறாகச் சேக்கிழார் பொய்கூறி வேளா ளரை உயர்த்தினாரென்று ஒரு பக்கத்தும், வேளாளர் உண்மைச்சிறப்பை உள்ளவாறு அறிவிக்கும் பண்டைத் தமிழ்நூல்களையும் அறியாமற் சேக்கிழார் வேளாளரைச் சூத்திரரெனக் கூறினாரென்று மற்றொரு பக்கத்துமாகச் சேக்கிழார்மேற் பொய்யும் அறியாமையும் ஆகிய பெருங் குற்றங்களை ஏற்றுதல் நன்றோ, திருத்தொண்டர் புராணத் தில் இரண்டு மூன்று இடங்களில் மட்டும் வேளாளரைச் சூத்திரரெனக் கூறியவை சேக்கிழாரால் செய்யப்படாமல் ஆரியப் பார்ப்பனராற்செய்து சேர்க்கப்பட்டனவாமென்று

கூறுதல் நன்றே, என்பதை அறிவுடையார் ஆராய்ந்து கைக்கொள்ளக் கடவர். திருத்தொண்டர் புராணத்திற் பதினொரு நாயன்மார் வரலாறுகளைக் கூறுகின்றுழி, அவர்களுடைய குலத்தை வேளாள குலமென அக் குலத்தினர்க்குரிய பல உயர்ந்த தன்மைகளாற் சிறந்தெடுத்துக் கூறிய ஆசிரியர் சேக்கிழார், 'வாயிலார்,' 'இளையான் குடிமாறர்' என்னும் இருவர் புராணங்களில் இரண்டிடத்துமட்டும் இழிந்த சூத்திரப் பெயர்களால் வேளாளரைக் கூறியிருப்பரா? வாயிலார் புராணத்திற் போந்த "தொன்மை நீடிய சூத்திரத் தொல்குலம்" என்னுஞ் சொற்றொடரிற் 'பழமை' எனப் பொருள்படுந் 'தொன்மை' 'தொல்' என்னுஞ்சொற்கள் ஒரு பயனுமின்றி இருகால்வந்து 'கூறியது கூறல்' என்னுங் குற்றத்திற்கு இடனாய் நிற்றலின் இச்சொற்றொடர் சேக்கிழாரால் செய்யப்பட்டபடியாகவன்றிச், சூத்திரச்சொல்லை நுழைத்தற்பொருட்டு ஆரியப் பார்ப்பனர் எவராலோ திரிபுபடுத்தப்பட்டதொன்றாமென்பது துணியப்படும். இங்ஙனமே, இளையான்குடிமாறர் புராணத்திற் போந்த "நம்புவாய்மையின் நீடு சூத்திர நற்குலம்" என்னுஞ் சொற்றொடரில் இழிவினைக் குறிக்குஞ் சூத்திரச் சொல், 'நற்குலம்' என்னும் உயர்வினைத் தருந் தொடர்மொழியோடு இயைதற்கு உரிமையின்றி மாறுபடுகின்றமையின் அது 'மாறுகொளக் கூறல்' என்னுங் குற்றத்திற்கிடனாய்ச், சேக்கிழாராற் செய்யப்படாமற் பிறரொருவராற் செய்யப்பட்டதேயா மென்பதனை நன்கு புலப்படுத்தும். இங்ஙனமே, சேக்கிழாரார் செய்யப்படாமல் ஆரியப் பார்ப்பனரால் இடையிடையே திரிபுபடுத்தப்பட்டனவுஞ் செருகப்பட்டனவுமாகிய வழுவுடைச் செய்யுட்களை அவரே செய்தனவாக நாட்டுதற்குப் புகுந்து, அறிவின் மிக்க அச் சான்றோர்க்கு இத்தகைய புல்லிய குற்றங்களை ஏற்றுதற்கு

இடந்தருதல் அறிவுடையார்க்கு முறையாகுமா கூறு மின்கள்!

இனித், திருவாக்கூர்த் தேவாரத்தில் "இன்மையாற் சென்றிரந்தார்க்கு இல்லையென்னாது ஈந்துவக்குந் தன்மையார்" என்று திருஞானசம்பந்தப் பெருமானது அருமைத் திருமொழியால் உயர்த்துக் கூறப்பட்டவர்கள் வேளாளரே என யாம்கூறச், சேக்கிழார் "இன்மையால் இரந்து சென்றார்க்கில்லை யென்னாதே ஈயுந், தன்மையாரென்று நன்மை சார்ந்த வேதியரைச் சண்பை, மன்னனார் அருளிச் செய்த மறைத்திருவாக்கூர் அவ்வூர்" என்று அவரை அந்தணராகக் கொண்டாரென எதிர்ப் பக்கத்தவர் கூறினர். திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச்செய்த திருவாக் கூர்த் தேவாரப் பதிகத்தை முதலிலிருந்து ஒருசிறிது உற்றுநோக்குவார்க்கும், ஆண்டு அப் பெருமானாற் சிறப்பித் துரைக்கப்பட்டவர்கள் வேளாளரேயாதல் தெற்றென விளங்காநிற்கும். அப் பதிகத்தின் மூன்றாஞ் செய்யுளில்,

"வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்குந்
தாளாளர் ஆக்கூரிற் றான்றோன்றி மாடமே."

என வேளாளரையே அவர்க்குரிய பெயரால் வெளிப்பட எடுத்தோதி, யார் எவற்றைக் கேட்பினும் அவர்க்கு அவற்றையெல்லாம் வரையாது கொடுத்துதவும் ஈகையிற் சிறந்தார் அவ் வேளாளர்களே யென்பதுந் தெளித்துக்கூறி யிருக்கின்றார். இவ்வாறு திருவாக்கூரில் இருந்த வேளா ளர்கள் வள்ளன்மையால் மிக்கவர்கள் என்பது மூன்றாஞ் செய்யுளிற் கூறப்பட்டிருத்தலால், இதற்குப்பின் ஒன்பதாஞ் செய்யுளில் வரும்,

"இன்மையாற் சென்றிரந்தார்க்கு
இல்லையென்னாது ஈந்துவக்குந்
தன்மையார்."

என்பதும் அவ் வேளாளரையே குறிப்பதாதல் சிறுமகா ரானும் உணரற்பாலதேயாம். அற்றேல், இத்துணை எளிதில் உணரக்கிடப்பதாகிய இத் தேவாரப் பதிகப்பொருளை ஆய்ந் துணராமல் ஆசிரியர் சேக்கிழார் அதனை 'வேதியர்' மேல் ஏற்றியது என்னை யெனின்; 'வேதியர்' என்னும் சொல்லைக் கேட்ட அளவானே, இக்காலத்துப் போலிச் சொல்வழக் கைக் கொண்டு அக்காலத்து வழங்கிய அதற்கு ஆரியப் பார்ப்பனர் என்று பொருள் கோடல் சிறிதும் பொருந் தாது; 'வேதங்கள்' என்பன ஆரியவேதங்களே என்று கோடலும் பொருந்தாது.

உக. பழைய வேதங்களென்பன தமிழ்மறைகளேயாம்

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகை யுறுதிப்பொருள்களைக் கூறிய பழைய தமிழ்நூல்களே 'நால்வேதம்' எனவும், 'நான்மறை' எனவுந் தமிழ்மொழிக் கண் வழங்கப்பட்டன. பண்டைக்காலத்து வழங்கிய தமிழ் நான்மறைகள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை யுறுதிப்பொருள்களை உணர்த்துமென்பதும், அவை இறைவனால் ஆலமர நீழலின்கீழ் அருந்தவர் நால் வர்க்கு அறிவுறுத்தப்பட்டன வென்பதும்,

> "ஆல நீழல் அன்றிருந்து அறநெறி
> நால்வர் கேட்க நன்கினிது உரைத்தனை."

எனத் திருவெழுகூற்றிருக்கையில் ஆசிரியர் நக்கீரனும்,

> "அருந்தவருக்கு ஆலின்கீழ் அறம்முதலா நான்கினையும்
> இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடீ."

எனத்திருச்சாழலில் மாணிக்கவாசகப் பெருமானும்,

"அன்றாலின் கீழிருந்தங்கு அறம்புரிந்த அருளாளர்."

எனத் திருஞானசம்பந்தப் பெருமானும்,

"அன்றாலின் கீழிருந்தங்கு அறஞ் சொன்னானை."

எனத் திருநாவுக்கரசு நாயனாரும்,

"அன்றாலின் நீழற்கீழ் அறம்நால்வர்க் கருள்புரிந்து."

எனச் சுந்தரமூர்த்தி நாயனாரும் அருளிச் செய்யுமாற்றால் நன்கு விளங்கும்.

ஆரிய வேதங்களோ இவ்வாறு அறம் பொருளின்ப வீடுகளை உணர்த்துவன வென்றாதல், அவை சிவபிரானால் அருளிச் செய்யப்பட்டனவென்றாதல் பழைய ஆரியநூல்களுள் யாண்டுஞ் சொல்லப்படவில்லை. ஆரிய வேதங்களின் பிறப்பைப்பற்றிக் கூறும் பழைய ஆரியநூற் கூற்றுகளும் ஒன்றோடொன்று பெரிதும் மாறுபட்டு நிற்கின்றன; அம் மாறுபாடுகளுட் சில எண்டெடுத்துக் காட்டுதும்: "இருக்கு, சாமம், எசுர் என்பவற்றின் செய்யுட்கள் புருஷனைப் பலியாகவேட்ட வேள்வியினின்று பிறந்தன" என்று இருக்குவேதத்துப் 'புருஷசூக்தம்' (க0, கூ0) மொழிகின்றது. இனி, "ஸ்கம்பம் என்னும் நிலைக்களப் பொருளிலிருந்து இருக்குமொழிகள் வெட்டியெடுக்கப்பட்டன, எசுர் மொழிகள் பிறாண்டி யெடுக்கப்பட்டன; அப் பொருளின் மயிர்களே சாமப் பாட்டுகள்; அதர்வ ஆங்கீரசப் பாக்கள் அதன்வாய்" (க0, எ, உ0) என்றும் "இருக்கு மொழி யிந்திரனினின்று பிறந்தது, இந்திரன் இருக்கினின்றும் பிறந்தனன்" (கரு, ச, ரு அ) என்றும், "வேதங்கள் காலத்திலிருந்துண்டாயின" (ககூ, ருச, ரு) என்றும், "வேள்விக்குப்பின் எஞ்சிய எச்சிலிலிருந்து இருக்கு சாமப் பாக்களும், பாவகைகளும், புராணங்களோடு எசுரும், வானில் உறையும் எல்லாத் தேவர்களும் உண்டாயினர்."

(கக, எ, உச) என்றும் அதர்வவேதம் நுவல்கின்றது "வேதங்கள் அக்கி வாயு சூரியன் என்னும் மூன்றிற் றோன்றின." எனச் சாந்தோக்கிய உபநிடதம் புகல்கின்றது.

"ஈரவிறகில் உண்டாக்கின தீயிலிருந்து புகையின் பல வேறு திரிபுகளும் உண்டாதல்போல, இந்தப் பெரிய பொருளின் உயிர்ப்பிலிருந்து இருக்குவேத எசுர்வேத சாமவேதங்களும், அதர்வாங்கிரசுகளும், இதிகாச புராண வித்தைகளும், உபநிடதங்கள் சுலோகங்கள் சூத்திரங்கள் பல்வேறுரைகளும் உண்டாயின." (கச, ரு, ச, க0) என்று சதபதபிராமணம் புகல்கின்றது. "வேதங்கள் பிரஜாபதியின் தாடிமயிர்கள்." (ங, ஙகூ, க) என்று தைத்திரீய பிராமணங் கூறுகின்றது.

இவ்வாறு ஆரியவேதங்களின் பிறப்பைப் பற்றிப் பழைய ஆரிய நூல்கள் ஒன்றோடொன்று மாறுபட மொழிதல்போலவே, பின்றைக் காலத்து வடமொழி நூல்களும் அவற்றின் பிறப்பைப் பலவேறுபடக் கிளந்து மாறுபட்டு நிற்கின்றன. அம் மாறுபாட்டுரைகளுள்ளுஞ் சில இங்கெடுத்துக் காட்டுதும்: "பிரமாவின் வாயிலிருந்து வேதங்கள் பிறந்தன." (ங, கஉ, ஙச, ஙஎ) எனப் பாகவத புராணமும், "வேதங்கள் காயத்திரியிலிருந்து உண்டாயின." (ககருககூ) என அரிவம்சமும், "சரசுவதியே வேதங்களுக்குத் தாய்." (சாந்திபர்வம், கஉ, கூஉ0) என மகாபாரதமும், "அவன் (விஷ்ணு) இருக்கு சாம எசுர் வேதங்களாய் இருக்கின்றான்." (ங, ங, ககூ) என விஷ்ணுபுராணமும் புகல்கின்றன.

இனி, வேதங்களை ஆக்கிய இருடியர்களோ தாந்தாமே அவ் வேதப்பாட்டுக்களைப் பாடியவர்களாக அவற்றின்கண் விளக்கமாய்ச் சொல்லியிருக்கின்றனர்; அவற்றுட் சில

பழைய வேதங்களென்பன தமிழ்மறைகளேயாம் கூறு

வருமாறு: "கண்ணுவர்கள் நினக்கு ஒரு வேண்டுகோளுரையைச் செலுத்துகின்றனர்." (க, சஎ, உ) எனவும், "குதிரைகளை நுகத்திற் பூட்டும் ஓ இந்திரனே, கோதமர்கள் நினக்குச் செவ்வையான பதிகங்களைப் பாடுமாறுசெய்." (க, சுச, சுக) எனவும், "ஓ அசுவினிகளே, நும்மைப் பெருமைப்படுத்தும் இவ் வேண்டுகோளுரைகளைக் கிரித்சமதர்கள் நினக்காகச் செய்தனர்." (உ, ௩௬, அ) எனவும், "பதிகங்களை ஆக்குவோனான விருகதுக்தன் ஏற்கற்பாலதும் மாட்சிமிக்கதும் ஆன ஒரு பதிகத்தை இந்திரனுக்குப் பாடினான்." (க0, ருச, சு) எனவும் இருக்கு வேதத்தினுள்ளேயே அவ்விருடிகள் சொல்லுதல் அறியப்படும். இங்ஙனம் இருடிகள்தாமே அப் பதிகங்களை ஆக்கினாரென்பது அவ் விருக்குவேதத்தில் இன்னும் பலவிடங்களிலுஞ் சொல்லப்பட் டிருக்கின்றது; அவையெல்லாம் ஈண்டெடுத்துக் காட்டப்புகின் இது மிகவிரியும்.

இங்ஙனமாக மேற்காட்டிய ஆரியமொழி நூலுரைகளில் ஓரிடத்தாயினுஞ் சிவபிரான் ஆலநீழலிலிருந்து அருந்தவர் நால்வர்க்கு ஆரிய வேதங்களை அறிவுறுத்தினனென்னும் வரலாறு ஒருசிறிதுங் குறிப்பிடப் படாமையால், தமிழ்நாட்டின்கட் பண்டுதொட்டுப் பழந்தமிழ் நூல்களில் வழங்கிவரும் அவ் வரலாறு, இறைவன் ஆலின் கீழமர்ந்து அருந்தவர்க்கு அறிவுறுத்தின தமிழ்மறைகளையே குறிக்கும் அல்லாமல், இந்திரன் வருணன் முதலான சிறு தெய்வங்கள்மேல் ஆரியர் பாடிய பாட்டுக்கள் நிறைந்த இருக்கு எசுர் சாமம் அதர்வம் முதலான ஆரிய நூல்களைக் குறியாதென்று கடைப்பிடிக்க. உண்மை யிவ்வாறிருப்ப, இற்றைக்கு ஐந்நூறாண்டுகட்குமுன் தமிழ் நாட்டின்கண் இயற்றப்பட்ட வடமொழிக் கந்தபுராணத்தும், அதற்குச் சிறிதுகாலம் பிற்பட்டுக் கச்சியப்பசிவா

சாரியாரால் அதன் மொழிபெயர்ப்பாகச் செய்யப்பட்ட தமிழ்க் கந்தபுராணத்தும், இவ் வரலாறு ஆரியவேதங் களையே குறிப்பதொன்றுகப் பார்ப்பனர்களாற் கரவாய் ஒரு புரட்டுரை எழுதிச் சேர்க்கப்பட்டுளது. அவ்வாறு அவர் செய்தது தம் ஆரிய நூல்கட்குப் பெருமை தேடிக் கொள் ளுதற்கேயாம். மெய்யும் பொய்யும் பகுத்துணர மாட் டாமல், ஆரியர்க்கு அடிமைகளாய்த் திரியுந் தமிழ்ப்புலவர் சிலரும் இக் கந்தபுராணப் புளுகை ஒரு மேற்கோளாய் எடுத்துக்கொண்டு, 'ஆரியவேதங்களையே சிவபெருமான் அருந்தவருக்கு ஆலின்கீழ் அறிவுறுத்தினன்' எனக் கரை கின்றனர்; ஆயினும், இது மேற்காட்டிய ஆரியநூன் மேற் கோள்களுக்கெல்லாம் முற்றும் முரணுதல் காண்க. சிவ பெருமான் அருளிச் செய்தவைகள் எல்லாம், அறம் பொருள் இன்ப வீட்டின் இலக்கணங்கள் இன்னனவென்று விளக்கும் விளக்கவுரைகளும், அவற்றை எய்துதற்கு வாயி லாவன இவையாகலின் இவற்றைச் செய்கவென்னும் வியங் கோளுரைகளும், அவற்றைப் பயவாதன இவையாகலின் இவற்றைத் தவிர்கவென்னும் விலக்குரைகளுமாய்த் 'தொல் காப்பியம்,' 'திருக்குறள்' போல் இருக்குமே யல்லாமல், ஒப் புயர்வற்ற முழுமுதற் றெய்வமாகியதன்னின் எத்தனையோ படி கீழ்த்தாழ்ந்து பிறப்பு இறப்புத் துன்பங்களிற் கிடந் துழல்வாரான இந்திரன் வருணன் முதலிய சிறுதெய்வங் களை வேண்டிப்பாடும் வணக்கவுரைகளாய் இருத்தல் ஒரு வாற்றானும் இசையாதாகலின், இவ் வுண்மையினை நடுநிலை பிறழாது ஆராய்ந்தறிந்துகொள்க. எனவே, சிவபிரான் ஆலின்கீழிருந்து அறம் பொருள் இன்ப வீடுகளை அருந் தவருக்கு அறிவுறுத்திய அருமறைகள் தமிழ்நான்மறை களேயாம் என்பதுந் தெற்றென வுணரற்பாற்று. இந் நால் வகை யுறுதிப் பொருள்களைச் சிறக்கக்கூறுந் திருவள்ளுவர்

திருக்குறள் 'மறை' எனவும் 'வேதம்' எனவும் பண்டு தொட்டு இன்றுகாறும் வழங்கப் படுதலுங் காண்க.

அற்றேல், 'வேதம்' என்பது வடசொல்லன்றோ வெனின்; ஆரிய நூல்களில் மிகப் பழையதாகிய 'இருக்கு வேதத்தில்' வேதம் என்னுஞ் சொல் அறிவுநூல் என்னும் பொருளிற் காணப்படவில்லை. ஆனால், அதன் எட்டாவது மண்டிலம் கூ-ஆம் பதிகம், ௫-வது செய்யுளில் மட்டும் 'வேதேந' என்னும் ஒருசொற் காணப்படுகின்றது; அங்கு அச் சொல் 'புற்கட்டினால்' என்னும் பொருளில் வழங்கப் பட்டிருக்கின்றது. எசுர்வேதத்திலும் 'வேதம்' என்னுஞ் சொற் புற்கட்டினுக்கே பெயராக வழங்கப்பட்டிருக் கின்றது. சாம வேதத்தில் வேதம் என்னுஞ் சொற் காணப் படவே யில்லை. மற்று இறுதிக் கண்ணதாகிய அதர்வ வேதத்திலேதான் அது முதன்முதற் காணப்படுகின்றது; இவ் வதர்வவேதம் ஏனை மூன்று வேதங்களுக்கும் பிற்பட்ட காலத்தே தோன்றிய தென்பதற்கு, அவ் வதர்வவேதப் பாட்டொன்று[1] அம் மூன்று வேதப்பெயர்களோடு தன்னை யும் எடுத்தோதுமாற்றால் தெளியப்படும். எனவே, ஏனை மூன்று வேதங்களோடு அதர்வவேதப் பாட்டுக்களையுஞ் சேர்த்து வேதங்களை நான்காக்கிய காலத்திலேதான், ஆரியருந் தமிழரும் ஒருங்குசேர்ந்து தொகுத்து வகைப் படுத்திய அவ் வாரியமொழிப் பாட்டுகளுக்கு 'வேதம்' என்னும் பெயர் சூட்டப்படுவதாயிற்று.

இனி, இவ் வாரியமொழிப்பாட்டுகளை அங்ஙனம் வேதங்களாக்கிய காலந்தான் யாதோவெனின், அது மகா பாரதப் போர் நிகழ்ந்த காலத்திற்கும் பிற்பட்டதேயாம். யாங்ஙனமெனிற், சுக்கில எசுர்வேதத்தைச் சேர்ந்த சதபத

1 அதர்வவேதம், கO, எ, உO.

பிராமணத்திற் பாண்டவரின் வழித்தோன்றலாகிய ஜந்மே ஜய பரிக்ஷித் என்னும் அரசன்பெயர் கூறப்படுதலானும், பாண்டவர் ஐவரில் ஒருவனான சகதேவமன்னன் பெயரும், அவன் புதல்வனாகிய சோமகன் பெயரும், பீஷ்மரின் தந்தையாகிய சந்தநுவின் பெயரும், அவனுடன் பிறந்த தேவாபிமுனிவன் பெயரும் இருக்குவேதத்திற் காணப்படுத லானும், இத் தேவாபி முனிவனாற் செய்யப்பட்ட பதிகம் ஒன்றும் அவ் விருக்குவேதத்திற் சேர்ந்திருத்தலானும் இருக்குவேதப் பாட்டுகள் முற்றும் இவ் வரசர்கள் காலத் திற் செய்யப்பட்டனவல்ல வாயினும், அவையெல்லாம் ஒருங்குதொகுத்து வகுக்கப்பட்ட காலம் மேற்குறிப்பிட்ட மன்னர்கள் காலத்திற்கும் பிற்பட்டதேயாமென்பது மட்டுந் தெற்றெனத் துணியப்படும். இதனாற், பாண்டவர் காலத்த வரான வியாசரால் ஆரிய மொழிப் பாட்டுகள் வேதங்க ளாக வகுத்து ஒழுங்கு செய்யப்பட்டனவென் னும் வழக்கும், அதுபற்றியே அவர் 'வேதவியாசர்' எனப் பெயர்பெற்றனர் என்பதும் உண்மையாதல் காண்க. இங்ஙனம் பாரதப் போர் நிகழ்ந்த காலத்திற்குப் பின்னே ஆரியமொழிப் பாட்டுகள் இருக்கு எசுர் முதலியனவாகப் பாகுபடுத்தப் பட்டபோதுதான் அவற்றிற்கு 'வேதம்' என்னுஞ் சொல் சூட்டப்படுவ தாயிற்று

இனி, அவ் வேதம் என்னுஞ்சொல் மறைநூல் என்னும் பொருளிற் பாரதப்போர்க்குப் பிற்பட்ட ஆரிய நூல்களிற் காணப்படுதல்போல, அப் போர்நிகழ்ந்த காலத் தும் அதற்கு முன்னுந் தோன்றிய ஆரியநூல்களிற் காணப் படாதாக, அவ் 'வேதம்' என்னுஞ் சொல்லும் அதனோ டொத்த 'மறை' என்னுஞ் சொல்லும் அப் பாரதப்போர் நிகழ்ந்த காலத்தும் அதற்கு மிக முற்பட்ட காலத்தும் எழுதப்பட்ட செந்தமிழ்ப் பாட்டுகளிலே காணப்படுமாயின்,

அச் சொற்கள் தமிழர்க்கே உரியனவாமென்பது இனிது துணியப்படுமன்றோ? பாரதப்போர் நிகழ்ந்த காலத்தே முரஞ்சியூர் முடிநாகராயராற் பாடப்பட்ட "மண்டிணிந்த நிலனும்"[1] என்னும் மிகப் பழையசெய்யுளில் "நால் வேத நெறி" என 'வேதம்' என்னுஞ் சொல்லும், அது நால் வகைத்தாதலுங் குறிக்கப்பட்டமை காண்க. பாரதப்போர் நடைபெற்ற காலத்தில் ஆரியமொழிப் பாட்டுகள் நான்கு கூறாகப் பகுக்கப்பட வில்லையென்பதும், அவற்றிற்கு 'வேதம்' என்னும் பெயர் சூட்டப்பட வில்லையென்பதும் மேலே காட்டப்பட்டமையின், அவ் வாரியமொழி வேதங்களுக்கு முன்னே பாடப்பட்டதாகிய இச் செந்தமிழ்ப் பாட்டிற் குறித்துரைக்கப்பட்ட 'நால்வேதங்கள்' தமிழ் மறைகளே யாதலும், 'வேதம்' என்னும் பெயர் தமிழ்ச் சொல்லே யாதலும் நன்கு பெறப்படும்.

இனிப், பாரதப்போர் நிகழ்தற்குப் பன்னூற்றாண்டுகள் முன்னிருந்த குமரிநாட்டில் அரசுபுரிந்த, 'பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக்' காரிகிழார் பாடிய "வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்"[2] என்னுஞ் செய்யுளில் "நான்மறை" என்னுஞ் சொற்றொடர் காணப் படுதலின், ஆரியமொழி வேதங்கள் தோன்றுதற்குப் பன் னெடுங்காலம் முன்னரே தமிழில் நான்கு வேதங்கள் உண் மையும், அவை 'மறை' என்னும் பெயரானும் வழங்கப் பட்டமையும் பெற்றாம். முதுகுடுமிப் பெருவழுதி என் னும் பாண்டிய மன்னனும், அவனைப் பாடிய புலவர்களான காரிகிழார், நெட்டிமையார், நெடும்பல்லியத்தனார் என்னும் புலவர்களும் இப்போதுள்ள குமரிமுனைக்குத் தெற்கே பண்டைநாளில் நிலவியிருந்த குமரிநாட்டில் இருந்தவர்கள் என்பதற்கு, அக் குமரிநாட்டில் ஓடிய பஃறுளியாற்றை

1. புறநானூறு, உ. 2. புறநானூறு, ௬.

நெடும்பல்லியத்தனார் என்னும் புலவர் "நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே"[1] என எடுத்துக் கூறுமாற்றால் தெளியப் படும். பஃறுளியாறு ஓடிய பண்டைத் தமிழகமாகிய குமரி நாடு பின்னர்க் கடல்கொண்டமை, "பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"[2] எனப் போந்த சிலப்பதிகார அடிகளால் இனிது அறியப்படும்.

எனவே, பண்டைத் தமிழ் அறிவுநூல்கள் 'மறை' எனவும், 'வேதம்' எனவும் பெயர்கொண்டு வழங்கினமை தெள்ளிதிற் புலப்படும். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு கூறாக வகுக்கப்பட்ட பண்டைத் தமிழ் மறைகளின் விழுப்பமும் நுட்பமும் நன்குணர்ந்தே, தமிழரோடு உறவாடிய ஆரியர் பின்னர்த் தாங்கொணர்ந்த பாட்டுக்களையுந் தமிழ்ச்சான்றோர் உதவியால் நான்கு கூறாக வகுத்துக்கொண்டு, அவற்றிற்குத் தமிழர் வழங்கிய 'வேதம்' என்னுஞ்சொல்லையுஞ் சூட்டிவிட்டனர். குமரிநாடு கடல்வாய்ப்பட்ட காலத்திலேதான் தமிழ் வேதங்களும் ஏனைப் பல்லாயிரந் தமிழ்நூல்களும் நீரில் அமிழ்ந்திப் போயின. ஓர் அரக்கன் வேதங்களை யெடுத்துக்கொண்டு கடலில் அமிழ்ந்திப்போயினான் என்னும் பழைய புராண கதையுந் தமிழ்வேதங்கள் கடல்கோட் பட்ட உண்மையினையே தெரிப்பதாகும். முதலிலிருந்த தமிழ்வேதங்கள் இங்ஙனங் கடல்வாய்ப்பட்டனவேனும், அவற்றின்கட் கூறப்பட்ட பொருள்கள் தொன்றுதொட்ட வழக்காய்த் தொடர்ந்து வருதலின், அதன்பிற்றோன்றிய காலத்தில் ஆசிரியர் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அவற்றை யெல்லாந் தமது அஃகா அறிவால் முழுதெடுத்துத்

1. புறநானூறு, ௯. 2. சிலப்பதிகாரம், ௧௧, ௧௭—௨0.

தொகுத்து வகுத்துத் திருக்குறள் இயற்றியருளினரென்க. அறம் பொருளின்பங்களை இலக்கண வகையால் விளக்குவது ‘தொல்காப்பியம்’ என்றும், இலக்கிய வகையால் விளக்குவது ‘திருக்குறள்’ என்றும் உணர்தல் வேண்டும். இவ்விரண்டு நூல்களிலும் ‘வீட்டியல்’ சுருக்கமாகக் கூறப்பட்டமையின், அதனை விரித்து விளக்குதற்கே, ‘ஆகமங்கள்’ எனப் பெயரிய தமிழ்நூல்கள் பின்னர் எழுந்தன. இப்போது வடமொழியில் எழுதப்பட்டுள்ள சிவாகமங்களெல்லாம் பழையநாளிலிருந்த தமிழாகமங்களின் மொழிபெயர்ப்பேயாம். இஃது எற்றாற் பெறுதுமெனின்; இவ்வாகமங்களிலுள்ள சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நால்வகைப் பொருள்களெல்லாந் தமிழ்நாட்டையுந், தமிழ்நாட்டிலுள்ள சிவபிரான் கோயில்களையுந், தமிழரது மெய்யுணர்வினியல்பையுமே பற்றியனவாய் இருப்பக் காண்டுமல்லது, ஆரியர் பெருந்தொகையினராய் வந்து குடியேறிய வடநாட்டையும் வடநாட்டுக் கோயில்களையும் வடவரது உணர்வினியல்பையும் பற்றியனவாய் இராமையும், வடக்கேயுள்ள மிகச் சிறந்த வடநூற் புலவர்களும் இச் சிவாகமநூற்பொருள்களை ஒருசிறிதும் உணராராயிருத்தலும் ஆகிய ஏதுக்களாற் பெறுதுமென்பது. தமிழ்மறைகள் கடல் கொண்டு மறைந்த பின்னரே, ஆரியமொழிப் பாட்டுகள் வேதங்களெனப் பெயர்பெற்று, ஆரியரது பெருமுயற்சியாற் பெரிது வழங்கலாயின.

அற்றேற், கடல்கோட்பட்டவை தமிழ்வேதங்களேயல்லாமல், ஆரியவேதங்கள் அல்லவென்பதற்குச் சான்று என்னையெனிற்; கூறுதும்: பண்டைநாளிலேயே தமிழ்மொழி எழுத்துவடிவில் எழுதப்பட்டு வந்ததொன்றாகும்; அவ்வுண்மை,

“உட்பெறு புள்ளி யுருவா கும்மே.”

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்."

"எகர ஒகரத் தியற்கையும் அற்றே."

"புள்ளி இல்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை யுயிரோடு உருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்த லாறே."[1]

என்றற் றொடக்கத்துத் தொல்காப்பியச் சூத்திரங்களால் ஐயுறவின்றித் துணியப்படும்; இவ்வாற்றால், தொல்காப்பியனார் காலத்துக்கு முற்றொட்டே தமிழ்நூல்கள் வரிவடிவில் எழுதப்பட்டு வந்தமை தேற்றமாம். ஆகவே, ஏட்டுச் சுவடிகளாயிருந்த தமிழ்மறைகளும், ஏனை எண்ணிறந்த தமிழ்நூல்களுங் கடல்வாய்ப் புக்கமையே உண்மை நிகழ்ச்சியாதற்கு ஏற்புடைத்து. மற்று, ஆரியவேத காலத்தில் ஆரியர் தமது மொழியை எழுத்துவடிவில் எழுதத்தெரிந்தார் அல்லர்; அதனால் அவர் வேதப்பாட்டுக்களையும் பிறவற்றையுங் கிடைகூட்டி நெட்டுருப்பண்ணியே பாதுகாத்து வந்தனர். அவர்களுடைய ஆரியநூல்கள் ஏட்டுச் சுவடிகளாயிருந்ததேயில்லை. தம்முடைய நூல்களைக் கிடைகூட்டி நெட்டுருப்பண்ணிச் சொல்லும் ஆரியரது வழக்கம், அவ்வாரியரை முழுதும் பின்பற்றிய பார்ப்பனர்பால் இன்றும் நடைபெறக் காணலாம். இங்ஙனம் ஏட்டுச்சுவடிகளா யில்லாமல், ஆரியர்தம் நினைவளவாய் வழங்கிய ஆரியவேதங்கள் கடல்வாய்ப் புகுதல் ஆகாமையாற், கடல்கொண்டு மறைந்தன தமிழ்மறைகளேயாமென்பதூஉம், அங்ஙனம் மறைந்த தமிழ்மறைகளையே இறைவன் மக்கள் உய்யவேண்டி ஆசிரியர் திருவள்ளுவநாயனார் வாயிலாக வெளிப்படுத்தருளினனென்பதூஉம் அறியப்படும். தமிழ்மறைகள்

---

1. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சூ. கச, கரு, கசு, கஎ.

வழங்கிய காலத்து உடன் வழங்கி, அவற்றின் பொருள்களை இலக்கண வகையால் விரித்தோதிய தொல்காப்பியம் ஒன்றுமே, அம் மறைகளின் பழைய வழிநூலாய் இப்போ தெஞ்சிநிற்பதாகும். மற்றுத் திருக்குறளோ அம் மறைகளுக்குப் பின் அவற்றின் பொருள்களை ஆண்டுள்ளவாறே பெரும்பாலும் எடுத்து இலக்கியவகையால் விளக்குவதாகும் என்று உணர்ந்துகொள்க.

அற்றேல், தமிழ்நான்மறைகள் வழங்கியகாலத்து உடன் வழங்கிய தொல்காப்பியங் கடல்வாய்ப்படாமல் இன்றுகாறும் வழங்கிவராநிற்ப, அத் தமிழ்மறைகள் மட்டுங் கடல்வாய்ப் புக்கது என்னையெனின்; அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கில் இலக்கண வகையாலும் இலக்கிய வகையாலும் அரிதுணர் பொருளனவாய்க் கிடந்த அரும்பொருள்களை, அவை தம்மை ஆராவேட்கையோடு ஏற்றுப் பயன்படுத்தத் தக்கார்க்குமட்டும் மறைவாய் அறிவுறுத்துவனவே 'மறைகள்' ஆகும்; அத் தகுதிப்பாடு இல்லாதார்க்கு அந் நுண்பொருட் பெற்றிகளை அவை உணர்த்துவன அல்ல. ஆகவே, மறைகள் எல்லார்மாட்டும் பரவி வழங்குவனவும் அல்ல. தகுதியுடையார் சிலர்க்குள் மட்டும் வழங்கி, அவர் இல்லையானவழி அவைதாமும் இல்லையாதலே மரபு. பண்டைத் தமிழகமாகிய குமரிநாட்டில் உயிர்வாழ்ந்த பண்டைத் தமிழ் மக்கள், தமது நாட்டின் நிலவள நீர் வள்த்தானுந், தமக்குள்ள அறிவு அன்பு அருள் கடவுள்வழிபாடு முதலான நலங்களானும் நாகரிகத்தில் நாளுக்குநாட் பிறைவளருமாறுபோல் வளர்ந்து வந்தனர். அந் நாளிற் கடவுளின் திருவருட் பேரின்பத்தைப் பெறத்தக்க பெரியாரும் அவருட் பலர் மிகுந்திருந்தனர். அதனாற் கடவுளின் பேரருளும் அவர்பாலிருந்து அவர்க்கு இம்மை மறுமைக்குரிய உதவி

களையெல்லாம் ஆற்றிவந்தது. அவ்வாறு இறைவனருள் அவர்க்கு உதவியாய் நின்று, அவரிற் சான்றோராயிருந்தா ருள்ளத்தை உந்தி வந்தமையினாலேயே, அச் சான்றோர்பால் நின்றுந் தமிழ்மறைகள் தோன்றித் தக்கார்க்குப் பயன்பட லாயின. இங்ஙனமெல்லாம் நாகரிக வாழ்க்கையிற் சிறந் தோங்கி வந்த பண்டைக் குமரிநாட்டுத் தமிழ்மக்களின் கால்வழியில் வந்தோர் காலஞ்செல்லச் செல்லத், தாம் பெற்ற பொருட் செல்வத்திலும் அதன்வாயிலாகவருஞ் சிற்றின்ப விளையாட்டிலும் இறங்கித், தம் முன்னோர்க்குரிய அன்பு அருள் கடவுள்வழிபாடு என்பவைகளில் வழுவித், தீய ஒழுக்கத்தினராய் மாறவே, அவருட் சான்றோராயினார் தொகை சுருங்கிற்று; அவரைத் திருத்துதற்கு வழியாவது அவர் மயங்கிய இம்மைச் செல்வத்தை யழித்தலேயெனத் திருவுளங்கொண்டு இறைவனுக்குஞ் சினம் மூண்டது. உடனே, தமிழ்நாட்டுக்கு வடக்கிலும் மேற்கிலுங் கடல்க ளாய் இருந்த பகுதிகள் நிலங்களாய் மாற, அக் கடல்கள் வற்றிய நீர் ஆவியாய் மேலெழுந்து, கடவுளின் திருவரு ளாணையாற் குமரிநாட்டிற் பொழிந்து பெருக்கெடுத்து அதனைக் கடலாக்கி அழித்தது. அக் காலத்து அழிந்து பட்ட அந் நாட்டில் முன்னே அருகி வழங்கிவந்த தமிழ் மறைகளும், பெருகிய வழக்கில் இல்லா ஏனை எண்ணிறந்த தமிழ்நூல்களும் அவ் வெள்ளத்தே புக்குமறைந்தன. மற்றுத், தொல்காப்பியமோ, அறம் பொருள் இன்ப வீடுபேற் றுறுதிப்பொருள் நுட்பங்களைத் தக்கார்க்கு மட்டும் அங்ஙனம் மறைவில் வைத்து விளக்குவதன்றாய், எல்லார்க்கும் புலனாமாறு அவற்றை இலக்கண வகையால் எடுத்து விரித்து விளக்குவதொன்றாய்த், தமிழ் கற்பார் எத்திறத்தவராயினும் அவர் எல்லார்க்கும் இன்றியமையாப் பெருநூலாய் இருந்தமையின், அதனைக் குமரிநாட்டில்

இருந்தார் மட்டுமேயன்றி, அதற்கு வடக்கின் கண்ணதான இத் தமிழ்நாட்டிலிருந்தாரெல்லாருங் கூடப் பயின்று பாதுகாத்துவந்தனர். அதனாற், குமரிநாட்டோடு உடனழியாது எஞ்சி நின்ற இத் தமிழ்நாட்டில் தொல்காப்பியம் இன்றுகாறும் வழங்கப்பெறுவதாயிற் றென்க.

பண்டைக் குமரிநாட்டில் இருந்தாரைப் போலவே, இவ் வுலக வாழ்வில் மயங்கி அருளொழுக்கத்தையுங் கடவுள் வழிபாட்டையுங் கைவிட்ட எகுபதியர், சாலடியர், அசீரியர், எபிரேயர், பெரூவியர், மெக்சிகர், கிரேக்கர், உரோமர் முதலான பழைய நாகரிக மக்களெல்லாருந், தம் நாகரிக வாழ்க்கையின் உச்சியைத் தொட்டுத் தலைதடுமாறிய சில பல நூற்றாண்டுகளுக்குப் பின், கடவுளது சினத்தால் அழிக்கப்பட்டு மறைந்தமை அவர்தம் வரலாறுகளால் நன்கறியப்படும். வடநாட்டிற் குடிபுகுந்த ஆரியரும் இங்ஙனமே தமது நாகரிக வாழ்வில் மயங்கத் தலைப்பட்டதும், அலக்சாந்தர் முதல் அடுத்தடுத்துப் படையெடுத்து வந்த அயல்நாட் டரசரால் அலைக்கப்பட்டுத் தமதுரிமையெல்லாம் இழந்துநிற்றல் காண்க. இத் தமிழ்நாட்டிற் செங்கோல் ஓச்சிய சேர சோழ பாண்டியர்கள் வேற்றரசரால் வெல்லப்படாத அத்துணை வலிமையுடையராய் ஐயாயிர ஆண்டுகளுக்குமேல் அரசு புரிந்தும், பின்னர் ஆரியர் மாயத்துள் அகப்பட்டு உயிர்க்கொலை வேள்விகள் வேட்டுச் சிவத்தை மறந்தமையினாலேதான் அவர்களும் இப்போது இல்லாதே போயினர். மாணிக்கவாசகருந் திருஞானசம்பந்தரும் புத்தர் சமணர்களைவென்று, சைவ சமயத்தை உயிர்பெற்று எழச் செய்தபின், ஆரியப்பார்ப்பனர் அதுவே வாயிலாகத் தமதுயர்வை நாட்டவுஞ் சிவத்தை மறைக்கவும் முயன்ற தீய முயற்சிக்கு ஒத்து நின்றமையினாலேயே சைவ மக்கள் தேவாரப் பதிகங்கள்

எண்ணிறந்தவற்றை இழந்து தமது பெருமையிலுங் குன்றிப் போனார்கள்! இங்ஙனமே தமிழையுஞ் சிவத்தையும் மறந்தமையால் தமிழர்கள் நாளடைவில் இழந்துபோன நூல்களும் எண்ணிறந்தன! நலங்களும் எண்ணிறந்தன! இவ்வளவுக்குந் தப்பிப் பிழைத்துத் தொல்காப்பியமுந் திருக்குறளும் ஏனைத் தமிழ்நூல்கள் சிலவும் இன்னும் யாம் காணக்கிடைத்திருப்பதை நினையுங்கால், இன்னுந் தமிழ் மக்களில் தக்கார் சிலர் உளரென்பதும், அதனால் எல்லாம் வல்ல சிவத்தினருள் தமிழர்க்குந் துணையாய் இன்னும் உதவுகின்றதென்பதும் புலனாம். ஆகவே, தமிழிலக்கண மறையாகிய தொல்காப்பியந், தன்காலத்து உடன் வழங்கிய தமிழ்மறைகள்போல் தக்கார்க்குள் அருகிய வழக்காயின்றி, தமிழ் நாடெங்கணும் பெருகிய வழக்காய் இருந்தமையினாலேதான், அஃது இன்றுகாறும் வழங்குகின்றதென ஓர்ந்து கொள்க. அதுகிடக்க.

'மறை' என்பது பருப்பொருளறிவினார்க்கு விளங்காத நுண்ணிய மறைபொருள்களை உணர்த்துதல் பற்றி அறிவு நூல்களுக்குப் பெயராக அமைக்கப் பட்டாற்போல, 'வேதம்' என்னுஞ் சொல்லுந் தமிழ்ச்சொல்லாயின் அதுவும் அத்தகையதொரு பொருளைத் தருதல் வேண்டுமாலெனின்; 'வேய்தல்' என்னுஞ் சொல் 'மூடுதல்' என்னும் பொருளை யுணர்த்துதல் பழைய நூல்களிற் காணப்படுகின்றது[1]; இக் காலத்தும் வீடு கூரைமூடுதலைக் 'கூரை வேய்தல்' என்ப. இவ் வேய்தல் என்னுஞ் சொல்லுக்கு முதனிலை 'வே' என்பதே யாகையால் அதனடியாய்ப் பிறந்த 'வேதம்' என்னுஞ் சொல் 'மூடுபொருள் உடையது' அல்லது 'மறைபொருள் உடையது' என்னும் பொருட்டா

---

1. புறப்பொருள்வெண்பாமாலை, கO, கக.

வதேயாம்.[1] ஆகவே, 'மறை' 'வேதம்' என்னுந் தமிழ்ச் சொற்க ளிரண்டும் ஒரு பொருள் குறித்த பல சொற்களா மென்க. இவ்வாற்றால், 'வேதம்' என்பது பழைய தமிழ்ச்

---

1. 'வேதம்' என்பது 'வே' என்னும் முதனிலையிற் பிறந்த தமிழ்ச் சொல்லாயின், அதற்குப் பகுபத இலக்கணம் யாது? என் றொருவர் எம்மை வினவினர். 'வே' என்பது பகுதி (முதனிலை), 'அம்' என்பது விகுதி (இறுதிநிலை), த் என்பது இடையே எழுத் துப்பேறு அல்லது விரித்தல். அற்றேல், 'வேய்தல்' என்பதில் முதனிலை 'வேய்' என நின்றாற்போல 'வேதம்' என்பதன் கண்ணும் 'வேய்தம்' என நிற்றல்வேண்டுமாலெனின்; அறியாது கூறினாய்: ஒரு முதனிலை ஒரு பொருளை யுணர்த்துங்கால் ஒரு வகையான எழுத்துப் பேறு பெற்றும், அதுவே வேறொரு பொருளை யுணர்த் துங்கால் வேறொரு வகையான எழுத்துப் பேறு பெற்றும் பல வகையாற் றிரிபெய்திப் பற்பல சொற்கள் பிறத்தற்கு இடனாய் நிற்கும். அங்ஙனம் ஒரு முதனிலை பலவேறு பொருளுடைய பல சொற்களைப் பிறப்பிக்குங்கால், தான் முதன்முதல் உணர்த்தும் பொருளும், பின்னர்ப் பலப்பல சொற்களில் இயைந்து நின்று உணர்த்தும்பொருளும் உவம உருவக வகையால் ஒன்றோடொன்று தொடர்புடையனவாயே யிருக்கும். இவ் இயல்புகளை 'வேதம்' என்னுஞ் சொல்லுக்கு முதனிலையான 'வே' என்பதினின்றே காட்டுதும். 'வே' என்னும் முதனிலைக்கு முதன்முதல் உண் டான பொருள் 'தீயிற்பட்டு அல்லது தீயின் சேர்க்கையால் ஒரு பொருள் வேகுதலே' யாகும். இப் பொருளை யுணர்த்துந் தமிழ்ச் சொற்களில் 'வேகுதல்' 'வேக்காடு' என்பவற்றின் முதனிலை ககர ஒற்றுப் பெற்று 'வேக்' என நிற்கும்; 'வேடை,' 'வேட்டல்' என்ப வற்றின் முதனிலை டகர ஒற்றுப் பெற்று 'வேட்' என நிற்கும்; 'வேதல்,' 'வேதி' 'வேது' என்பவற்றின் முதனிலை தகர ஒற்றுப் பெற்று 'வேத்' எனநிற்கும்; 'வேவு' என்பதன் முதனிலை வகர ஒற்றுப்பெற்று 'வேவ்' எனநிற்கும்; 'வேள்வி' என்பதன் முதனிலை ளகர ஒற்றுப்பெற்று 'வேள்' எனநிற்கும்; 'வேனல்,' 'வேனில்' என் பவற்றின் முதனிலை னகர ஒற்றுப்பெற்று 'வேன்' என நிற்கும். இனி, 'வே[2] என்னும் முதனிலை 'வெ' எனக்குறுகி அப் பொருள் படும் பல சொற்களைப் பிறப்பிக்குமிடத்தும் அங்ஙனமே பல்வேறு

சொல்லே யாதலும், அது பின்னர் ஆரியரால் எடுத்துத் தமது பழைய நூலுக்குப் பெயராக வழங்கப்பட்டமையுந் தெளிந்துகொள்க. அஃது யாங்ஙனம்? வடசொற்களே

ஒற்றெழுத்துக்களைப் பெற்று நிற்கும்; வெக்கை, வெச்சு, வெட்டை, வெண்டல், வெதுப்பு, வெந்திப்பு, வெந்தை, வெப்பம், வெம்பல், வெயில், வெய்து, வெவ்விது என்பவற்றின் முதனிலைகள் முறையே வெக், வெச், வெட், வெண், வெத், வெந், வெப், வெம், வெய், வெவ் எனப் பலவேறொற்றுக்கள் பெற்று நிற்றல் காண்க.

இனி, இவ் 'வே' என்னும் முதனிலை வேறு பொருள்களை யுணர்த்துமாறு காட்டுதும். ஒரு பொருளை வேவுவிக்குங்கால், அதனை ஒரு பாண்டத்தின் உள்ளே நீரிற்பெய்து, அப் பாண்டத்தின் வாயை ஒரு தட்டிட்டு மூடித் தீமேல் வைத்து வேவுவிக்கக் காண்கின்றோம். அவ் வொப்புமை பற்றி 'வே' என்னும் முதனிலை மூடுகின்ற அல்லது மறைக்கின்ற பொருள்களையும் இரண்டாவதாக உணர்த்தும்; இப் பொருளில் 'வேடு' என்பது மூடுசீலையினையும், 'வேதல்' என்பது வீடுகூரை மூடுதலையும், 'வேதம்' என்பது மூடு பொருளையுடைய நூலினையும், 'வேயுள்' என்பது மூடப்பட்ட வீட்டினையும், 'வேய்தல்' என்பது கூரைமேய்தலையும், 'வேலி, என்பது ஓரிடத்தைச் சுற்றிக் காவலாய் மறைப்பதையும், 'வேவு' என்பது மறைந்து நின்று செய்தியறியும் ஒற்றரையும் உணர்த்தாநிற்கும்; இச் சொற்களின் முதனிலைகளும் மேற்காட்டியவைகளைப் போலவே 'வேட்,' 'வேத்,' 'வேய்,' 'வேல்,' 'வேவ்' எனப் பலவேறு ஒற்றுக்கள் பெற்று நிற்றல் காண்க; அவ்வாறு பலவேறு ஒற்றுக்கள் பெற்றுநிற்பினும், அம் முதனிலைப் பொருள் அவையெல்லாவற்றினுள்ளும் ஊடுருவி நிற்றல் இனிது விளங்காநிற்கும். இங்ஙனமாக, 'வேதம்' என்னுஞ் சொல்லின் முதனிலை தமிழ்ச்சொற்கள் பலவற்றில் நின்று மூடுபொருளை யுணர்த்திநிற்கக் காண்டலானும், அவ்வாறது வடமொழிக்கண் நிற்பக் காணாமையானும், அச் சொல் தமிழ்ச்சொல்லே யாதல் தெளியப்படும். ஈண்டுக் காட்டிய இச் சொல்லாராய்ச்சியை இன்னும் விரிப்பிற்பெருகும். ஆதலால், யாம் இருபத்தைந் தாண்டுகட்குமுன் **ஞானசாகர** முதற்பதுமத்திலெழுதிய 'தமிழ் வடமொழியினின்று பிறந்ததாமா?' என்னுங் கட்டுரையில் இவ் வாராய்ச்சி முறையைக் கண்டுகொள்க.

தமிழில் வந்து வழங்கக் காண்டுமன்றித், தமிழ்ச் சொற்கள் அவ்வாறு வடமொழிக்கட் சென்று வழங்குதல் கண்டில மாலெனின்; இது மொழியாராய்ச்சி யில்லாதார் கூற்றும். இருக்குவேத காலந் தொட்டே பல்லாயிரந் தமிழ்ச் சொற்கள் வடமொழிக்கட் புகுந்து வழங்கலாயின. அவற்றுட் பலவற்றைத் 'தமிழ் வடமொழியினின்று பிறந்ததாமா?' என்னும் எமது கட்டுரையில் ஞானசாகர முதற்பதுமத்தில் நெடுநாட்கு முன்னரே எடுத்துக் காட்டி விளக்கியிருக்கின்றேம். அதுவேயுமன்றிப், 'பிரயோக விவேக' நூலாசிரியர் வடமொழியில் தமிழ்ச் சொற்கள் உண்டென்பதனை உடன்பட்டு அவற்றுட் சில காட்டுதலானும், இன்னோரன்ன மொழிநூ லாராய்ச்சியில் மிகச் சிறந்த அறிவினராய் விளங்கிய கால்ட்வெல் ஆசிரியர் வடமொழி இலத்தீன் கிரீக் முதலான பல மொழிகளிலும் புகுந்து வழங்கிய பன்னூறு தமிழ்ச்சொற்களை நன்கெடுத்துக் காட்டி விளக்குதலானும் எமதுரை யுண்மையாதல் கண்டுகொள்க. இதுகாறுங் கூறியது கொண்டு, 'வேதம்' என்னுஞ் சொல் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருள்களைக் கூறும் நான்கு தமிழ் வேதங்களையே உணர்த்தலும், அதனடியாகப் பிறந்த 'வேதியர்' என்னுந் தமிழ்ச் சொல் லும் அத் தமிழ்நான்மறைகளை யுணர்ந்த வேளாள அந்தணரையே குறித்தலும் நன்கு பெறப்படுதலால், திருஞானசம் பந்தப் பெருமான் தாம் அருளிச் செய்த திருவாக்கூர்த் தேவாரத் திருப்பதிகத்திற் குறிப்பிட்ட வேளாளரை ஆசிரியர் சேக்கிழார் 'வேதியர்' எனக் கூறியதில் ஏதும் மாறுபா டில்லையென உணர்க; ஆண்டுக் குறிப்பிடப் பட்ட 'வேதியர்' இக் காலத்துப் பொருந்தா வழக்குப் பற்றி 'ஆரியப் பார்ப்பனர்' என்று பொருள் பண்ணிக் கொண்ட எதிர்ப் பக்கத்தவர் கொள்கையே பெரிதும் பிழைபா

டுடைத்தாம் என்க. ஆரியப் பார்ப்பனரை ஈகையிற் சிறந்தாராகக் கூறுந் தமிழ்நூல் வடநூல்கள் யாண்டுங் காணப்படாமையின், ஈகையிற் சிறந்த மாட்சியை வேளாளர்மேல் வைத்துப் பாடிய திருஞானசம்பந்தப் பெருமானது திருவாக்கூர்ப் பதிகத்தை இரத்தற் றொழிலேயே கடனாக் கொண்ட ஆரியப் பார்ப்பனர்மேல் வைத்துரைத்தல் சேக்கிழார் திருவுள்ளக் கருத்தாகாதென் றொழிக.

அற்றேற், பழைய தமிழ்நூலாகிய 'திவாகரம்,' "ஆதி நூலென்பது வேதநூற் பெயரே" என்று ஓதிப், பின்னர் அதனை ஆரியவேதங்களாகிய இருக்கு முதலியவற்றின்மேல் வைத்துக் கூறுதல் என்னையெனின்; 'திவாகரம்' மிகப் பழமையான தமிழ்நூல் அன்று. அது கடைச்சங்ககாலத்து நூல்கட்கும், மாணிக்கவாசகப் பெருமான் காலத்திற்கும், 'பிருகற்பதி,' 'காத்தியாயநம்,' 'பராசரம்' முதலிய மிருதிநூல்களின் காலத்திற்கும், கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் உண்டான 'பிரமம்,' 'நாரதீயம்,' 'வாமநம்,' 'வராகம்,' 'பாகவதம்,' 'வைணவம்' முதலான புராணங்களின் காலத்திற்கும் பிற்பட்டதொன்றென்பதற்கு, அது பிற் சொல்லிய நூல்களை இறுதித் தொகுதியிற் குறிப்பிடுதலே சான்றாம். அஃது அன்னதாதலை 'மாணிக்கவாசகர்காலம்' என்னும் எமது நூலுள் விரித்து விளக்குதும், ஆண்டுக் கண்டுகொள்க.

இனித், திவாகரமுனிவராற் சிறப்பித்துரைக்கப்பட்ட 'அம்பற்சேந்தன்' என்னும் மன்னன் கடைச்சங்க காலத்தவன் என்றும், அதனால் திவாகரங் கடைச்சங்க காலத்தே இயற்றப்பட்ட தொன்றாம் என்றுங் கூறினாரும் உளர். அவர் கூற்றுப் பொருந்தாது. 'சேந்தன்' என்னும் அரசன் பெயர் கடைச்சங்ககாலத்து நூல்களில் யாண்டுங் காணப்

படவில்லை. 'அம்பர்கிழான் அருவந்தை' என்னும் ஓர் அரசன் பெயரும், அவன்மேற் பாடப்பட்ட செய்யுள் ஒன்றும் மட்டும் புறநானூற்றிற்[1] காணப்படுகின்றன. 'அம்பர்கிழான் அருவந்தை' என்னும் பெயர்க்குமேற் 'சேந்தன்' என்னும் பெயருஞ் சேர்ந்த தொடர்மொழி கடைச்சங்ககாலத்து நூல்களிற் காணப்படாமையின், 'அருவந்தை' என்னும் மன்னனே அச் சங்ககாலத்தவ னென்பது பெறப்படுமல்லது, சேந்தனும் அக் காலத்தவ னென்பது பெறப்படமாட்டாது. அற்றேல், "ஆடவர் திலகன் அம்பன் மன்னன், ஈடிசைத் தலைவன் அருவந்தைச் சேந்தன்" என்று திவாகரங் கூறுதல் என்னையெனின்; அம்பல் நகரை அரசாண்ட அருவந்தை என்னும் அரசன் கால்வழியில் வந்தோன் சேந்தன் என்பதே அதற்குப் பொருளாகலின் 'அருவந்தைச் சேந்தன்' என அஃது அவ் விருவரையும் ஒருங்குசேர்த்து ஓதுவதாயிற் றென்க. எனவே, அம்பல்நகரை ஆண்ட அருவந்தை என்பவன் வேறு, அவன் வழியில் வந்து பின்னர் அதனை ஆண்ட சேந்தன் என்பவன் வேறென்பதே துணியப்படுமாகலிற், சேந்தன் சங்ககாலத்தவன் அல்லனென்பதூஉம், அல்ல னாகவே அவன் காலத்ததாகிய 'திவாகரமும்' சங்ககாலத் தது அன்றென்பதூஉம் உடன் துணியப்படு மென்க.

அற்றேற், கடைச்சங்க காலத்தவளாகிய ஔவையாற் பாடப்பட்டவன் சேந்தன் என்பது போதர "ஔவை பாடிய அம்பற்கிழவன், தேன்றூர்ச் சேந்தன்" என்று திவாகரங் கூறுதல் என்னையெனின்; ஔவையென்னும் பெயர் கொண்ட பெண்பாற் புலவர் பலர் இருந்தனர். அவருட் சங்ககாலத்திருந்தவர் வேறு, சேரமான் பெருமாள் காலத்திருந்தவர் வேறு. சேரமான் பெருமாள் கைலைக்குச்

1. புறநானூறு, ருஅரு.

சென்ற காலையில் உடன்சென்ற ஒளவையார் பாடிய செய்யு ளொன்று தமிழ்நாவலர் சரிதையிற் காணப்படுதலானும்,

"தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகமென் றுணர்."

என்னும் ஒளவையார் செய்யுளிற் சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்த தேவாரங் குறிப்பிடப்படுதலானுங், கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரையிற் சுந்தரமூர்த்தி நாயனாரும் அவர் தோழரான சேரமான் பெருமாள் நாயனாரும் இருந்தமை மேலே காட்டப்பட்டமையின் அவர் அருளிச்செய்த தேவாரத்தைக் குறிப்பிட்ட ஒளவையார் அவ்வொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலன்றி அதற்கு முன்னிருந்தவராதல் செல்லாமையானுஞ், சங்ககாலத்து ஒளவைப் பாட்டுக்களின் தமிழ்நடையும் ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்த ஒளவைப் பாட்டுக்களின் தமிழ்நடையும் பெரிதும் வேறுபட்டு நிற்றலானும், முதல் ஒளவையாற் பாடப்பெற்ற அரசர்களின் காலங் கி. பி. முதல் நூற்றாண்டின் கண்ணதாயிருப்ப இரண்டாம் ஒளவையாற் பாடப் பெற்றார் காலங் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின்கட் படுதலானும், அம்பர்கிழான் அருவந்தைச் சேந்தனைப் பாடிய ஒளவையார் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்த வேறொருவரேயாவரென்று துணிந்துகொள்க. எனவே, அம்பற் சேந்தனைப் பாட்டுடைத் தலைமகனைக் கொண்ட 'திவாகரம்' கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலாதல் பத்தாம் நூற்றாண்டின் துவக்கத்திலாதல் இயற்றப் பட்டதாகல் வேண்டுமென்க. ஆகவே, தமிழ் வேதங்கள் மறைந்தபிற் பலநூற்றாண்டுகள் கழிந்து, ஆரியரும் ஆரியப் புரட்டும் மலிந்த பிற்காலத்தே இயற்றப்பட்டதாகிய

'திவாகரம்' ஆரிய வேதங்களை முதல்நூல் என்று உயர்த்துக் கூறுதல் ஒருவியப்பன்று; அதுபற்றி யாம் கூறியது பிழை படுதலும் இல்லையெனத் தெளிக.

ஆகவே, பண்டைக் காலத்திற் றமிழில் வழங்கிய நான் மறைகளே 'நால்வேதங்கள்' எனக் கூறப்பட்டனவென்ப தூஉம், அவ் வேதங்களைப் பயிலுதற்குங் கடவுள் வழிபாடு ஆற்றுதற்குமாக வேளாளரினின்றும் பிரித்து ஒரு தனி வகுப்பினராக வைக்கப்பட்ட தமிழ் அந்தணரே 'வேதியர்' என ஆசிரியர் சேக்கிழாராற் சொல்லப்பட்டனரல்லது அவர் ஆரியப் பார்ப்பனராதல்பற்றி அப் பெயராற் கூறப் பட்டனரென்பது பொருந்தாதாமென்பதூஉம், இங்ஙனங் கொள்ளாக்கால் திருவாக்கூரிலிருந்த அந் நன்மக்களை வேளாளரெனவே வெளிப்படையாகக் கூறிய திருஞான சம்பந்தப்பெருமான் திருமொழியொடு முரணிச் சேக்கிழார் கூற்று வழுவுடைத்தாய் முடியுமென்பதூஉம் நன்கு பெறப் படுதல் காண்க. இவ்வாறெல்லாம் பெறப்பட்டதன் முடிபாய், எவ்வாற்றானும் உயர்ந்த தமிழ் நாகரிக நன்மக்க ளாகிய வேளாளரைச் சூத்திரரென இழித்துக் கூறுதல் வேளாண்டலைவராகிய சேக்கிழார்க்கும் ஆசிரியர் தொல் காப்பியர் முதலான ஏனைத் தொல்லறிவாளர்க்குங் கருத்தன் றென்பதூஉம் இனிது விளங்குமென்க.

உ௨. மக்கட் பிறவியின் இழிபும் ஒப்பும்

இனி, வேளாளர் அல்லாத ஏனைப் பதினெண் வகுப்பிலுள்ள மக்களிற் கொலை புலை தவிர்ந்து கல்வியறிவு ஆற்றல்களினும் நாகரிகத்தினும் உயர்ந்து வருவாரை வேளாள வகுப்பினர் தம்மினத்திற் சேர்த்துக்கொள்ளலாமோ? என்று நிகழும் வினுவினையுஞ் சிறிது ஆராய்வாம். மக்களின் தோற்றத்தையும் அவர்தம் நாகரிக வளர்ச்சியையும் ஆராய்ந்துரைக்கும் உண்மை நூல்களை[1] நாம் பயின்றறியுங்கால், மிகவும் பழையதாகிய காலத்தில் மக்கள் எல்லாரும் விலங்கினத்தோடொத்த அறிவுஞ் செயலும் உடையராய்த் தினைத்துணையும் நாகரிகம் அற்ற நிலையில் இருந்து, பின்னர் அறிவு வளரவளரச் சிறிது சிறிதாக நாகரிகத்திலும் வளர்ந்து வரலாயினரென்னும் உண்மை நன்கு விளங்கும். இப்போதுங்கூடப் பிள்ளைப்பருவத்தில் இருக்கும் நாட்களில் எல்லா இனத்துப் பிள்ளைகளும் ஏறக்குறைய ஒத்த இயற்கையுடையராகவே காணப்படுகின்றனர்; பின்னர் வளருந்தோறுந் தாந்தாஞ் சார்ந்த முதுமக்களின் பழக்க வழக்கங்கள் பேச்சுகள் முதலியவற்றைத் தழுவி, அவற்றிற்கு ஏற்ற அறிவுஞ் செயலுந் தன்மைகளும் உடையராய்ப் பல்வேறு இனங்களாகப் பிரிபடுகின்றனர். மக்கள் எல்லாரும் புழைகள் ஒன்பதின் வாயிலாக வெளிவரும் மலங்களும் முடைநாற்றங்களும் உடையர்; பசியும் நீர் விடாயும் எல்லாரையும் வருத்துகின்றன; எல்லார்க்கும் நோயுந் துன்பமுங் கவலையும் நரை திரை மூப்புச் சாக்காடுகளும் உள்ளன; சிலநேரங்களில் நல்ல இயல்புகளுஞ் சில நேரங்களில் தீய இயல்புகளும் எல்லாரிடத்தும் நிகழ்கின்

1. See, for instance, Lord Avebury's Pre-historic Times or S. Laing's Human Origins.

றன. காலம் வந்துழி எல்லாரும் இவ்வூனுடம்பைவிட்டுச் செல்பவர்களே யல்லாமல் நிலையாக இங்கிருப்பவர் எவருமே இலர். எல்லாரும் ஒரு முழுமுதற் கடவுளாற் படைக்கப் பட்டு, அவனருளைப் பெறுதற்காக, இந் நிலவுலகமாகிய கல்விக்கழகத்தில் வந்து அதற்குரிய வழிவகைகளை ஆராய் பவர்களாகக் காணப்படுகின்றனரே யல்லாமல், இந்த ஊனுடம்பின் பொருட்டாகவே வாழ்பவராகக் காணப்பட வில்லை. ஆகவே, மக்கள் எல்லாரும் பிறப்பளவில் ஒத்த இயல்பினரே யல்லாமல் வேறெவ்வகையான ஏற்றத் தாழ்வும் உடையரல்லர். இவ்வுண்மை தெருட்டுதற்கே தெய்வப் புலமைத் திருவள்ளுவர்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்."

என்றும், நாலடியார் ஆசிரியர்,

"நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லை."

என்றுந், திருமூலநாயனார்,

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்."

என்றும் அருளிச் செய்வாராயினர்.

இங்ஙனமாக மக்களெல்லாரும் ஒத்த இயல்பினரா யிருக்க, அவருள் முதன்முதல் அறிவானும் முயற்சியானும் மிகுந்து, கொலை புலை முதலான கொடிய செயல்களை ஒழித்து, உழவுதொழிலால் உலகத்தை வளம்படுத்திய சிலரே முதன்முதல் நாகரிகத்திற் சிறந்த வேளாளராயினர்; அங்ஙனம் அவர்போற் சிறவாமல் அவ் அறிஞரின் ஏவல் வழிநின்ற ஏனையோர் அவரவர் தகுதிக்குந் தொழிலுக்கும் ஏற்பப் பதினெண்மராயினர். இதுவே மக்கள் பல்வேறு வகுப்பாய்ப் பிரிந்ததன் உண்மைவரலாறும்.

௨௩. தூயராவார் எல்லாம் வேளாளராதற்கு உரியர்

இனி, வேளாளர் அல்லாத ஏனையோரில் அறிவு ஆற்றல்களானுங் கொலை புலை தவிர்ந்த அருளொழுக்கத் தானுஞ் சிறந்து வருவாரை வேளாளர் தம்மினத்திற் சேர்த்து அவரோடு உண்ணல் கலத்தல்களைச் செய்தல், அவ் வாற்றால் அவர் தம்மினத்தையும் பெருக்கி, அருளறங் களையும் வளரச்செய்து, ஏனையோரையும் புனிதராக்குமாத லால், அஃது உலகத்திற்குப் பெருநன்மையைத் தந்து இறைவனது திருவுளக்குறிப்பை ஈடேற்றுஞ் செயற்கரிய செயலாகுமேயல்லால், அது வேறு எத்தகைய தீங்கும் விளைவியாது. ஏனை வகுப்பினரிற் சிறந்தாராய் உள்ளவரை வேளாளர் தம்மினத்திற் சேராமல் தாம் தனிநின்று கொண்டு 'நாங்கள் இருபது வீட்டுக்குள்ளேதான் கொள் வது கொடுப்பது' என்று வெறுஞ் செருக்குரை பகர்வதால் அவர்க்குவரும் ஏற்றஞ் சிறிதுமில்லை; இங்ஙனந் தனிநின்ற எத்தனையோ வேளாள வகுப்புகள் பிள்ளைகட்குப் பெண் கள் கிடையாமையாலும், பெண்கட்குப் பிள்ளைகள் கிடை யாமையாலும், இன்னும் பல பொருந்தாக் கட்டுப்பாடுக ளாலும் அகம்புழுங்கி நாளடைவில் மாய்ந்து போயின; இன்னும் எத்தனையோ மாய்ந்துவருகின்றன; பின்னும் பல மாயும் நிலைமையிலிருக்கின்றன. இத்தகைய போலிக் கட்டுப்பாடுகள் சிறிதும் இல்லாத கிறித்து சமயத்தவர் தொகை நாளுக்குநாட் பெருகி உலகத்தைக் கவர்ந்துவரு கின்றது. இதற்கு ஏற்றபரிசாக வேளாளருந் தாம் வைத் திருக்கும் பொருந்தாக் கட்டுப்பாடுகளை யொழித்து, ஏனை வகுப்பாரிற் புனிதராய் வருவாரைத் தம்முடன் சேர்த்துத் தம்மினத்தைப் பெருக்கி உலகில் அறத்தை வளர்த்தலே

செயற்பாலதாம். புனிதராய் வருவார் எத்தகைய இழி குலத்திற் பிறந்தவராயிருப்பினும், அவரெல்லாருஞ் சைவ சமயத்தவரோடு கலக்கப்பெறுதற்கும், அவரால் வணங்கப் பெறுதற்கும் உரியாரென்பதற்குப் பல்வேறு வகுப்பினராய அறுபத்துமூன்று நாயன்மாரும் அவர்தம் உண்மை வரலாற் றினைக் கூறுந் 'திருத்தொண்டர் புராணமுமே,' உறுபெருஞ் சான்றுமென்று தெளிக. பிறவியெடுத்தது அன்பு அருள் அறங்களில் ஓங்கி ஒருவர்க்கொருவர் உதவியாய் நின்று இறைவன் றிருவடிப் பேரின்பத்தைப் பெறுதற்கேயல் லாமல், நிலையில்லா ஊன் பிறவியின் உயர்வு தாழ்வுகளைச் செருக்குடன் பாராட்டி அறியாமையில் மாய்ந்தொழிதற்கு அன்று என்பதை வேளாளரும் பிறருந் தமது கருத்திற் பதித்து, எல்லாரும் ஒரு முழுமுதற் கடவுளாகிய தந்தைக்குப் புதல்வராதலை யுணர்ந்து, அதற்கேற்றவாறு இனிது ஒழுகி, அத் தந்தையின் வீடுபேற்றின்பப் பெருஞ் செல்வத்தை எய்துதற்கு முயலல்வேண்டும்.

உச. ஆரியச்சேர்க்கை தமிழர்க்கும் தமிழ்க்கும் ஆகாது

இதனோடு, தமிழ்மக்களின் முன்னேற்றத்திற்குப் பல வகையிலுந் தடையாய் நிற்கும் ஆரியப் பார்ப்பனர் தம்மை யணுகுதற்குந், தாம் அவர் சொல்லைக் கேட்டு நடத்தற்குந் தமிழர் எவருஞ் சிறிதும் இடந் தருதல் ஆகாது. தமிழ் நாட்டுத் திருமடங்களின் ஆசிரியர்களுங் குறுநில மன்னர் களும் (சமீந்தார்கள்), செல்வர்களுங், கற்றவர்களும், பிற ரும் இப்போது தம்முடைய சீருஞ் சிறப்பும் அறிவும் புகழும் இழந்து தமது மேனிலை குலைந்து சிறுமை எய்தி அல்லல் உழப்பதெல்லாம் ஆரியப் பார்ப்பனரைத் தம்

முடன் சேர்த்து அவர் சொல்வழி நடத்தலினாலேயாம். தமிழரிற் செல்வமுஞ் சிறப்பும் உடையார் இவரென்று கண்டால் ஆரியப் பார்ப்பனர் உடனே அவர்பாற் சென்று சூழ்ந்து அவர்க்கு இணங்கிய படியாகவெல்லாம் நடந்து, அவர்பாற் றாம் பெறவேண்டியனவெல்லாம் நயமாகப் பெற்றுக்கொண்டு, அவர் அச் செல்வமுஞ் சிறப்பும் இழத்தற்கு வேண்டும் வழிவகைகளெல்லாந் திறமையாகச் செய்து, முடிவில் அவர் வறியராகித் தாழ்வடைந்தபின் அவரைவிட்டு நீங்குவர்; தம்மாற் சிறுமையடைந்த அவரைப் பின்னர்த் திரும்பியும் பாரார்; அவரைக் காணநேர்ந்தால் அவரை அறியாதார்போல் அகன்று ஒளித்துப் போவர். இங்ஙனம், முன்னமே உயர்ந்து நிற்குந் தமிழ்ப் பெரியாரையுங் கரவாகக் கெடுத்துத் தாழ்த்தித், தாழ்ந்து கிடக்குந் தமிழரையும் உயரவொட்டாமற் பெருந்தடைகளை விளைத்துத் தமிழ்மக்களெல்லார்க்குந் தொடர்பாகத் தீது புரிந்துவரும் பார்ப்பனரை நஞ்சினுங் கொடியராக நினைந்து, அவர் எவ்வகையினுந் தம்பால் அணுகுதற்கு இடந்தராது விழிப்பாயிருத்தலே தமிழர் ஒவ்வொருவருங் கருத்தூன்றிக் கைக்கொள்ளற் பாலதாகிய முதற்பெருங் கடமையாம்.

இன்னும், ஆரியப் பார்ப்பனர் தமக்குரியதாகக் கருதிப் பெருமை பாராட்டிக்கொள்ளும் ஆரியமொழி பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னரே உலகவழக்கில் இன்றி இறந்து ஒழிந்தமை கண்டு, அதனைத் திரும்ப உயிர்ப்பிக்க எவ்வளவோ முயன்று பார்த்தும் அதுமுடியாமையின், மெல்ல மெல்லச் சமஸ்கிருதமொழிச் சொற்களைத் தமிழினுந், தமிழோடு இனமாகிய மலையாளம் தெலுங்கு கன்னடம் முதலாகிய மொழிகளினும் நுழைத்து, அவ்வாற்றால் அம்மொழிகளின் தனிச் சுவையினையும் ஆற்றலினையுங் கெடுத்து, அவற்றை வடமொழியுருவாக்கப் பெரிது

முயன்று, அம் முயற்சியில் அரைவாசிக்குமேல் தேர்ந்து விட்டார்கள்; தமிழ்மக்களைத் தவிர, மலையாளத்தாருந் தெலுங்கருங் கன்னடரும் எளிதிலே ஏமாறிவிட்டார்களாதலால், ஆரியப் பார்ப்பனர் அம்மொழிகளை முக்கால்வாசி வடமொழியுருவாக்கிவிட்டார்கள். பண்டுதொட்டுத் தமிழ் மக்கள் நாகரிகத்திற் சிறந்தாராய்த் தமது தமிழ்மொழியை நன்கு ஆராய்ந்து அதற்கு இலக்கண இலக்கிய வரம்புகட்டி அதனைப் போற்றித் தனித்து வழங்குதலின், ஆரியப் பார்ப்பனர் அதனை வடமொழியுருவாக்க எவ்வளவோ முயன்றும் அது கைகூடாமல், அதனைக் கெடுக்க இன்னும் எவ்வளவோ சூழ்ச்சிசெய்து வருகின்றார்கள். அவர்களின் கரவையுஞ் சூழ்ச்சியையும் அறியாத தமிழ்ப்புலவர் சிலர் அவர்தம் வலையிற் சிக்கிக்கொண்டு, தமிழைத் தனித்து வழங்கல் இயலாதென்றும், ஏராளமான வடசொற்களை அதன்கட் சேர்த்து வழங்கலே அதனை வளம்படுத்துவதாகுமென்றும் பொருந்தாவுரை கூறித் தனித் தமிழ் வளத்தைக் கெடுக்கப் பார்க்கின்றார்கள். தண்ணீரை 'ஜலம்' என்றும், தலைமுழுகுதலை 'ஸ்நாநம்' என்றும், உணவை 'ஆகாரம்' 'போஜநம்' என்றும், ஒளியைப் 'பிரகாசம்' என்றுஞ், சோற்றை 'அன்னம்' 'சாதம்' என்றும், பயனைப் 'பிரயோஜனம்' என்றும், வழிபாட்டைப் 'பூஜை' 'அநுஷ்டானம்' என்றும் இன்னும் இங்ஙனமாகப் பலப்பல வடசொற்களை இப்போதே நுழைத்து விட்டமையால் தண்ணீர் முதலான தமிழ்ச்சொல் வழக்கு வரவரக் குறைந்து வருகின்றது. இவ்வாறே தமிழ்ச்சொல் வழக்கு ஒவ்வொன்றாய் ஒழிந்துபோக, அவற்றிற்கு மாறாக வடசொற்களே வழங்குமானால் அப்புறந் தனித் தமிழ்மொழி என்பதே ஒன்று இல்லையாய் விடுமன்றோ? தமிழர்க்குள்ள பெருமையெல்லாம் அவர் தொன்றுதொட்டுத் தூய்தாக வழங்கிவருந்

தமிழ்மொழியினையே சார்ந்திருக்கின்றது. ஆனால், இப்போதுள்ள தமிழர்களோ அப் பெருமையினை யறியாராய்த், தண்ணீரைத் 'தண்ணீர்' என்றுஞ் சோற்றைச் 'சோறு' என்றுந் தமிழாற் சொல்வது தாழ்வென நினைந்து, அவற்றை 'ஜலம்,' 'சாதம்,' என்று வடசொல்லாற் கூறுதலே பெருமையெனக் கருதுகின்றார்கள். இங்ஙனங் கருதுவது தம்மைத்தாமே இழிவுபடுத்திக் கொள்வதாய் முடிவதை எண்ணிப் பார்க்கின்றார்களில்லை. தமக்குரிய 'தண்ணீர்,' 'சோறு' எனுந் தூய தமிழ்ச்சொற்கள் இழிந்தவைகளாய் இருப்பினல்லவோ, அவற்றை யொழித்து, வடசொற்களை யெடுத்து வழங்கல் வேண்டும். இளங்குழவிகளாய்ப் பால் பருகிய காலந்தொட்டு நாம் வழங்கிவந்த அத் தனித் தமிழ்ச் சொற்கள் எங்ஙனம் இழிந்தவைகளாகக் கூடும்? அவைகளை வழங்கிய நாம் இழிந்தவர்களாய் இருப்பினல்லவோ அவையும் இழிந்தனவாயிருக்கும். உலகத்திலுள்ள மற்ற மக்களெல்லாம் உண்ணச்சோறும் உடுக்கக்கூறையும் இன்றி, விலங்கினங்களைக் கொன்று உண்டுந், தழைகளை யுடுத்தும், ஊர் ஊராய் அலைந்து திரிந்த அத்துணைப் பழையகாலத்திலும், அறிவு முதிர்ச்சியுந் தாளாண்மையும் உடையராய் நிலத்தைத் திருத்திப் பல்வகை வளவிய உணவுப் பண்டங்களை விளைவித்து, நாடு நகரங்கள் வகுத்து, நாகரிகத்திற் சிறந்து திகழ்ந்த தமிழ்ச்சான்றோர் மரபில் வந்த நாம் இழிந்தோராதலும் நம் தனித்தமிழ்ச் சொற்கள் இழிந்தவையாதலும் யாங்ஙனம்? தாம் ஏதொரு நன் முயற்சியுஞ் செய்யாமலுஞ், செய்து பொருள் ஈட்டிப் பிறரைப் பாதுகாவாமலும், முயற்சி மிக்காரை யேமாற்றி அவர் தரும் பொருளைக் கொண்டு வயிறு கழுவுவாரல்லரோ இழிஞர்; அவர் பேசுஞ் சொற்களல்லவோ இழிந்தனவாகும். மேலும், வடமொழியானது எவரானும் பேசப்

படாமல் எத்தனையோ ஆயிர ஆண்டுகளுக்கு முன்னரே இறந்துபட்டதொன்று. நமது அருமைச் செந்தமிழ் மொழியோ பல்லாயிர ஆண்டுகளாக நடைபெற்றுத், தனது புத்திளமை குன்றாது இன்றும் உலவுவது. இங்ஙனம் வாழ்நாள் வரவரப் பெருகி வழங்குந் தமிழ்மொழி சிறந்ததோ? குறுகிய வாழ்க்கைத்தாய் முன்னரே இறந்தொழிந்த வடமொழி சிறந்ததோ? நடுநிலையுடையீர் ஆராய்ந்துரைமின்! எவ்வாற்றால் நோக்கினும், உயர்ந்ததாய் ஒளிரும் விழுமிய நம் செந்தமிழ்மொழிச் சொற்களை வழங்காமல், இறந்துபட்ட வடமொழிச் சொற்களை உயர்ந்தன வாய்ப் பிழைபடக் கருதி வழங்கும் பேதைமைச் செயலை அறவே ஒழிமின்கள்! உயர்ந்த பல கருத்துக்களையும், புது புதுப் பண்டங்களையும் வழங்குதற்கேற்ற தமிழ்ச் சொற்கள் ஏராளமாய் இருப்பவும், அவையில்லையெனக் கரைவாருரை கரவுரையாகல்வேண்டும், அல்லது அது பேதைமையே யாகல் வேண்டும். ஆதலால், தமிழ்மொழி கற்குந் தமிழ இளைஞர் ஒவ்வொருவரும், அவர் தமக்குத் தமிழ் கற்பிக்குந் தமிழாசிரியர் ஒவ்வொருவரும் வடமொழி முதலான பிற மொழிச் சொற்களைத் தமிழின்கண் வந்து நுழையாதபடி அறவே விலக்கி, இப்போது வழங்காமற் பழைய தமிழில் வழங்கிய சொற்களையே மீண்டும் எடுத்து வழங்கித் தமிழை வளம்படுத்துப் பாதுகாக்கக்கடவராக! வடமொழி முதலான பிறமொழிச் சொற்களைக் கலவாமல் எத்தகைய பொருளையுந் தனித்தமிழில் எழுதக்கூடும் என்பதற்கு, யாம் தனித்தமிழ் நடையில் எழுதியிருக்கும் இந் நூலும், 'மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்,' 'முல்லைப்பாட்டாராய்ச்சியுரை,' 'பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை' முதலான ஏனை எம்முடைய நூல்களுமே சான்றாம்.

இனி, மணவினை பிணவினை முதலியன நடாத்துங் காலங்களில் தமிழ்மக்களில் ஒவ்வொரு வகுப்பாருந் தத்தம் இனத்தவரிலிருந்தே அவற்றைச் செய்துவைத்தற்குச் சிலரை ஏற்படுத்தி, அவரைக்கொண்டு அவற்றை நடப்பித்துக் கொள்ளல் வேண்டும். இங்ஙனந் தத்தம் இனத் தவரிலேயே சிலரை ஆசிரியராக அமர்த்தி மேற்கூறிய வினைகளைச் செய்வித்தல் சோழநாடு பாண்டிநாட்டிலுள்ள சைவவேளாளரிற் பண்டுதொட்டு இன்றுகாறும் நடந்து வருகின்றது. தமிழர்கள் தாம் நடத்தும் மணவினை பிணவினைகளுக்கு ஆரியப் பார்ப்பனரை ஆசிரியராக வருவித்துவைத்து நடத்தல் பெருங் குற்றமாமென்று அறிவு நூல்களுங் கூறுகின்றன. ஆதலால், தமிழர் தம் வினைகளுக்கு ஆரியப் பார்ப்பனரை வருவித்தலை அறவே விட்டொழித்தல்வேண்டும்.

இனிப், பெரும்பாலுந் தமிழர்க்குரிய சிவபிரான் கோயில் பெருமாள் கோயில்களில் வழிபாடு ஆற்றுவோர் தொன்றுதொட்டுத் தமிழ் அந்தணர்களாகவே இருக்கின்றனராயினும், அவரும் ஆரியப் பார்ப்பனரோடு தம்மைச் சேர்த்துக் கொள்ளும் பொருட்டு ஆரிய வேதங்களையும் வடமொழியையும் பயன்படுத்துகிறார்கள். சிவபிரானுந் திருமாலும் பண்டுதொட்டுத் தமிழ் முது மக்களால் வணங்கப்பட்டு வந்த தமிழ்த் தெய்வங்களாகும். எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளே தந்தை வடிவிற் சிவபிரான் எனவுந், தாய் வடிவில் திருமால் எனவும் வைத்து வணங்கப்பட்டது. இவ்விருவரும் பிறவா தவர், இறவாதவர். இவ் இருதெய்வங்களையும் பழைய ஆரியர் சிறிதும் அறியார். இருக்குவேதத்தில் வணங்கப் பட்ட 'உருத்திரர்' தமக்கு மேற்பட்ட சிவபிரான் றன் திருவருளாணைவழி நின்று படைத்தல் காத்தல் அழித்தல்

என்னும் முத்தொழில்களைப் புரிபவர். இருக்குவேதத்தில் வணங்கப்பட்ட 'விஷ்ணு'வோ பகலவனே யல்லாமல், உலகங்களைப் படைத்துக் காக்கும் எல்லாம்வல்ல உலகன்னை யாகிய திருமால் அன்று. பிற்காலத்திற் றென்னாடு புகுந்த ஆரியப் பார்ப்பனரே ஆண்மைச் செயல்புரிந்த அரசரையும் பிறரையுந் திருமாலின் பல்வகைப் பிறவிகளாகக்கொண்டு பொய்ப் புராணகதைகளை வடமொழியில் வேண்டுமட்டுங் கட்டியெழுதித், திருமாலின் முழுமுதற் றன்மையைக் குறைத்துத், தமிழ் நன்மக்களைச் சைவர் வைணவர் என இருவேறு வகுப்பாக்கி, அவ் விருவருந் தத்தந் தெய்வமே தெய்வமெனக் கரைந்து, ஒருவரையொருவர் கைக்கப் பகைத்துப் போராடுதற்கு இடஞ் செய்தவர்கள். அது மட்டுமோ! தமிழர்கள் அத் தமிழ்த் தெய்வங்களைத் தாம் அமைத்த திருக்கோயில்களில் வைத்துத் தாமே வழிபட்டு வந்த முறைகளையும் அவர்கள் அடியோடு மாற்றிவிட்டார்கள். முற்காலத்தில் தமிழர்கள் திருக்கோயிலில் உள்ள திருவுருவங்களைத் தாமே தொட்டு நீராட்டிப் பூவிட்டு அகில் புகைத்துச் சூடங்கொளுத்தி வழிபட்டு வந்தார்கள். இஞ்ஞான்றும் வடநாட்டிலுள்ளவர்கள் அங்குள்ள திருக்கோயில்களில் தாமே திருவுருவங்களைத் தொட்டு வழிபாடு ஆற்றுதலை நேரே பார்க்கலாம். இக்காலத்தில் இறைவனைத் தொட்டு வழிபாடு ஆற்றுதற்கு உரியவராக ஏற்படுத்தப் பட்டிருக்குந் தமிழந்தணர்கள் அக்காலத்தில் திருக்கோயில்களை ஒழுங்காக வைத்தற்கும், வணங்க வருவார்க்குக் கூட இருந்து உதவிபுரிதற்கும் நிறுத்தப்பட்டவர்களேயல்லாமல் வேறில்லை. ஆரியப் பார்ப்பனர் வந்தபின், இத் தமிழந்தணர் அவருடன் உறவுகொண்டு, தம்மவர் அல்லாத பிறர் எவரும் இறைவனுருவத்தைத் தொடலாகாதெனக் கட்டுப்பாடு செய்து, இதற்குமுன் தாம் தமிழிலுள்ள அருட்பாக்களைச்

சொல்லி வழிபாடாற்றி வந்த இனிய முறையைக் கைவிட்டு, வடமொழியிலேயே எல்லா வழுத்துரைகளுஞ் சொல்லி ஆரவாரம் புரிவாராயினர். தமிழர்கள் வரவரக் கல்வி கேள்வி களிற் குறைந்து, ஆரியப் பார்ப்பனர் மயக்குரைகளில் வீழ்ந்துவிட்டமையின், தமிழர்களாகிய தமக்குரிய திருக் கோயில்களில் ஆரியரும் அவரோ டுறவுகொண்ட தமிழந்த ணருஞ் செய்த இச் சூழ்ச்சிகளையும் புரட்டுகளையும் ஒரு சிறிதும் அறியாமல், அவற்றிற்கெல்லாம் இணங்கி நடப்பா ராயினர்!

ஈதொன்றோ! ஆரியர் தாம் கொணர்ந்த சிறுதெய்வப் பாட்டுகளாகிய ஆரியவேதங்களைத் திருக்கோயில்களில் முதற்கண் ஓதல்வேண்டுமெனவும், அவை ஓதி முடிந்தபின் ஆரியப் பார்ப்பனராகிய தம்மை அனுப்பிவிட்டுப், பின்னர்த் தான் தமிழ்வேதங்கள் ஓதல்வேண்டுமெனவும் ஒரு பொருந்தாக் கட்டுப்பாடும் விரகாகச் செய்துவிட்டார்கள். பிறந்து இறந்து உழலுஞ் சிறு தெய்வங்கண்மேல் ஆரியர் பாடின ஆரியவேதப் பாட்டுகளை, எல்லாம் வல்ல முழு முதற் கடவுளாகிய சிவபிரான் திருமால் முன்னிலையிற் பாடுதலைப்போற் குற்றமாவது பிறிதில்லை. ஊர்காவற் சேவகர்மேற் பாடிய புகழுரைகளை நாடாளும் அரசன் முன்னிலையிற் கொண்டுபோய்ப் பாடினால், அவ் அரசன் அவற்றைக் கேட்டு மகிழ்வனோ? அவ் அடாதசெயலைத் தன் முன்னிலையிற் செய்த குறும்பரைச் சினந்து ஒறுத்துச் சிறையிடுவனல்லனோ? அங்ஙனமே ஆரியச் சிறுதெய்வப் பாட்டுகளை, உலகங்களுக்கெல்லாந் தலைவராகிய அம்மை யப்பர் முன்னிலையிற் பாடும் ஆரியரையும் அவர்க்கு இணங்கி யொழுகுந் தமிழரையும் இறைவன் ஒறுத்தல் திண்ணமா மென்க.

இப் பரதநாடெங்கணும் உள்ள சிவபிரான் திருமால் திருக்கோயில்களுக்கு வந்திருக்குஞ் சீருஞ் சிறப்பு மெல்லாந், தேவாரந் திருவாசகம் ஆழ்வார் பாடல்கள் என்னுந் தெய்வச் செந்தமிழ் மறைகளில் அவை பாடப்பெற்றிருப்ப தனால் வந்தனவே யாம். இச் செந்தமிழ் மறைகளிற் பாராட்டப்படாத கோயில்களை எவருங் கொண்டாட மாட்டார். இத் திருக்கோயில்களின் சிறப்புக்கு ஏதுவான இத் தமிழ்மறைகளோ சிவபிரான் திருமாலைத் தவிர வேறு தெய்வங்களைப் பாடுவனவும் அல்ல; இத் தமிழ்மறைச் செம்பாடல்களைக் கேட்டலிலேதான் இறைவனுக்குப் பெரு விருப்பு. இந் நறுந்தமிழ்ப்பாடல்களில் தன் திருவுளம் ஈடுபட்டதனாலன்றோ இறைவன் மாணிக்கவாசகர், திரு ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் நால்வர்க்கும் எளியனாய்த் தோன்றித், தான் ஒருவன் உளன் என்பதை உலகம் எளிதில் அறிந்து உய்யச் செயற்கருஞ் செயல்க ளெல்லாஞ் செய்தருளினன்?

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும் எலும்புபெண் உருவாக்
கண்டதும் மறைக்கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்."

என்று வினவிய பெரியார், தமிழாலன்றி வடமொழியைக் கொண்டு இறைவன் திருவட்பேற்றிற்கு உரியரானாரும், இறைவனொருவன் உளனென்பதைப் பல புதுமைகளால் நாட்டினாரும் இல்லையென்பதைத் தெளிவாக அறிவுறுத்து கின்றனர் அல்லரோ? தென்னாடு வடநாடுகளில் உள்ள சிவபிரான் திருமால் திருக்கோயில்களில் ஒன்றையேனுங் குறிப்பிடாத வடமொழி வேதங்களை அத் திருக் கோயில் களில் ஓதுவது குற்றமன்றோ? முழுமுதற் கடவுளாகிய அம்மையப்பரை மட்டும் வழுத்தாமல் எண்ணிறந்த சிறு

தெய்வங்களாகிய பேய்களைக் கொண்டாடும் ஆரியவேதங் களை அம் முழுமுதற் கடவுள் முன்னிலையில் ஓதுதலைவிடக் குற்றமான பேதைமைச் செருக்குச் செயல் பிறிதுண்டோ? இறைவன் திருவருளாணை கடவாத மெய் யன்பரான நம் முதுதமிழ்ச் சான்றோரின் வழித்தோன்றிய தமிழ்மக்காள்! விழித்தெழுமின்கள்! இதுகாறும் ஆரிய மாயத்திற் சிக்குண்டு அறிவு மயங்கித் தூங்கிய பெருந் தூக்கத்தி னின்றும் விழித்தெழுமின்கள்! இனி ஆரியமொழியையும் ஆரிய வேதங்களையும் நம் திருக்கோயில்களில் ஓதுதலை அறவேயொழித்துத், தேவார திருவாசக நாலாயிரப் பாடல் களையே ஓதி, அவற்றிலுள்ள மந்திரங்களாலேயே அம்மை யப்பர்க்கு எல்லா வழிபாடுகளும் ஆற்றி, இறைவன் திருவ ருளால் இம்மை மறுமைப் பயன்களை ஒருங்கெய்துவீர் களாக! ஓம்.

மறைத்திரு. மறைமலையடிகளார்

எழுதிய

வேளாளர் நாகரிகம்

முற்றும்.

மறைமலையடிகளாரின்

தனிச் செந்தமிழ் நூல்கள்

	ரூ.	காசு
சாகுந்தல நாடகம்		
விளக்க உரைக் குறிப்புக்களுடன்	3	25
கலிக்காக்கட்டு	4	25
சாகுந்தல நாடக ஆராய்ச்சி	2	50
இளைஞர்க்கான இன்றமிழ்	2	50
கலிக்காக்கட்டு	3	25
மரணத்தின்பின் மனிதர் நிலை	3	25
தமிழர் மதம்	5	00
திருவொற்றிமுருகர் மும்மணிக்கோவையுரை	5	00
சிந்தனைக் கட்டுரைகள்	2	00
முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை	2	00
பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்	2	50
சைவசித்தாந்த ஞானபோதம்	4	00
குமுதவல்லி நாகநாட்டரசி	4	00
தொலைவிலுணர்தல்	4	00
சோமசுந்தரக் காஞ்சியாக்கம்	1	50
பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை	2	00
கலிக்காக்கட்டு	2	75
கோகிலாம்பாள் கடிதங்கள் ,,	6	00
சிறுவர்க்கான செந்தமிழ்	2	25
கலிக்காக்கட்டு	3	00
முற்காலபிற்காலத் தமிழ்ப் புலவோர்	2	25
சோமசுந்தர நாயகர் வரலாறு	1	50
வேளாளர் நாகரிகம்	2	00